827

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செய்தவெளியீடு

தொகுதி - 23, எண் - 2

7 ஏப்ரல் - 1992

V,2:1,31'N92
N92.23.2
164175

வெளியீடு 27-1-1993 Issued 27-1-1993

827/93

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 7, 1992-தொகுதி 23 எண். 2
Tuesday, the 7th April 1992 - Volume 23 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] Price Rs. 3-00

உள்ளடக்கம்.

7-4-1992.


பக்கங்கள்

1. வினாக்கள்— விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் 213—247

2. கவன ஈர்ப்பு—
(அ) திருச்சி மாவட்டம், புத்தனாம்பட்டியிலுள்ள நேரு நினைவுக் கல்லூரி ஆசிரியர்கள், அலுவலர்களுக்கு சம்பளம் வழங்கப் பெறாதது குறித்து. 247— 251
(ஆ) பவானிசாகர் மின் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட்டு அப்பகுதி விளை நிலங்களைப் பாதுகாக்க வேண்டியது குறித்து. 251—254

3. அறிக்கைகள் அளித்தல்—
(அ) பொதுக் கணக்குக் குழு 254—255
(ஆ) பொது நிறுவனங்கள் குழு 255
(இ) அரசு உறுதிமொழிக் குழு 255

4. காவிரி பிரச்சினை குறித்து நடுவர்மன்றம் அளித்துள்ள தீர்ப்பின்படி கர்நாடக அரசும் மத்திய அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து. 256— 257

5. மானியக் கோரிக்கைகள், 1992–93 விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி). 257—327

கோரிக்கை எண். 26—கைத்தறியும் துணித்தொழிலும்.

மாண்புமிகு திரு.இ. மதுசூதனன் 257—258, 301—326
திரு. வி. தண்டாயுதபாணி 258—262
திரு. வெ. பழனிசாமி 262—270
திரு. வே. தம்புசாமி 271— 275
திரு. ஆ. செல்லதுரை 275—278
திரு. சோ. பாலகிருஷ்ணன் 278—284
திரு. கே. ஜனார்தனன் 284— 287
திரு. எஸ்.எம். துரை 287—293
திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் 294—296
திரு. எஸ்.ஆர். ஜெயராமன் 297—301

விதி 110-ன் கீழ் கல்வியமைச்சரின் அறிக்கை—
பாடப் புத்தகங்கள் பயன்படுத்தப்படாமல் அதிக அளவில் தேங்கிக் கிடப்பதாக 5-4-1992 ஆம் நாளைய இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்துள்ள தவறான செய்தி குறித்து. 270—271

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 327—328

164975
சென்னை-600 009

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 25, பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு 2023
1992 ஏப்ரல் 7, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்''

செய்கிறவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தோடு பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும்.

### 1. வினாக்கள்— விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 475, திரு.சோ இராசாராமன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர். உறுப்பினர் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திருமதி ரமணி நல்லதம்பி கேட்கிறார்கள்.

475—

### Auditing the accounts of legal Aid and Advisory Board.

*2507—THIRU. S. RAJARAMAN:
Will the Hon. the Minister for Law be pleased to state :—

(a) Whether the Legal Aid and Advisory Board accounts are audited by the Local Fund Audit ; and

(b) The details thereof for the last two years?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உள்ளாட்சி நிதிக்கணக்கு ஆராய்வாளரால் தரப்பட்ட 1989–90-ஆம் ஆண்டு கணக்குகள் தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தணிக்கை மறுப்புகளுக்கான பதில்கள் மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் செயற்குழுவில் ஒப்புதல் பெற்று அனுப்பப்பட்டுள்ளது. 1990–91-ஆம் ஆண்டுக்

கணக்குகள் தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ள தணிக்கை மறுப்புகளுக்கான பதில்கள், தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் அடுத்த செயற்குழு கூட்டத்தில் ஒப்புதல் பெற்றபின் உள்ளாட்சி நிதிக்கணக்கு ஆராய்வாளருக்கு அனுப்பப்படும்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட உதவி எந்தெந்த வகைகளில், எப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தினுடைய 39 (ஏ) பிரிவின்படி இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. 'Justice for all' எல்லோருக்கும் நீதி, ஏழை எளிய மக்கள் உட்பட, மிக சாமானியருக்கும் நீதி கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசியல் சட்டம் இந்த உரிமையை வழங்கி இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 92 இலட்சம் ரூபாயை போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நல்கி. இதனை 'Effective implementation' நல்ல வகையிலே ஏழையெளிய மக்களுக்கும், குறிப்பாக சிறைச்சாலைகளில் இருக்கிற 'Undertrials' அந்த கைதிகளுக்கும் அதைப் போல பெண்களுக்கும், நலிந்தவர்களுக்கும் இந்த வசதிகள் மூலமாக, 92 இலட்சம் ரூபாய் மூலமாக, இன்றைக்கு நீதி இந்த ஆட்சியில் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவில் பயன்பெறுவோர் பெரும்பாலும் ஏழைகளாக இருக்கிறார்கள். அதைப்போல பணவசதி படைத்தவர்களும் சட்ட உதவி முகாமில் பயன்பெறுகிறார்கள். அதற்கு ஏதேனும் விதிவிலக்கு கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த உணர்விற்கேற்ப சில குறைபாடுகளும் இந்த அமைப்பில் இன்றைக்கு உண்டு. எனவே, இந்த அமைப்பில் சில மாறுதல்களைக் கொண்டு வர அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது. குறிப்பாக 'Restructuring the Legal Aid Board' இன்றைக்கு சட்ட ஆலோசனைக் குழுவை சீர்திருத்தி,





திருத்தியமைப்பது, இரண்டாவது 'Streamlining the Procedures' அதனுடைய நடவடிக்கைகளை முறைப்படுத்துவது. மூன்றாவது 'Effective administrative control of government over this Legal Aid Board.' அரசுக்கும் இந்த போர்டுக்கும் இடையே ஒரு இடைவெளி இருக்கிறது. அதை தூர்த்து அரசினுடைய நேரடி பார்வை, நெருக்கமான பார்வை, அதன்தொடர்பில் வைத்து, ஏழைகளுக்கு நீதி வழங்குகிற மூன்று வகைகளில் 1. Restructuring the Legal Aid Board. 2. Streamlining the procedures. 3. Effective administrative control of Government over this Legal Aid Board. என்ற வகைகளில் திருத்தியமைக்கப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறை தவிர்க்கப்படும் என்று மனதார கருதுகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்ற மொழி, மாவட்ட நீதிமன்றம் வரை தமிழாக இன்றையதினம் இருந்து வருகிறது. தண்டிக்கப் பட்ட கைதிகள் மேல் முறையீடு செய்து, அந்த மேல் முறையீட்டிலே, கீழ்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப் படுகின்ற நிலையில், மேல் முறையீடு என்கிற பெயரில் உச்சநீதி மன்றத்திற்குச் செல்கிறார்கள். இன்றையதினம் அவர்கள் இலவச சட்ட ஆய்வு குழுவினுடைய உதவியை நாடினால், அங்கே மொழி பெயர்ப்பு செய்வதற்கான வசதி டெல்லியிலே கிடையாது, அங்கே பல ஆண்டுகள் அது தேங்கி போய்விடுகிறது. தண்டனை காலம் முடிகின்ற வரையில் கூட மொழி பெயர்ப்பு செய்யப் படாத காரணத்தாலே, அவைகள் அங்கே எடுத்துக் கொள்ளப் படுவதில்லை. எனவே, மேல்முறையீடு செய்கின்ற வழக்குகளில் மாவட்ட நீதி மன்றம் அளித்த தீர்ப்பு, இங்கே பதிவு செய்யப் பட்ட சாட்சியங்கள் அனைத்தையும், இந்தக் குழு இங்கேயே மொழி மாற்றம் செய்து, அனுப்புவதற்கு உதவி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன ஆலோசனை போற்றுதலுக்குரிய, தேவையான ஆலோசனை, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே தற்போது இல்லை. அருள்கூர்ந்து, அவர் தனிக்கேள்வி அவசியம் போட்டால், விரைவில் நிச்சயமாக முழுமையாக பதிலைச் சொல்லி, அதன்மூலம் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 476 திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர். 476—

நில அளவை மேம்பாட்டுத் திட்டம்.

* 3963— திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தில் பல தவறுகள் நடந்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை சரிசெய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பொது மக்களின் நியாயமான குறைபாடுகள் உடனடியாக களையப்பட வேண்டும் என்பதில் அரசு அக்கறை கொண்டு, அதன் அடிப்படையில் அரசு மட்டத்திலும் துறைத் தலைவர்கள் மட்டத்திலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது.

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1924-க்குப் பிறகு, 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கவேண்டிய நில அளவை, 1956-லே நடக்காததால், 1984-லே நில அளவை மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரிலே நடத்தப்பட்டது. நில அளவை செய்தவர்கள், விவசாயிகளின் அறியாமை மற்றும் போட்டிப் பொறாமைகளைப் பயன்படுத்தி, பல இடங்களில், ஒருவருடைய நிலத்தை இன்னொருவர் பெயருக்கு பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இது சம்பந்தமான வழக்குகள் ஏராளமாக சிவில் நீதிமன்றங்களிலே நடக்கின்றன. பாட்டன் பூட்டன் காலத்திலிருந்து பட்டா மாறாமல் இருந்த நிலங்களுக்கு உண்மையான உரிமையாளர்கள் மீது பட்டா மாற்றிக் கொடுக்க நடத்தப்பட்ட நில அளவை அனேகமாக அந்த நோக்கத்தையே முறியடித்திருக்கிறது. பல தீமைகளை ஏற்படுத்திவிட்டன. எனவே, நில அளவு நடத்தப்பட்டதை அரசு ரத்து செய்யுமா அல்லது புதிதாக நில ஆய்வாளர்களை வைத்து தவறுகளைச் சரி செய்தாவது கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபடி, 50 ஆண்டுகளுக்குப் பிறகு, நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் இம் மாநிலத்தில் 1979-ல் தான் ஆரம்பித்தது.





அது 1987-லே முடிந்தது. இந்தத் திட்டத்தினுடைய குறிக்கோள் விவசாயிகள், தங்கள் நில உரிமைகளை எளிதில் அறிந்துகொள்ளவும், கூட்டுப் பட்டாக்களை தனிப் பட்டாவாக மாற்றவும், சிட்டா போன்ற கிராமக் கணக்குகள், நில உரிமையாளர்களின் பெயர்கள் சரிவர குறிப்பிடுவது, நிலத்தில் மாற்றத்திற்குரிய சரியான கிராமக் கணக்குகள் பதிவு செய்தல் ஆகியவற்றை முக்கியமான குறிக்கோளாகக் கொண்டு, இந்தத் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வந்தது. தீவிர விசாரணைக்குப் பின்பு தான். ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி, சில குறைபாடுகள் அரசினுடைய கவனத்திற்கு வந்தது. பொதுமக்களின் நியாயமான குறைபாடுகளை உடனடியாகக் களையவும், சரிபார்க்கவும், நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. அதற்காக இன்றைக்கு இந்த அரசு ஒவ்வொரு ரெவின்யூ பிர்க்கா, வருவாய் உள் வட்டத்தில், குறைந்தது 5 கிராமங்களிலாவது ஆய்வை செய்து, அந்த ஆய்வை சரி செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி ஆய்வு செய்கிறபோது, 5 கிராமங்களை ஆய்வு செய்கிறபோது, அதிலே வருகின்ற குறைபாடுகளை எண்ணி, குறைபாடுகள் குறைவாக இருந்தால், சம்பந்தப்பட்ட வருவாய் வட்ட ஆட்சித் தலைவர்களே அதைச் சரி செய்துகொள்வார்கள். வருகிற குறைபாடுகள் அதிகமாக இருந்தால், அதற்கு ஏற்றவாறு தனி அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

முற்பகல் 9-40

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அளவைக் கட்டணம் வசூலிக்கப்படுவதிலே நியாயத்திற்குப் புறம்பாக நடந்துள்ளது. 1923 ஆம் ஆண்டைய நில அளவை மற்றும் எல்லைகள் சட்டம் செக்ஷன் 8-ன்படி 'டிமாண்டு நோட்டீஸ்' கொடுத்து, சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று உள்ளது. அளவு கோலை நடப்பட்ட எல்லைக் கல்லுக்கு மட்டுமே கட்டணம் வசூலிக்க வேண்டும். ஆனால் வருவாய்த்துறை அதிகாரிகள் நஞ்சை நிலத்திற்கு ஒரு கட்டணமும், புஞ்சை நிலத்திற்கு ஒரு கட்டணமும் விதித்துள்ளார்கள். அதிலேயும் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபாடு உள்ளது. உதாரணத்திற்கு தஞ்சை மாவட்டத்திலே . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, நீங்கள் நாள்தோறும் இப்படியே செய்கிறீர்கள். துணைக் கேள்விதான் கேட்கவேண்டும். முக்கியமானது என்ற காரணத்தினால் ரொம்பச் சுருக்கமாகக் கேள்வி கேட்கவேண்டும். ஆனால் நீங்கள் விரிவாகப் பேசபபேச அமைச்சருடைய பதிலும் விரிவாகப் போய்க் கொண்டே இருக்கிறது. நீங்கள் கேட்கின்ற அனைத்திற்கும்

அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இது தொடர்புடையதாக உங்களுடைய துணைக் கேள்வியை மட்டும் எழுப்பினால் அமைச்சரும் அதற்குரிய பதிலை உண்டு அல்லது இல்லை என்று சொல்லச் சரியாக இருக்கும். எனவே கேள்வியை முடியுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: உறுப்பினர்கள் எப்படி கேள்வி கேட்டாலும் அதற்கு, எந்த அளவிற்குச் சுருக்கமாகச் சொல்லமுடியுமோ அந்த அளவிற்குச் சொல்வேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அவர் கேட்டு விடுகிறாரே, நீங்கள் விரிவாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

திரு. நா. சா. பழனிசாமி: தஞ்சை மாவட்டத்தில், ரூ. 11.20 ஒரு எக்டேருக்கு விதித்துள்ளார்கள். அதையே தென்னாற்காடு மாவட்டத்தில் நஞ்சை நிலத்திற்கு ரூ. 23 என்றும் புஞ்சை நிலத்திற்கு ரூ. 15.35 என்றும் நிர்ணயித்துள்ளார்கள். அத்தோடு, 31-12-83-லே அளவைக் கணக்கை முடித்துக் கொடுத்தால், 100 சதம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, நீங்கள் உங்களால் முடிந்தால் கேள்வியாகக் கேளுங்கள். இல்லாவிட்டால் மானியக் கோரிக்கையில் பேசிக்கொள்ளுங்கள். நேரத்தை வீணடிக்காதீர்கள்.

திரு. நா. சா. பழனிசாமி: 1-4-84-க்குப் பின் கணக்கு ஒப்படைத்திருந்தால் 300 சத சர்சார்ஜ் விதித்துள்ளார்கள். இப்படி முறைகேடான அளவை நிலத்திற்கு மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டணத்தை அரசு திருப்பி விவசாயிகளுக்குக் கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்விக்கு நீங்கள் இவ்வளவு நேரம் பேசி இருக்கவேண்டியதே இல்லை. மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சர்வே அண்டு பவுண்டரீஸ் ஆக்ட் 1923-ன்படி முறையாகத்தான் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. எங்காவது தவறு நடந்தது என்று குறிப்பிட்டால் அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். தேவைப்பட்டால், திருப்பிக் கொடுப்பதற்கும் அரசு தயங்காது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தினுடைய நோக்கம் சரியாக நிறைவேறவில்லை. எலலா இடங்களிலும் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. ஆகவே இந்தத் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, புதிய ஒரு திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு ஆவண செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தை ரத்து செய்வது என்பதும் அதைச் சரி செய்வது என்பதும் வேறு. புதிய திட்டம் என்றால், அந்தத் திட்டத்திற்கு புதியதாக திட்டம் போடுவது, இந்தத் திட்டம் என்பது வேறு. நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தை என்றைக்கும் ரத்து செய்யமுடியாது. ஆகவே இதில் இருக்கின்ற குறைபாடுகளை நீக்குவதற்காகத்தான் நான் முதலிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஒரு ரெவின்யூ பிர்க்காவில், உள் வட்டத்தில், 5 கிராமங்களில் இருக்கின்ற குறைபாடுகளைக் கண்டுபிடித்து, குறைபாடுகளுடைய தன்மைக்கு ஏற்றவாறு அதிகமான குறைபாடுகள் இருந்தால், தனி அதிகாரி நியமிக்கப்படுவார். குறைபாடுகள் குறைவாக இருந்தால் அந்த வருவாய் வட்ட ஆட்சியாளரே சரி செய்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த நில அளவை மேம்பாட்டுத் திட்டமானது, மக்களுக்குப் பயன்படக்கூடிய திட்டம்தான். இருந்தாலும் கூட, இப்போது 'ஏ' 'பி',யினுடைய நிலங்கள் 'அட்ஜாயினிங் லேண்டிலே' இருக்கிறது என்று வைத்துக்கொண்டால் 'ஏ' நிலத்தை 'பி',க்கு பட்டா கொடுத்து விட்டார்கள். அப்படி 'பி'-க்கு பட்டா போட்டுக் கொடுத்த உடனே அதை சம்பந்தப்பட்ட ரெவின்யூ அதிகாரிகளை அணுகி இப்படி போட்டுவிட்டார்களே, இதை மாற்றிக் கொடுங்கள் என்று கேட்டால், அவர்கள் 'அசால்ட்டாகப்' போட்டு விடுகிறார்கள். அப்பேற்பட்ட நிலைமை எங்கெங்கு இருக்கிறதோ, அவர்களைக் கோர்ட்டிற்குப் போக விடாமல் அதை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும். ஏனென்றால் 'ஏ' நிலத்தை 'ஏ'வே உழுதுகொண்டு, விவசாயம் செய்து வருகிறான். எனவே அந்தப் பட்டாவை கேன்சல் செய்வதோடு, யார் யார் இப்படி மாற்றிக் கொடுத்தார்களோ, அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கு [illegible]சியிலை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: இதிலே தவறு நேர்ந்திருக்கிறது என்பதை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இங்கே கேள்வி கேட்பதற்கு முன்னாலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எங்கெங்கே தவறு இருக்கிறதோ, அந்தத் தவறை நிச்சயமாக இந்த அரசு சரி செய்யும் என்பதை உறுதியாகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 477, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

477—

வெல்லத்திற்கு கொள்முதல் வரியைக் குறைத்தல்

*5914— திரு. சி. ஞானசேகரன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விவசாய விளைபொருளான வெல்லத்திற்கு இப்போதுள்ள 6 சதவீதம் கொள்முதல் வரியை (Purchase Tax) 4 சதவீதம் அளவிற்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே வேலூர், சேலம், மதுரை, ஈரோடு போன்ற பகுதிகளில்தான் வெல்ல வியாபாரம் ஓகோ என்று நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால் சர்க்கரை ஆலைக்கு இன்று கரும்பை அனுப்பமுடியாதவர்கள் சர்க்கரை ஆலையே இல்லாத இடங்களில் இருக்கக் கூடிய விவசாயிகள் இந்த வெல்ல வியாபாரம் செய்கின்றபோது 6 பர்சென்ட் பர்சேஸ் டாக்ஸ் போடப்பட்டு, அது அந்த விவசாயிகளுடைய தலையில்தான் விடிகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்று மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களிலே வெல்லத்திற்கு எப்படி பர்சேஸ் டாக்ஸ் இல்லையோ, அது போன்ற ஒரு நிலையினை தமிழகத்திற்குக் கொண்டுவருவாரா என்று அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்ச்சேஸ் டாக்ஸ் என்று சொன்னார்கள். விவசாயிகள் வாங்குவது இல்லை. வாங்குவது மற்றவர்கள் தான். விவசாயிகள் மீது அது போகாது.

முற்பகல் 9-45

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பர்ச்சேஸ் டாக்ஸ் என்று போட்டால் வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து வெல்லத்தை வாங்குகிற போது, அதைக் குறைத்து தான் வாங்குகிறார்கள். ஆகவே அது மறைமுகமாக விவசாயிகளுடைய தலையில்தான் விழுகிறது என்ற காரணத்தினால், 6 பெர்சன்டிலிருந்து குறைந்த பட்சம் 3 பெர்சென்ட் அல்லது 4 பெர்சென்ட் ஆக குறைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் குறைப்பதனால் இருக்கிற குறைபாடு நீங்காது. வாங்குகிறவர்கள் தான் கண்டிப்பாக வரி கொடுக்க வேண்டுமென்று கண்டிப்பாக நடைமுறைப்படுத்தலாமே ஒழிய அதைக் குறைக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 478, திரு. செ. ஆறுமுகம், மாண்புமிகு கல்வியமைச்சர்.

478—

நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

*3752—திரு. செ. ஆறுமுகம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வானூர் தொகுதியில் வானூர் கிராமம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இந்த கல்வியாண்டிலேயே தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. ஆறுமுகம்: பெரிய பேறுபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் கல்வி வளர்ச்சி அடைவதற்காக....

[1992 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இருக்கிற பேரே போதும் தனியாக இனி வேறு வேண்டியதில்லை.

திரு செ. ஆறுமுகம்: தமிழக மக்கள் உண்மையான கல்வி வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக புரட்சிகரமான புதிய திட்டங்களை இன்றைய தினம் அறிவித்திருக்கிற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் வானூர் தனித் தொகுதியில், வானூர் கிராம நடுநிலைப் பள்ளியினை உயர் நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கு 5 ஆண்டுகளுக்கு முன்னால் அரசுக்கு முன் தொகையாக ரூ. 22,500 கட்டப்பட்டுள்ளது. வளர்ச்சியற்ற எங்கள் தனித் தொகுதியை கவனத்தில் கொண்டு வானூர் கிராம நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து இப்படி பணம் கட்டி கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அரசு நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப ஆண்டுதோறும் உயர்நிலைப் பள்ளிகளை தந்து வருகிறது. அந்த முறையில் இந்த ஆண்டு இப்போது நடந்துக் கொண்டிருக்கிற ஆண்டிற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுவிட்டன. இனி 1993–94 ஆம் ஆண்டிற்கான கருத்துருக்கள் பெறப்பட வேண்டும். அப்போது வானூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த கருத்துருக்கள் பெறப்பட்டால், உயர்நிலைப் பள்ளிகள் துவங்குவதற்கு அமைக்கப்பட்ட உயர் மட்ட குழுவின் பரிசீலனைக்குப் பின், அக்குழு பரிந்துரை செய்தபின் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைநகரமாகிய வானூரைச் சுற்றி 20 கிராமங்கள் உள்ளன. அங்குள்ள கிராமப்புற மாணவ மாணவிகள் உயர்நிலை கல்வி பெறவும் பல ஆண்டுகளுக்கு முன்னால் அரசு விதிமுறைப்படி முன்பணம் செலுத்தப்பட்டுவிட்ட காரணத்தாலும் இந்த நிதி ஆண்டிலேயே வானூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப் போல இப்படி பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அரசின் நிதி ஆதாரங்களைப் பொறுத்துத்தான் முடிவு செய்ய வேண்டிய நிலையும், தேவைக்கு ஏற்ப முடிவு செய்ய வேண்டிய நிலையும் இருக்கிற காரணத்தால் அதற்கு கருத்து அனுப்பப்பட வேண்டும்.



1992 ஏப்ரல் 7]

இந்த ஆண்டுக்கு அனுப்பப்பட வேண்டும். அந்தக் கருத்துருவை அதற்கென அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு பரிசீலிக்கும். அந்தக்குழு பரிசீலித்து பரிந்துரை செய்தால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண் 479 திருமதி வி. ஜி. மணிமேகலை மாண்புமிகு கல்வி அமைச்சர்.

479—

அறிவொளி இயக்கச் செயலாக்கம்.

* 4526—திருமதி வி. ஜி. மணிமேகலை ;

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

அறிவொளி இயக்கம் தமிழ்நாடு முழுவதும் தீவிரமாகச் செயலாற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். அறிவொளி இயக்கம் தமிழ்நாடு முழுவதும் தீவிரமாக 1991–92, 1992–93 மற்றும் 1993-94 ஆகிய நிதியாண்டுகளில் மூன்று கட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

திருமதி வி. ஜி. மணிமேகலை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவொளி இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடும் இளைஞர்களுக்கு அரசு எந்தவகையில் உதவி செய்கிறது, அவர்களுக்கு ஜாப் செக்கியூரிட்டி தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.50

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைக்கு அவர்களை அறிவொளி இயக்கத்திலே பயன்படுத்திக் கொள்ளும்.

திருமதி வி. ஜி. மணிமேகலை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைத் தரவேண்டும் என்பதிலே குறிப்பாக இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்திலே அவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவொளி இயக்கத்திற்கு தற்காலிகமாக பயன்படுத்திக் கொள்ளும் என்று கூறியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் அவர்களுடைய நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று இந்த நேரத்திலே உங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஒரு துணைக் கேள்வி போதும். ஏற்கெனவே ஒரு துணைக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள்.

[1992 ஏப்ரல் 7

திருமதி வி. ஜி. மணிமேகலை; இதை ஏன் கூறுகிறேன் என்றால் என்னுடைய அருப்புக்கோட்டை தொகுதியிலே திருச்சுழி ஒன்றியத்திலே உள்ள மண்டப சாலையிலே அறிவொளி இயக்கத்திலே தீவிரமாக ஈடுபடும் இளைஞர்கள் பால் சொசைட்டி நடத்தி வருகின்றனர். அதை தனியாக அரசு உதவியுடன் நடந்து கொண்டு இருக்கும் பால் சொசைட்டியுடன் சேர்ந்து செய்கின்ற வகையிலே இவர்கள் கேட்கும்போது மெர்ஜ் பண்ணச் சொல்லி எத்தனையோ முறை அந்த இளைஞர்கள்-பட்டதாரிகள் கேட்டும் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு எந்த வகையிலாவது ஒரு ஜாப் செக்யூரிட்டியைச் செய்து கொடுத்தால் அவர்களுக்கு ஊக்கமாக இருக்கும். அறிவொளி இயக்கம் சிறந்த முறையிலே வளர்வதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நோத்திலே உங்கள் மூலமாக தெரிவித்துக் கொண்டு அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அறிவொளி இயக்கம் வெற்றி பெறுவதற்காக இதற்காக முன்வருகின்ற இளைஞர்களை, நண்பர்களை எல்லாம் பயன்படுத்திக்கொண்டு இந்த முழுஅளவிற்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் ஆக்குகின்ற முயற்சியை வெற்றி பெறச் செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதில் இளைஞர்கள் கலந்து கொண்டு பணியாற்றுகிறார்கள். அவர்கள் அரசிடம் வேறு காரியத்திற்காக வருகின்றபோது இவர்களை எல்லாம் தேர்ந்தெடுக்கின்ற அந்தத்துறையினைச் சார்ந்தவர்கள் கவனத்திலே எடுத்துக்கொண்டு அவர்களுக்கு வாய்ப்பை அளிப்பது என்பது ஒரு நல்ல நடைமுறைதான். அதை மற்ற துறைகளிலே சொல்லி அதை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே அறிவொளி இயக்க அமைப்பாளரிடம் நான் பேசிக்கொண்டிருந்தபோது ஃபீல்டு ஸ்டாப் அதாவது களத்திலே இறங்கி வேலை செய்கின்ற களப்பணியாளர் கிடைப்பது மிகவும் சங்கடமாக இருக்கிறது என்று சொன்னார். அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையிலே ஊக்கம் அளித்தால்தான் அந்த களப்பணியாளர்கள் இந்தப் பணிக்கு ஆர்வமாக வருவார்கள் என்று சொன்னார்கள். எனவே வேலை வாய்ப்பு வருகின்றபோது வேலை வாய்ப்புக்கு வருகின்ற மற்றவர்களோடு இவர்களுக்கு 5 மதிப்பெண்கள் கூட வழங்குவதற்கு அரசு முன் வந்தால் இந்த வாலண்டரிசர்வீஸ் என்கிற இந்த சேவைக்கு மாணவர்கள் முன்வருவார்கள். அதுசம்பந்தமாக அரசு ஏதாவது ஆணை பிறப்பிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 7]

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; கல்வித் துறையின் சார்பாக அறிவொளி இயக்கம் பற்றி அது வெற்றி பெறுவதற்கான அந்த நிலைமைகளைப் பற்றி கேள்விகளைக் கேட்டால் பதில் சொல்ல இயலும். மற்ற துறைகளிலே வேலை வாய்ப்புகள் பற்றி எவ்விடத்திலே கேட்டால் இப்போது எந்தவிதமான பதிலையும் சொல்ல முடியாது என்பதற்காகத்தான் நான் சுற்றி வளைத்து பேசிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி: பேரவைத் தலைவர் அவர்களே, அறிவொளி இயக்கத்திலே தேச விரோத சக்திகள் புகுந்து அதிலே பேசுகின்றபோது தேசிய கொடியைக் கிழித்து அதைத பொங்கல் செய்து சாப்பிடுவது என்று பேசியவர்கள் மீது எல்லாம் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவொளி இயக்கத்தை கல்வித்துறையோடு சேர்த்து நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அறிவொளி இயக்கத்தை கல்வித் துறை தான் எடுத்து நடத்திக் கொண்டிருக்கிறது. அதனாலே தான் என்னிடத்திலே இப்போது கேள்வி கேட்டு நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். இதிலே வாலண்டீர்ஸ் அதாவது சேவா மனப்பான்மையோடு பலரும் இதிலே ஈடுபட்டால்தான் இந்த இயக்கம் வெற்றிபெறும் என்ற காரணத்தினால் அப்படிப்பட்டவர்களை நாம் ஈடுபடுத்துகிறோம். அதிலே கொஞ்சம் தீவிரமாக இருக்கிறவர்கள் இதிலே சேர்ந்து பணியாற்றுகிறார்கள். நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் சேவை செய்ய விரும்புகிறவர்கள் இதிலே பணியாற்றுகிறார்கள். சில சமயங்களிலே இதுபோன்ற தப்பான மனிதர்களும் இடம்பெற்றுவிடக்கூடும். ஆகவே, அவர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட புகார்கள் வந்தால் அதற்கான நடவடிக்கையை அரசு நிச்சயம் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்

திரு. ஜெ. பாலகங்காதரன் : பேரவைத் தலைவர் அவர்களே அறிவொளி இயக்கமானது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குறிப்பிட்ட காலமே மட்டும் நடத்த அனுமதிக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட தொகை மட்டுமே கொடுக்கப்படுகிறது. அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் மாவட்டத்தில் உள்ள அனைத்து நபர்களையும் கல்வி கற்க வைக்க முடியுமா என்றால் முடியாது எனவே ஒரு சில ஆண்டுகளில் கூட்டித்தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 7

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுதப் படிக்கத் தெரியாதவர் களுடைய எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவுதான் இருக் கிறது. ஆகவேதான் அதற்கு ஏற்றபடி ஒரு திட்டத்தைத் தீட்டி நாம் அதைச் செயல்படுத்துகிறோம். திட்டம் நிறை வேறியதற்குப் பிறகு அதிலே மிச்சம் மீதி இருப்பார்களே யானால் அதைப்பற்றித் தனியாக ஆலோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, அறிவொளி இயக்கத்தில் முழுக்க முழுக்க அரசியல்வாதிகள் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? என்னுடைய பகுதியிலே மாவட்ட நிர்வாகியாக இருக்கின்றவர் 1989 தேர்தலிலே எனக்கு எதிராக சீஃப்ஏஜெண்டாக இருந்தவர் என்பது அரசுக்குத் தெரியுமா? எனக்கு எதிராக சீஃப் ஏஜெண் டாக ஒரு கட்சிக்காக உட்கார்ந்து வேலை செய்தவரை நீங்கள் எங்கள் மாவட்டத்திலே அறிவொளி இயக்கத்திற்கு தலைவராகப் போட்டிருக்கிறீர்கள். அந்த ஆள் அந்தக் கட்சியைச் சார்ந்த வர்களைப் போட்டுக் கொண்டிருக்கிறார். இத்தகைய புகார் வந்தால் மாவட்டத்தில் இருக்கின்றவர்களையும் அதற்கு இணை யாக உள்ளவர்களையும், அந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர் ளையும் மாற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 9.55

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் யார் ஆர்வத்தோடு வந்து வேலை செய்ய முன்வருகிறார்களோ அவர்களுக்கு நாம் இடம் தருகிறோம். அதிலே வருகின்றவர்களில் பார்த்து நாம் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறோம். அரசியல்வாதிகள் என்றாலே தப்பான மனிதர்கள், அவர்கள் தவறு தான் செய் வார்கள் என்பதைப் போல மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி இருந்தது என்பதை நான் பார்த்து அதற்காக வருத்தப் படுகிறேன். அரசியல்வாதிகள் பொது வாழ்வில் இருப்பவர்கள், பொதுமக்களுக்கு பாடுபடுகின்றவர்கள். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மக்களுக்காக பாடுபடுகின்றவர்கள் என்ற அடிப்படையில் தான் நாம் அரசியல்வாதிகளைப் பார்க்கின்றோம். அதிலே சிலர் தவறு செய்கின்றபோது அவர்களை நீக்குவது அல்லது அவர்களைத் தடுப்பது என்பதற் கான போதுமான அதிகாரமும் அரசுக்கு இருக்கிறது.



1992 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிவொளி இயக்கத்தில் நாட்டுப் பற்றும், தேசப் பற்றும், சமுதாயப் பார்வையும் உள்ளவர்கள்தான் மிகுந்த ஆர்வத்தோடு இந்தப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக் கிறார்கள். குறிப்பாக அவர்களைப் பொறுத்த வரையில் இன்னும் கூட இதில் ஓய்வு பெற்று இருக்கிற ஆசிரியர்களைக் கூட இணைத்து இந்த இயக்கத்தை விரிவுப்படுத்தினால் இன்னும் செம்மையாக நடைபெறும். ஆகவே, இப்படிப்பட்ட இயக்கத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு மாண்புமிகு உறிப்பினர்கள் ஆதரவு கொடுக்கவேண்டுமே தவிர அவர்களை களங்கப்படுத்து கின்ற வகையில் பேசினோம் என்று சொன்னால் நிச்சயமாக இப்படிப்பட்ட ஒரு உணர்வு குறையும், ஆகவே, இது ஒரு நல்ல ஆரோக்கியமானதல்ல... (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது யாரும் களங்கப் படுத்தவில்லை. பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் சொன்னார்கள். நான் அதற்கு ஒரு விளக்கத்தைத் தந்து அதைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். ஆகவே, வருகின்றவர்களைப் பயன்படுத்திக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 480. திரு. தே. ஜனார்தனன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

480 வளவனூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்.

* 1811—திரு. தே. ஜனார்தனன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வளவனூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தே. ஜனார்தனன் இருக்கையில் இல்லை.

[1992 ஏப்ரல் 7

வினா எண் 420— திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

420 திருத்தணி வட்ட மருத்துவ மனையில் விபத்துப்பிரிவு.

* 3796 — திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருத்தணி வட்ட மருத்துவமனையிலுள்ள விபத்து பிரிவு இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக இயங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருத்தணி அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு 17-5-83ல் ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி வட்ட மருத்துவ மனையில் உள்ள அவசர விபத்துப் பிரிவு முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்களால் துவக்கப்பட்டு சிறப்பான கட்டிடங்கள் கொடுக்கப்பட்டு இருந்தன. ஆனால் தற்போது அந்த விபத்துப் பிரிவு செயல் படாது அந்த விபத்துப் பிரிவிற்கான கட்டிடத்தை வேறு பணிக்கு ஈடுபடுத்தி வருகிறார்கள். குறிப்பாக அந்த விபத்துப் பிரிவுக்குக் கொடுக்கப்பட்ட மொபைல் எக்ஸ்ரே பிரிவும், மொபைல் கருவியும் இன்றைய தினம் அந்த வட்ட மருத்துவ மனையில் சரியான முறையில் பயன்படுத்தப்படுவது இல்லை என்ற ஒரு குறை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, தமிழகத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரமும், தமிழக மக்களு டைய காவல் தெய்வமுமாக இருந்து கொண்டிருக்கிற எங்கள் இதய தெய்வம், தமிழக நிரந்தர முதல்வர் புனிததத்தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் இந்தக் குறையைக் களைவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் சட்டமன்ற உறுப்பினர் அவர் களுமே நேரில் அந்த மருத்துவமனையைச் சென்று பார்த்தோம்.



1992 ஏப்ரல் 7]

அந்த மருத்துவமனையில் அந்த சிகிச்சைப் பிரிவு இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அதில் பத்து படுக்கைகள் இருக் கின்றன. அந்த பத்து படுக்கைகளும் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன. கட்டிடத்தில் சில குறைபாடுகளோ அல்லது வேறு இடத்திற்கு அல்லது வேறு பணிக்கு மாற்றப்பட்டு இருக்கிறதா என்பதைப் பற்றி நான் கேட்டு அதற்கான நட வடிக்கை எடுக்கிறேன். அதற்காக ஒதுக்கப்பட்ட கருவிகள் முறையாக பயன்படுத்தப்படுகிறதா இல்லையா என்பதைப் பற்றியும் கேட்டு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அந்தப் பிரிவு இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 481, திரு. தேனி பன்னீர் செல்வம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. கே. தவசி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

வனத்துறைக்குச் சொந்தமான காடுகளில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கல்.

481—

*4024—திரு. தேனி. பன்னீர்செல்வம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கம்பம், கூடலூர், லோயர்கேம்ப் மலை அடிவாரம், கடமலைக்குண்டு மற்றும் மயிலாடும்பாறை ஒன்றிய மலைப் பகுதிகளிலுள்ள அரசு காடுகளிலும் வனத்துறைக்குச் சொந்த மான காடுகளிலும் பல ஆண்டுகாலமாக குடியிருந்தும், விவசாயம் செய்தும் வருவோர்க்கு அந்தந்த நிலங்களை பட்டா செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

1980-ம் ஆண்டு வனப்பாதுகாப்பு சட்டப்படி, மைய அரசின் இசைவின்றி வனநிலங்களை வனமற்ற உபயோகத்திற்கு வழங்க இயலாது. மற்றும் இந்த வனப்பகுதி பெரியார் வைகை நீர்ப் பிடிப்பு பகுதியில் உள்ளதால் பட்டா வழங்க இயலாது.

(முற்பகல் 10-00)

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதிகளில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பாக குடியேறிய வர்கள் இன்னும் பட்டா வாங்காத நிலையிலே இருக்கிறார்கள். அதேபோல, கல்லுப்பட்டியிலிருந்து முத்தாலம்பாறை வரை மாண்புமிகு பேரவைத் தலைவருடைய ஊருக்கும் எங்களுக்கும் உள்ள தொடர்புள்ள ரோட்டை கடந்த 1980-ஆம் ஆண்டு

நில ஆர்ஜிதம் செய்தும் இன்னும் ரோடுகள் போடப்படாத நிலையில் பாரஸ்டினுடைய இடையூறு இருக்கிறது. எனவே, இதை நிவர்த்தி செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் பகுதியிலேயிருந்த, வனத்துறைக்கு சொந்தமான நிலங்களை, 5 ஆயிரம் ஹெக்டேர் நிலங்களை அங்கே இருக்கின்ற பல்வேறு எஸ்டேட் முதலாளிகள் ஆக்கிரமிப்பு செய்திருந்தார்கள். வனத் துறை உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அந்த ஆக்கிரமிப்பு அனைத்தும் இப்போது அகற்றப்பட்டு இருக்கிறது. இப்போது அங்கே சர்வ கட்சிக் கூட்டங்களைக் கூட்டி, 8–3–1992 அன்று, அந்த ஆக்கிரமிப்புகளை, நாம் அகற்றியதை மீண்டும், அங்கே சென்று ஆக்கிரமிப்பு செய்வோம் என்று சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே கூட்டம் கூட்டி பேசியதாகச் சொல்கிறார்கள். அதை மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு நம்முடைய வனத்துறை அலுவலர் அவர்கள் கொண்டு சென்றிருக்கிறார்கள். சர்வ கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே நிறைந்து இருக்கின்ற காரணத்தால், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, எல்லா மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய தமிழகத்தில்தான் குறைந்த வனப்பகுதி இருக்கின்ற காரணத்தால், இதுபோன்ற வனப்பகுதிகளிலே ஆக்கிரமிப்பு செய்கின்றவர்களை அகற்றுகின்ற போது, அருள் கூர்ந்து, உங்களுடைய ஒத்துழைப்பை அவர்களுக்கு நல்காமல், இந்த அரசுக்கு உங்களுடைய ஆதரவை நல்கிட வேண்டுமென்று ஒரு வேண்டுகோளாக இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 482, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்.

482—

கன்னியாகுமரியில் விமான இறங்குதளம்

*4672—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் விமான இறங்குதளம் அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் விமான இறங்குதளம் அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்ய அவசியமென்று கருதவில்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி இந்தியாவிலுள்ள ஒரு சிறந்த சுற்றுலா மையம். வடநாட்டிலிருந்து ஏராளமான சுற்றுலா பயணிகளும், வி.ஐ.பி.களும் அங்கே வருகிறார்கள். குமரி மாவட்டத்திற்கு விமானம் மூலம் வருகை தருகின்றவர்கள் ஒன்று, 90 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திருவனந்தபுரத்திற்கோ அல்லது 250 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மதுரைக்கோ தான் வரவேண்டியிருக்கிறது. எனவே, ஒரு வாயுதூத் விமானம் போக்குவரத்தையாவது அரசு அமைக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்திய விமான நிறுவனமும் வாயுதூத் கம்பெனியும் கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்த தளம் அமைப்பதற்கு முன் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடம் சுற்றுலாத்தலம் என்பது நம்முடைய அரசுக்கு நினைவிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையில் நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தூத்துக்குடியிலிலேயே விமான தளம் மிக விரைவிலே திறக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், கன்னியாகுமரியில் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

483—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 483

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்,

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

*1248—திரு. என்.ஆர். ராஜேந்திரன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காட்டுமன்னார்கோயில் அருகில் முட்டம் கிராமத்திலிருந்தும் மயிலாடுதுறை அருகிலுள்ள மணல்மேடு கிராமத்தின் வழியாகவும் கொள்ளிடம் ஆற்றைக் கடக்க ஆற்றின் குறுக்கே போக்குவரத்துப் பேருந்துகள் செல்லும் அளவிற்கு பாலம் ஒன்று கட்டப்படுமா?

(ஆ) நிதிப் பற்றாக்குறை இருப்பின், தரைப் பாலமாவது கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

<u>திரு. என். ஆர். ராஜேந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தின் அவசியம் குறித்து நானும் மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு. அபுல் ஹசன் அவர்களும் இந்தச் சட்டமன்றத்திலே பெரிய விரிவுரை ஆற்றியிருக்கிறோம். இருந்தும், மாபெரும் திட்டங்களுக்கெல்லாம் ஒப்புதல் அளித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் 'இல்லை' என்ற பதில் எங்களுக்கு வருத்தத்தை அளிக்கிறது. வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் எடுத்துச் செல்லக் கூடிய திட்டத்திற்கு தயாரிக்கப்பட்ட சிமெண்ட் குழாய்கள், ரோடு ஓரங்களிலே உள்ளதால், இப்போது அவைகள் வீடுகளாகவும் மற்ற இடங்களிலே அவசிய மற்றும் கிடக்கின்றன இந்தக் குழாய்களை எடுத்து அருகே ஒரு தரைப்பாலம் அமைப்பதன் மூலம், போக்குவரத்து செல்ல வழி ஏற்படும். இதனால் மிச்சப்படுகின்ற 6,7 லிட்டர் எரி பொருளை அந்தப் பேருந்து உரிமையாளர்களிடமிருந்து கட்டண மாக 10 ரூபாய் வசூலிப்பதன் மூலம், பாலம் அமைப்பதற்கு ஆகும் செலவை நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்றும் தெரிவித்துக் கொண்டு, இதைப் பரிசீலிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-02

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ உயர்மட்டப் பாலம் கட்டுவது என்றால் பத்து கோடி ரூபாய் செலவாகும்; தரை மட்டப் பாலம் கட்டுவது என்றால் மூன்று கோடி ரூபாய் செலவாகும். ஆகவே, அதற்கு அருகாமையிலேயே பத்து கிலோ மீட்டர் அருகாமையிலேயே பெரம்பலூர்—மானாமதுரை சாலையில் திருமானூர் அருகே ஓர் உயர்மட்டப் பாலம் இருக்கின்றது. அதற்குப் பின்னால் கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையிலே அணைக்கரைக்கு அருகே ஒரு இருவழி உயர் மட்டப் பாலம் இருக்கின்றது. இந்த மூட்டம் சாலைக்கும் மணல்மேடு சாலைக்கும் இடையில் குறுக்கிடுகின்ற இந்தக் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப் படுகின்ற பாலம் எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. ஆகவே, இதனுடைய விலை விகிதப் பட்டியல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே தற்போது இதை எடுத்துச் செய்ய இயலாது என்று அரசு கருதுகிறது.





<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 484, திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

484—

## முல்லி முனையில் புயல் காப்பகம்.

*2108—திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முல்லிமுனையில் புயல் காப்பகம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விரைவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

<u>திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இந்தக் கட்டிடம் கட்டுவது எப்போது என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் புயல் பாதுகாப்பு இல்லங்களைக் கட்டுவதற்காக ஏற்கனவே வத்திராயிருப்பு, கீழையூர், முல்லி முனை ஆகிய ஊர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதற்குப் பின்னாலே, வத்திராயிருப்பு பகுதியை ஆய்வு செய்கின்ற நேரத்திலே, வத்திராயிருப்பை ஒட்டி இன்றைக்குக் கடலோரப் பகுதி இல்லாதிருந்த காரணத்தினாலே அதை நீக்கி விட்டு வேறு ஒரு ஊரைத் தேர்வு செய்ய வேண்டுமென்று நில நிர்வாக ஆணையரிடத்திலே இன்றைக்கு அரசு கேட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அதற்கான ஒரு மாற்று இடம் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே அந்த இடத்தோடு சேர்த்து, மூன்றும் ஒரே ஆணையின் கீழ் வெளியிடப்பட்ட காரணத்தினாலே, அந்த மூன்று இடங்களையும் ஒரே நேரத்திலே எடுத்துச் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அந்த உரிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கீழையூர், முல்லிமுனையையும் சேர்த்து இந்த மூன்று இடங்களிலும் புயல் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 485 திரு. இரா. நடேசன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

485—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் சாலை அமைத்தல்.

* 3511—திரு. இரா. நடேசன் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் வட்டம் பள்ளிப் பொத்தையிலிருந்து தோவாளை கூட்டம் மூக்கூடல் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்ய பணிகளின் மொத்த மதிப்பீடு ஒரு கோடியே இருபத்தாறு இலட்சத்து ஐம்பது ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு நன்றி. இந்த ஆண்டிலேயே அந்த வேலை துவக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழே எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலத்திலே 35 கோடி ரூபாயை மத்திய அரசின் அனுமதியோடு இந்தத் திட்டங்களுக்காக நாங்கள் கொடுக்க வேண்டுமென்று இன்றைக்கு இந்தத் திட்டத்தையும் அதிலே சேர்த்திருக்கிறோம். ஆகவே, அந்த நிதி ஒதுக்கீடு வருகின்ற நேரத்திலே இந்தச் சாலை அமைப்பது பற்றி அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 486 மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.



1992 ஏப்ரல் 7

வினா எண் 487, செல்வி கோ. மல்லிகா; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

487—

வேளங்கிப்பட்டியில் கூட்டுறவு அங்காடி அமைத்தல்.

* 4156—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை ஊராட்சி வேளங்கிப்பட்டியில் கூட்டுறவு அங்காடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை ஊராட்சி வேளங்கிப்பட்டியில் ஏற்கனவே ஒரு கூட்டுறவு நியாய விலைக்கடை செயல்பட்டு வருவதால், புதிய அங்காடி துவக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளங்கிப்பட்டியில் செயல்படும் பகுதி நேரக் கடையை முழு நேரக் கடையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேளங்கிப்பட்டியில் இப்பொழுது 354 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதோடு அந்தயாநல்லூர் 202 அட்டைகளையும் சேர்த்து 556 அட்டைகளுக்கு இந்தக் கடை இயங்கிக் கொண்டு வருகிறது. வேறு ஏதாவது சிறப்பான காரணங்கள் இருப்பின் அரசு இதைப் பரிவோடு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 488, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[1992 ஏப்ரல் 7

488——

அதிக விளைச்சல் தரக்கூடிய நெல் வகைகள் கண்டுபிடித்தல்.

திரு. அ. பாப்பா சுந்தரம் :

*4458 மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக வேளாண்மைத் துறையில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் கடந்த 5 ஆண்டுகளில் அதிக விளைச்சல் தரக் கூடிய நெல் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன வகை கண்டுபிடிக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. கு.ப. இருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் கடந்த 5 ஆண்டுகளில் வேளாண்மைப் பெருமக்கள் நல் விளைச்சல் பெற 11 நெல் இரகங்களைக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளது. 1987—ஆம் ஆண்டில் டி.பி.எஸ்-2 என்ற நெல் இரகத்தையும், 1988—ஆம் ஆண்டில் எ.டி.டி. 37 எ.டி.டி. 38, எடிடி.39 போன்ற மூன்று நெல் இரகங்களையும், 1989—ஆம் ஆண்டில் எ.டி.டி. 40, ஏ.எஸ்.டி. 17, எம்டியு. 3, பியு 4 போன்ற 4 வகை நெல் இரகங்களையும் 1990—ஆம் ஆண்டில் கோ.45 என்ற நெல் ரகத்தையும், 1991-ஆம் ஆண்டில் ஏ.எஸ்.டி. 18 மற்றும் எம்டியு 4 போன்ற இரு நெல் ரகங்களையும் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளது. மேற்கண்ட இந்த நெல் ரகங்கள் அதித மகசூல் தரக்கூடியதும், குலைநோய், இலைக்கருகல், இலைப் புள்ளி, துங்ரோவைரஸ், தண்டு அழுகல் மற்றும் இலை அழுகல் போன்ற நோய்களை எதிர்த்து வளரும் சக்தியுடைய ரகங்களாக உள்ளது.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில், பல வகையான நெல்கள் கண்டுபிடித்திருப்பதாகச் சொன்னார்கள். இருந்தாலும், அவையெல்லாம் கோடைக் காலத்திற்கு ஏற்ற பயிராக இல்லாமல் இருப்பதால், குறுவைப் பட்டத்திற்கு மட்டும் உதவுகிற நெல்லாக இருப்பதால், சம்பா நெல் ஐ.ஆர்.20 போன்ற ஒரு ஸ்டாண்டர்டு வெரைட்டியை, ஒரு நல்ல வெரைட்டியை 10 ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடித்ததைப்போல, சம்பா பட்டத்திற்கு நல்ல ஹை வெரைட்டியை- அரிசி அதிகமாகத் தரக் கூடிய நெல்கள் ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ? அந்த நெல்கள் எல்லாம் இடையிலே வருகிறது.



1992 ஏப்ரல் 7]

போகிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போல, இன்று ஐ.ஆர்.20-ம், ஏடிடி. 37 என்ற ரகங்கள் தான் நடைமுறையில் இருக்கிறது. மற்ற வெரைட்டிகளெல்லாம் நடை முறையில் இல்லாததால், நடைமுறையில் எது அதிக மகசூல் தரும் என்பதை விளக்குவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. இருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய ரக நெல் கண்டுபிடிப்பதற்கு பல ஆண்டுகள் ஆகிறது. அந்த ரகங்களைக் கண்டுபிடிக்கக் கூடிய வல்லுநர்கள் இரவு பகலாகப் பாடுபட்டு, புதிய ரகங்களைக் கண்டுபிடித்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களிலே, ஆண்டுக்கு ஒரு புதிய ரகத்தை அறிவித்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றவுடன் வேளாண்மை விஞ்ஞானிகளுக்கு ஒரு அறிவுரை வழங்கினார்கள். நீண்டகாலம் நிலைத்திருக்ககூடிய ரகமாகவும், அந்த ரகம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதிக நாள் இருக்கக்கூடிய ரகமாகவும் வெளியிட வேண்டுமென்றும், அப்படி வெளியிடக்கூடிய விஞ்ஞானிகளுக்கு ஆண்டு ஒரு லட்சம் ரூபாய் பரிசாகவும் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். கடந்த ஆட்சி காலத்திலே, அவசரமாகக் கண்டுபிடித்து வெளியிடப்பட்ட 'கருணா' என்ற நெல்கள் எல்லாம் இன்று காணாமல் போய் விட்டது. அதைப் போல இந்த அரசு செய்யாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, மிகவும் சிரமத்திற்கிடையே நெல் வகைகள் கண்டுபிடிக்கபடுவதாகச் சொல்கிறார்கள். நான் சொல்லுவதெல்லாம், எவ்வளவு சிரமம் இருந்தாலும், நெல் வகைகளை 15 ஆண்டுகளுக்கு ஒன்று என்ற வகையில் கண்டுபிடித்தாலும், ஐ.ஆர். 20 என்ற ரகத்திற்கு மேல் ஒரு புதிய உயர்ரக நெல்லைக் கண்டுபிடிப்பதற்கு இந்த அரசு தீவிரமாக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதோடு, இந்த மையங்கள் கோயம்புத்தூர், ஆடுதுறை தவிர வேறு இடத்தில் எங்கேயாவது இயங்குகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. இருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பயிருக்கும் ஒரு ஆராய்ச்சி மையம் இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக நெல்லைப் பொறுத்த மட்டில், தஞ்சை ஆடுதுறையிலும், மதுரையிலேயும், நெல் ஆராய்ச்சி மையங்கள்—அம்பாசமுத்திரம் போன்ற பகுதிகளிலேயும் இருந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல ;

நல்ல ரகங்களைக் கண்டுபிடிப்பதற்கு விஞ்ஞானிகள் முயற்சி செய்து சொண்டிருக்கிறார்கள். அது இப்போது உருவாகக்கூடிய நிலையிலே இருக்கிறது என்பதை, தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி அ. தி. சரஸ்வதி.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே பஞ்சாபில் உற்பத்தியாகும் பாசுமதி நெல் போன்ற வாசனை நெல் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலுள்ள ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மையத்தில், வாசனை ரக நெல் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அது வெற்றியும் பெற்று விட்டது. அதற்கு என்ன பெயர் வைக்க வேண்டும் என்பதனை புரட்சித் தலைவி அவர்களிடத்திலே கலந்து, நல்ல பெயராகச் சூட்டி தமிழகத்திலே, பாசுமதியைப் போன்ற வாசனை ரகம் விரைவிலே வெளியிடப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடுதுறையில் கண்டுபிடிக்கப்பட்ட அந்தவாசனை ரக நெல்லிற்கு 'ஜெ.ஜெ.' என்று பெயர் வைக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் சாதிக்கக்கூடிய புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதி பெற்று அந்தப் பெயர் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சி மன்றக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருகின்ற நான் ஒரு சில குறைகளையும் இங்கே சுட்டிக்காட்டுவது கடமை என்று நினைக்கின்றேன்.



மண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, தாங்கள் கேள்வி நேரம் என்பதை எப்போதுமே மறந்து விடுகிறீர்கள். உட்காருங்கள். கேள்வி நேரத்தில் குறைகளைக் கூறக்கூடாது என்று விதி இருக்கிறது. உட்காருங்கள். திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : கடந்த ஐந்து ஆண்டுக் கால கட்டத்தில் எத்தனை வகையான நெல் ரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் அறிவித்தார்கள். ஆனால் அந்த வகைகள் எல்லாம் ஒன்று அல்லது இரண்டு தவிர, அதனுடைய காலத்திலோ, தண்ணீர் தேவையிலோ, வறட்சியைத் தாங்கக்கூடிய நிலையிலோ வித்தியாசம் இல்லாதவைகளாக இருக்கின்றன. நெல் விதை ஆராய்ச்சி மையத்திலிருந்து ஆண்டுதோறும் புதிய புதிய நெல் ரகங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் ஒரு நெல்லிற்கும், இன்னொரு நெல்லிற்கும் வித்தியாசம் இல்லாத வகையில் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே புதிய நெல் ரகங்களை அறிமுகப்படுத்துகின்றபோது, ஏற்கெனவே அறிமுகப் படுத்திய நெல் ரகத்திலிருந்து அதன் காலத்திலோ, தண்ணீர் தேவையிலோ அரிசியின் தரத்திலோ வேறுபாடு இருக்க வேண்டு மென்று அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் வெளியிடுகின்ற ஒவ்வொரு நெல் ரகத்திற்கும் அரிசியிலும் வேறுபாடு இருக்கிறது. நெல்லின் அளவிலும் வேறுபாடு இருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒவ்வொரு பகுதியிலும் நல்லமுறையிலே விளைச்சலைத் தந்து கொண்டிருக்கிறது. தஞ்சையிலே விளையக்கூடிய நல்ல ரகமான நெல், கன்னியாகுமரி பகுதியிலே அங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதனால் அதிகமான மகசூலைத் தரமுடியாது. எனவே அந்த அந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டு வெளியிடப்படுகின்றன என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 489, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்:

89— [1992 ஏப்ரல் 7

சத்துணவு ஊழியர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்வதைத் தடுத்தல்.

*1128 டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல இடங்களில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு ஆள்பிடிக்காத சத்துணவு ஊழியர்களை வேறு காரணங்களைக் காட்டி தற்காலிக வேலை நீக்கம் செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படி தகவலேதுமில்லை. இதுமாதிரி குறிப்பான புகார்கள் தந்தால் விசாரிக்கப்படும்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த ஊதியம் பெறும் சத்துணவு ஊழியர்களுக்குச் சில சமயங்களில் அதிக ஊக்கத் தொகை கொடுத்து, குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைக்கு ஆட்களை அழைத்துவர வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கப் படுகிறார்கள். இதைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-1991 அன்று நடந்த அரசுச் செயலாளர்கள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டபடி நேர்முகக் கடித எண் 12738/91, நாள் 5-4-1991-ல் குடும்ப நலத் திட்டம் நல்லமுறையில் செயல்படுத்தப்பட சத்துணவு ஊழியர்கள் அந்தக் கூடங்களுக்கு வருகின்ற தாய்மார்களுக்கு இதுபற்றிப் பிரச்சாரம் செய்வதற்குரிய சேவையை மட்டும் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதால், சத்துணவு ஊழியர்கள் குடும்ப நலத் திட்டத்திற்காக கட்டாயப் படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் சு. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்களைக் கட்டாயப்படுத்த வில்லை என்று கூறினார்கள். ஆனால், அரசு அதிகாரிகள் அவர்களை ஒருசில முறையில் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைக்கு ஆட்களை கொண்டுவர வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆகவே, அது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 7]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட அரசு அதிகாரி களுடைய பெயர்களையும், அப்படி நடக்கின்ற இடங்களையும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் பொதுவாக எல்லா பி.டி.ஓ-க்களும் இன்று அறுவை சிகிச்சைக்கு ஆள்பிடிக்காதவர்களை எல்லாம் வேறு காரணங்களைக் காட்டி சத்துணவு ஊழியர்கள் பேரவையின் தலைவரையே தர்மபுரி மாவட்டத்தில் வேலை நீக்கம் செய்திருக்கிறார்கள். இதுபோன்ற நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று சொன்னால் இவர்கள் பி.டி.ஓ.-க்களுக்கு இலக்கு நிர்ணயிப்பதைவிட, ஹெல்த் டிபார்ட் மெண்ட்டுக்கு அந்த மாதிரி வேலையைச் செய்ய முழுமையாக ஒப்படைத்துவிடத் தயாராக இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்களின் சங்கத் தலைவராக மாண்புமிகு உறுப்பினர் இருக்கின்ற காரணத்தால் தவறான தகவலை அரசுக்குச் சொல்லக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற வுடன் சத்துணவு நலப் பணியாளர்களை எந்தவிதக் காரணத்தைக் கொண்டும் குடும்ப நலத் திட்டத்திற்காகக் கட்டாயப்படுத்தக் கூடாது என்று அரசு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, அவர்களை வேலை நீக்கம் செய் வதற்கான காரணங்கள்—இப்படிப்பட்ட காரணங்கள் எந்த மாவட்டங்களிலிருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பி.டி.ஓ.-க்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதையும் தெரி வித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தவறான தகவல் நீங்கள் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்து திரு. கே பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நடைபெறுகிற சத்துணவுத் திட்டம் போல் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்

கொண்டு வந்த சத்துணவுத் திட்டம் போல் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி சத்துணவுப் பணியாளர்களுக்கு வேறு அலுவல்கள் கொடுக்கிறார்கள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பது பற்றியது எனவே இதற்குத் தனிக் கேள்வி போடவும். திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு என்னுடைய தொகுதியிலிருந்து கடிதம் வந்து இருக்கிறது. இந்த மாதிரி பி.டி.ஓ.-க்கள் எல்லாம் அதிகமாகத் தொந்தரவு செய்கிறார்கள் ஆகவே உரிய நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லி. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குத் தகவல் கொடுத்து இப்படிப்பட்ட பணியாளர்கள் இவ்விதமான தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்படக்கூடாது என்று அறிவுறுத்த முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு எந்த இடத்தில் இப்படி நடைபெற்றது, எந்த அரசு அதிகாரி இப்படிச் செய்தார் என்று குறிப்பிட்டு என்னிடத்தில் புகாராகக் கொடுத்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர் செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் சத்துணவுக் கூடத்திற்கு எந்த ஆண்டில் இருந்து எந்தெந்த விகிதத்தின் கீழ் காய்கறிகள் கொடுக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, பணியாளர்கள் பற்றியது. எனவே இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 490—திரு. பி. வி. இராஜேந்திரன், திரு. ஆர் சிங்காரம், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.



490—

## சத்துணவு வழங்கும் செலவுக்கு கூடுதல் மானியம்

* 5360— திரு. பி. வி. இராஜேந்திரன் :

திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுத் திட்டத்தில் தற்போது ஒரு மாணவருக்கு வழங்கப்படும் அரிசி 100 கிராம், பருப்பு 15 கிராம், எண்ணெய் 1 கிராம் மற்றும் விறகு, காய்கறி, மளிகை சாமான் வாங்க செலவு 0.13 காசாகவும் இருப்பதால், இன்றைய விலைவாசி உயர்வையும் பொருளாதார நிலையையும் கருத்திற்கொண்டு அதிகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் காய்கறி, விறகு, மளிகை சாமான் ஆகிய வற்றுக்கு வழங்கப்படும் 0.13 காசு அளவு உயர்த்தப்படும் கருத்துரு எதுவும் அரசிடம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியின் ஒரு அம்சத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே வழங்கப்பட்ட 3 கிராம் என்ற அளவைக் கடந்த கால ஆட்சியிலே ஒரு கிராம் என்ற அளவுக்குக் குறைத்திருக்கிறார்கள். மீண்டும் அதை 3 கிராம் ஆக்குவேன் என்று இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி தந்திருக்கிறார்கள். அதைப்பற்றிய அவர்களுடைய பதில் என்ன என்பதை உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 491, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

## Action on the complant sent Regarding adulteration in the Automa ic Milk Vending Booth

*206 Thiru M. Sundaradoss

Will the Hon. the Minister for Adi-Dravidar Welfare be please to state

Whether the Commissioner of Milk at Madhavaram in Madras has recieived complaints from the Advocates about adulteration of milk supplied through the automatic milk vending booth of Chitrakulam during August 1991 and the action taken there of

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புகார் கடிதத்தின்பேரில் திடீர் சோதனை செய்யப்பட்ட போது இந்நிலையத்தின் பாலின் அளவு, குறைத்து வழங்கப் பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதற்காக நிலைய சலுகைதாரருக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. நிலையத்தில் வழங்கப்பட்ட பாலைப் பரிசோதித்துப் பார்த்ததில் பாலின் தரம் திருப்திகரமாக இருந்தது

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தானியங்கி என்கிற அந்த ஆட்டோமெட்டிக் மெஷின் இயங்காமல் அந்த பாலை வெளியே வைத்துஅந்த நபர் அளவு வைத் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் அது உண்மையா? ஆமெனில் அந்த ஆட்டோமெட்டிக் மெஷினை ரிப்பேர் செய்து பழையமாதிரி பால் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அடிக்கடி பார்வையிடுகிறபோது இது போன்ற தவறுகள் இருக்கின்றே ஆட்டோமெட்டிக் வென்டில் மெஷின்ஸ் பெறுத்தவரையில் உடனடியாக ரிப்பேர் செய்து தர பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவை தலைவர்: வினா எண். 492 திரு.ச புரட்சிமணி, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்

492—தொழுதூரில் கால்நடை மருத்துவமனை

*5640—திரு.ச. புரட்சிமணி

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மங்களூர் தொகுதி தொழுதூரில் ஒரு கால் நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?



மாண்புமிகு திரு.எம் ஆனந்தன்

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மங்களூர் தொகுதி தொழுதூரில் புதியதாக ஒரு கால்நடை மருந்தகம் துவக்க அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது.

திரு.ச. புரட்சிமணி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தொகுதி சார்பாகவும் தொகுதிமக்கள் சார்பாகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றிகூறிக்கொள்வதோடு ஏதாவது ஒரு வினா கேட்கலாம்.

திரு.ச.புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அது எப்போது துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 31-3-1992 அன்று உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள். அது வரக்கூடிய ஆண்டில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.என்.ஜி.வேணுகோபால் இது மங்களூர் தொகுதி பற்றி கேள்வி. அது பற்றிய கேள்வி கேட்பதாக இருந்தால் கேட்கலாம்.

திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 1981 ஆம் ஆண்டு முதல் என்னுடைய தொகுதியிலே வழங்கப்படாமல் இருந்த......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொழுதூரில் ஒரு கால்நடை மருத்துவமனைப்பற்றியது. அது சம்பந்தமாக ஏதாவது கேள்வியிருந்தால் கேளுங்கள்

திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே என்னுடைய சொந்தத் தொகுதியிலே அந்தக் கால்நடை மருத்துவமனை வழங்கப்படாமல் இருந்து இப்போது வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைச் சொல்வதற்கு தான் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினேன்.

[1992 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத்தலைவர் : நான் ஏற்கனவே சொன்னேன். தொழுதூரில் ஆரம்பிப்பதற்காவது நன்றி சொல்லுங்கள். இந்தக்கேள்வி அதைப்பற்றியது. அதற்காக நன்றி சொல்வதாக இருந்தால் சரியாக இருக்கும். உட்காருங்கள்.

அடுத்த வினா எண். 493 திரு.வெ. தமிழரசு மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

493—

சேலம் மாவட்டத்தில் 'சேகோ' சர்வ் என்னும் கூட்டுறவு அமைப்பு நிறுவனத்தை செம்மைப்படுத்தல்

*4926—திரு.வெ. தமிழரசு,
மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மவட்டத்தில் சேகோ சர்வ் என்னும் கூட்டுறவு அமைப்பு நிறுவனம் இயங்குவது நிதிநெருக்கடி காரணமாக ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்தால் பல இலட்சக்கணக்கான-விவசாயிகளுக்கும் குச்சிக்கிழங்கிற்கும் போதிய விலை கிடைக்காத நிலையும் 900—க்கும் மேற்பட்ட ஜவ்வரிசி ஆலைத்தொழில்கள் நலிவடைந்துள்ள நிலை ஏற்பட்டுள்ளதையும் அரசு அறியுமா?

(ஆ) இதை நம்பியுள்ள பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களைக் காக்க சேகோ சர்வை நன்கு செயல்ப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

(அ) சேகோ சர்வ் நிறுவனத்தில் நிதி நெருக்கடி இல்லை என்பதால் சேகோ தொழிலகங்களை மூடவேண்டிய அவசியம் இல்லை. மேலும் குச்சிக் கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு குச்சிக் கிழங்கிற்கு தகுந்த விலை பெறுகிறார்கள்.

(ஆ) அரசு இதனை நம்பி வாழும் சேகோ தொழிலாளர்களின் நலனைக் காப்பாற்றி வருகிறது. ஏற்கனவே விற்பனைவரி மானியமும் அரசால் இச்சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விலை ஏற்றத்தாழ்வு மிக அதிகமாக இருப்பதால் சேகோ, கார்ப்பரேஷன்—ஆவது அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தற்போதுள்ள நிலைமைக்கு ஏற்றம்படி அரசு 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ.50 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது.



1992 ஏப்ரல் 7]

திரு.க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த கன்சைன்மென்ட் சேல்ஸ் என்ற முறையில் வட-நாட்டைச்சேர்ந்த ஒரு 10 சேட்-கள் தனியாக வியாபாரம் செய்கின்ற காரணத்தால் தான் அரசுக்கு வரவேண்டிய விற்பனைவரி அரசுக்கு ஏய்க்கப்படுகிறது. எனவே சேகோ சர்வ் நிறுவனம் அந்த 10 நபர் களோடு போட்டிப்போட்டு வியாபாரம் செய்யமுடியாத காரணத் தினால் அது நசிந்துவருகின்ற அந்தச் சூழ்நிலையில், நேற்றையதினம்புரட்சி தலைவி அவர்கள் கருப்புக்கற்கள் வியாபார முறையை ஒழுங்கு படுத்தியது போன்று இதையும் ஒழுங்குபடுத்தி சேகோ சர்வ் மூலமாகவேதான் இதையும் கொள்முதல் செய்து வியாபாரம் செய்யவேண்டும் என்ற ஒரு நிலையை உறுதிப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தற்போது கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி இதற்குச் சம்பந்தம் இல்லாது இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி கேள்வியைப் போட்டால் தகுந்த பதில் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப் பெற்றது என்பதைக்குறிக்கும்.

2, கவன ஈர்ப்பு

(அ) திருச்சி மாவட்டம் புத்தானம்பட்டியிலுள்ள நேரு நினைவு கல்லூரி ஆசிரியர்கள் அலுவலர்களுக்கு சம்பளம் வழங்கப்பெறாதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு திருவாளர்கள் எஸ்.எம். கிருஷ்ணன் மற்றும் எம். தங்கவேல் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு.எஸ்.எம் கிருஷ்ணன்.

திரு. எஸ். எம், கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் புத்தனாம்பட்டியில் உள்ள நேரு நினைவுக் கல்லூரியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும்

[திரு. எஸ். எம். கிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 7

அலுவலர்களுக்கும் ஜனவரி 1992 முதல் சம்பளம் கொடுக்கப் படாமல் இருப்பது குறித்து'' மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ.அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

புத்தனாம்பட்டி, நேரு நினைவுக்கல்லூரியின் அங்கீகரிக்கப் பட்ட செயலர் திரு. ஜீவமணி என்பவரின் பதவிக் காலம் 31-1-1990ல் முடிவடைந்தவுடன் இக்கல்லூரியின் செயலர், கல்லூரி முதல்வர், யார் என்பது பற்றி சட்ட சிக்கல் எழுந்த நிலையில், கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ரல்லாத பணியாளர்களின் நலன் கருதி 2-9-85 நாளைய 1021 எண்ணிட்ட கல்வித்துறையின் அரசாணைகளில் வழங்கிய அதிகாரத்தின் அடிப்படையில் இவர்களின் ஊதியத்தை, திருச்சி மண்டலக் கல்லூரிக் கல்வித்துணை இயக்குநரே நேரடியாக வழங்க ஆணைகள் வழங்கப்பட்டன. இதனை எதிர்த்து திரு. பொன்னம் பலம் (கல்லூரி முதல்வர்) என்பவர் திருச்சி துணை நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார். இவ்வழக்கில் இயக்குநரின் மேற்படி ஆணைகளுக்கு இடைக்கால தடைகோரிய மனு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யுப்பட்டுள்ளது.

2. மேற்படி அரசாணைகளில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங் களின் அடிப்படையில் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் நலம் கருதி இவர்களுக்கு விடுப்பு அனுமதித்தல், ஊதிய உயர்வு அனுமதித்தல் போன்ற பணிகளை ஆற்றும் அதிகாரம் திருச்சி மண்டலக் கல்லூரிக் கல்வி துணை இயக்குநருக்கு 30-8-90 நாளைய இயக்குநர் செயல்முறைகளில் அளிக்கப் பட்டுள்ளது. இதனை எதிர்த்து திரு. பொன்னம்பலம், திருச்சி துணை நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்துள்ளார். இவ்வழக்கில் இவ்வாணைகளுக்கு இடைக்கால உறுத்துக்கட்டளை நீதிமன்றத் தால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், திரு. பொன்னம்பலம் என்பவருடன் செயலர் என்ற முறையில் கடிதப்போக்குவரத்து நடத்த ஆணையிடப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்று சட்டம் 1976 பிரிவு 49 மற்றும் 50-ன் படி துணை நீதிமன்றம் இத்தகைய வழக்குகளை ஏற்று விசாரிக்க ஆளுகை கிடையாது. இவ்விவரங்கள் தொடர்புள்ள வழக்குகளுக்கான எதிர் ஆணை உறுதிப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தும் திருச்சி, துணை நீதிமன்றம் முன் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 30-1-92-ல் ஆணைகளை



1992 ஏப்ரல் 7] [டாக்டர் செ. அரங்கநாயகம்]

வழங்கியுள்ளது. இத்தீர்ப்பு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டம் 1976, பிரிவு 49 மற்றும் 50-க்கு முரணாக உள்ளது. எனவே, இத்தீர்ப்பை துறை ஏற்க இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் துணை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து இம்மேல் முறையீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

4. 30-1-92 நாளையத் தீர்ப்பின்படி திரு. பொன்னம்பலம் என்பவருடன் செயலர் என்ற முறையில் கடிதத் தொடர்பு கொள்ள வேண்டுமென்ற நிலையிலும், இதனை எதிர்த்து மேல் முறையீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ள நிலையிலும் 23-1-90 நாளைய இயக்குநரின் செயல் முறைகளின் அடிப் படையில் ஊதியம் நேரடியாக வழங்கினால், இச்செயல் 30-1-92 நாளைய தீர்ப்புக்கு எதிராக செயல்பட்டதாக அமையும் என்பதனாலும் இக்கல்லூரியின் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1992 ஜனவரி முதல் ஊதியம் வழங்கப்படாத நிலை எழுந்துள்ளது.

திரு. எஸ்.எம். கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புத்தனாம்பட்டியிலே நடைபெறுகின்ற கல்லூரி 25 ஆண்டுகளாக நடைபெறுகிறது. கலைஞர் அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கி வைத்த கல்லூரி. நேருவின் பெயரில் நடைபெற்று வருகின்ற கல்லூரி. அந்தக் கல்லூரியிலே சென்ற 3 மாதங்களாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட வில்லை. ஒய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அவர்களுடைய ஒய்வு ஊதியங்கள் கிடைக்கவில்லை. அதைப் போலவே, இறந்தவர்கள் குடும்பத்திற்கு கிடைக்கவேண்டிய சலுகைத்தொகைள் எதுவுமே கிடைக்கவில்லை. இறந்தவர்கள் இடத்திற்கும் ஒய்வு பெற்ற வர்கள் இடத்திற்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்படாததன் விளை வாக அங்கே போதுமான ஆசிரியர்கள் இல்லை. இதுபோன்ற நிலை இருக்கிறது என்பதை அந்த பாரதிதாசன் பல்கலைக்கழகம் அறிந்து அந்தப் பல்கலைக்கழகத்திலேயிருந்து ஒரு பிரதிநிதி குழு அங்கே சென்று ஆராய்ந்து அவர்களும் ஒரு அறிக்கை சமர்ப் பித்துள்ளார்கள். இந்த அறிக்கையிலே உள்ளபடி அந்தக் கல்லூரி முறையாகச் செயல்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அமைச்சர் அவர்கள் சம்பளம் கொடுக்கப்படாததற்கு என்ன நிலை என்று விளக்கியிருக்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை நான் விரும்புவது. அந்த நிலை எனக்குப் புரிகிறது என்றாலும்கூட 3 மாதம் சம்பளம் இல்லாமல் ஆசிரியர்களும் அலுவலர்களும் எப்படி இருக்க முடியும்? அதற்கு என்ன தீர்வு காண அமைச்சர் விரும்புகிறார். ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அரசு சம்பளம் தர முயற்சி எடுத்தது. அதை நீதிமன்றம் தடுத்து நிறுத்தியிருக்கிறது.

முற்பகல் 10–30

திரு. எஸ். எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி என்றால் ஏதாவது சஸ்பென்சில் ஏதாவது ஒரு அமவுண்டை அந்த ஆசிரியர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா? அதாவது இடைக்காலமாகவாவது ஏதாவது, அதாவது கிறிஸ்துவ கல்லூரியிலே பிரச்சினைகள் எழுந்த நேரத்தில் முதல்வர் தலையிட்டு அதற்கு ஒரு சிறப்பான தீர்வைக் கண்டிருக்கிறார்கள். அதற்கும் என்னுடைய நன்றியை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல சம்பளம் தரப்படாது இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் மூன்று மாதத்திற்கு மேல் ஆகிவிட்ட காரணத்தினால் ஒரு தனிக்கவனம் செலுத்தி அதற்கு முயற்சிகள் எடுக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அங்கே இரண்டு கோஷ்டிகள் இருந்து தகராறு செய்கிற காரணத்தினால் நேருவின் பெயரால் நடைபெற்ற அந்தக் கல்லூரியில் இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை தோன்றி அதனால் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாதோர் பாதிக்கப்பட்டு இருக்கிற நிலைமை தோன்றியிருக்கிறது. அதிலே அரசாங்கம் தலையிட்டு ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாதோருக்கும் சம்பளம் தருவதற்கும் வேறு பல சலுகைகளை அனுபவிப்பதற்கும் முயற்சி எடுக்கின்றபோது அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் தடை வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது சம்பளம் வாங்காத காரணத்தால் ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாதோரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு நன்றாக உணர்கிறது. அதைச் சம்பளம் என்ற பெயரில் இல்லாமல் வேறு பெயரிலே இந்தப்பணத்தை அவர்களுக்கு தந்து உதவ முடியுமா என்ற கருத்தை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. எம். தங்கவேல்.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கியுள்ளார்கள். ஆனால் 1976, பிரிவு 14–ன் படி தனி அதிகாரிகளோ அல்லது 30—பிரிவின் படி அரசோ ஏற்று நடத்த வேண்டுமென்று அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அரசே அக்கல்லூரியை ஏற்று நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அதுகுறித்து அரசு தனியாக பரிசீலிக்கும்.

திரு.எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி நூற்றுக்கு நூறு சதவிகிதம் அரசு மானியம் பெற்று நடைபெறுகின்ற கல்லூரி. அதுமட்டுமல்ல



மாணவர்களிடமிருந்து அட்மிஷன் நேரத்தில் வாங்குகின்ற பணத்தை அரசாங்கத்துக்குக் கட்ட வேண்டும். ஆனால் இது வரை 4 இலட்சம் ரூபாய் பாக்கியுள்ளது. அதையும் கட்ட வேண்டும். இதையும் கருத்தில் கொண்டு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் வேலூரில் டி.கே.எம். மகளிர் தனியார் கல்லூரியில் நிர்வாகப் பிரச்சினை ஏற்பட்ட போது அந்தக் கல்லூரியை அரசே ஏற்று இன்றைக்கும் நடத்திக்கொண்டிருக்கிறது. அதேபோன்று புரட்சித்தலைவியின் அரசும் அந்தக் கல்லூரியை ஏற்று நடத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான், அதுகுறித்து அரசு தனியாகப் பரிசீலிக்கும் என்று சொன்னேன். இருந்தாலும் இதுபோன்ற கல்லூரி நிர்வாகங்கள் ஆசிரியர்கள், ஆகியோர் மாணவர்களது நலம் கருதி இதுபோன்ற பிரச்சனைகள் எழாவண்ணம் நல்லபடியாக கல்லூரியை நடத்த வேண்டுமென்று இந்தச்சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) பவானிசாகர் மின் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட்டு அப்பகுதி விளை நிலங்களைப்பாது காக்க வேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. மாணிக்கம், திரு. வி. கே. சின்னசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. மாணிக்கம்.

திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணையில் தண்ணீர் குறைவாக உள்ளதால் அதன் மின் அணையிலுள்ள தண்ணீரைத்திறந்து அப்பகுதியிலுள்ள 1 லட்சத்து, மூவாயிரத்து, ஐநூறு ஏக்கரில் விளைந்த நிலையிலுள்ள விளை நிலங்களைக் காப்பாற்ற. . ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மாணிக்கம் கொடுத்திருப்பதை அப்படியே படிக்கவேண்டும். நீங்கள் கேள்வி கேட்கும்போது இந்த விவரங்களை எல்லாம் சொல்லலாம்.

திரு.சி. மாணிக்கம் ; ''பவானிசாகர் அணையில் தண்ணீர் குறைவாக உள்ளதால் அதன் மின் அணையிலுள்ள தண்ணீரைத் திறந்து அப்பகுதியிலுள்ள விளை நிலங்களைப் பாதுகாப்பது குறித்து மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பவானிசாகர் பிரதானக் கால்வாயின் கீழ் இரண்டாம் முறைப் பாசனத்திற்கு 1,03,500 ஏக்கர் பரப்பில் புன்செய் பயிர் விளைவிக்க ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து முறை வைத்து தண்ணீர் விடப்பட்டு வருகிறது. இதற்கு அரசு ஆணை எண் ஆர்டி. 1390, பொதுப்பணித்துறை, நாள் 17–12–1991-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பாசனத்திற்காக 15–4–1992 வரை தண்ணீர் அளிக்கப்படவேண்டும். தற்போது பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் 2,201 மில்லியன் கன அடி நீர் இருப்பில் உள்ளது. நீர்வரத்து, கடந்த சில தினங்களுக்கு வினாடிக்கு 1,250 கன அடிகள் என்ற அளவில் உள்ளது. தற்போது காளிங்கராயன் பழைய பாசனப் பரப்புக்கு வினாடிக்கு 500 கன அடிகள் என்ற அளவில் தண்ணீர் விடப்பட்டு வருகிறது. பவானி சாகர் பிரதானக் கால்வாய் பகுதியில் தற்போது விளைவிக்கப்பட்டுள்ள புஞ்சைப்பயிர்களுக்கு மேலும் 15 நாட்களுக்கு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தண்ணீர் விடப்பட வேண்டும். இதற்கு சுமார் 2.6 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படுகிறது.

2. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர், கோவை நகர குடிநீர் திட்ட பணிகளைச் செயலாக்கும் பொருட்டு பவானிசாகர் நீர்த்தேக்கத்தின் மேல் பகுதியில் உள்ள மின் அணைகளில் ஒன்றான பில்லூர் நீர்த்தேக்கத்தின் நீர் இருப்பை குறைப்பதற்கு பொதுப்பணித் துறையின் இசைவைக் கோரியுள்ளார்

3. தற்போது பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் 38.36 அடி நீர் மட்டம் உள்ளது. இதன் கொள்ளளவு 2,201 மி.கன அடிகள். இதில் பயன்படும் நீரளவு சுமார் 1,200 மி.கன அடிகள். கீழ்பவானி பிரதான கால்வாயில் முழு அளவு நீர் பாய பாவனிசாகர் அணையில் குறைந்தது 33 அடி அளவில் நீர் இருத்தல் வேண்டும். தற்போதைய நீர் வரத்து இதே அளவில் தொடருமானால், ஏப்ரல் 1–ம் நாள் அணையின் நீர் மட்டம் சுமார் 40.80 அடியை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது, எனவே, கீழ்பவானி பிரதான கால்வாயின் பாசனத்தேவை (2.6 டி.எம்.சி.) மற்றும் காளிங்கராயன் பாசனத்தேவைகளைக் (0.778 டி.எம்.சி.) கருத்தில் கொண்டு கூடுதலாக 2 டி.எம்.சி. தண்ணீரையாவது நீர் மின் நிலையங்களிலிருந்து பெறுவது குறித்து அரசு பரிசீலனையிலுள்ளது.

திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி திட்ட முதல் போக, முதல்முறை பாசன நிலங்கள் இப்பொழுதுதான் புன்செய் திட்ட பாசனத்திற்கு ஒரு லட்சத்து மூவாயிரத்து ஐநூறு ஏக்கர் பாசனம் பெறும் வகையில் 1–1–1992 முதல் 15–4–1992 முடிய முதல் கீழ் பவானி அணையில் தண்ணீர் திறந்துவிட உத்தேசிக்கப்பட்டு, தண்ணீர் பாய்ந்து வருகிறது.



இந்த தண்ணீர் விடுவதில் இடைவெளிவிட்டு 5 நாட்களுக்கு ஒரு முறை 5 தடவை தண்ணீர் விட வேண்டும். ஆனால் 4 முறை தண்ணீர் விடப்பட்டு, இப்போது 5வது தடவையாகத தண்ணீர் விடுவதற்குப் போதிய தண்ணீர் இல்லை. இந்தப் பாசனத்திற்கு 12 டி.எம்.சி. தண்ணீர் விட அரசாங்கத்தால் உத்தேசிக்கப்பட்டது. இதுவரை 9.20 டி.எம்.சி. தான் விடப்பட்டிருகிறது. இதற்கு மேல் உள்ள மோயார் பள்ளத்தாக்கு, குந்தா பள்ளத்தாக்கில் உள்ள தண்ணீர் குறைந்தது 2 டி.எம்.சி. தண்ணீரை விட்டாவது 1 லட்சத்து 3500 ஏக்கர் கடலைப் பயிரைக் காப்பாற்ற அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விளைவிக்கப்பட்டுள்ள புஞ்சைப் பயிர்களுக்கு 15–4–1992 வரை தண்ணீர்விட வேண்டுமென்று இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது. இன்றைக்கு ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கர்களுக்கு மேலே, கூடுதலாகப் புஞ்சைப் பயிர் இடப்பட்டுள்ள காரணத்தால், அதற்குத் தேவையான தண்ணீர் 2.93 டி.எம்.சி. தான். அதிலே பவானிசாகர் நீர்த் தேக்க கால்வாயில் திருப்பி விடக்கூடிய தண்ணீர் 1.90 டி.எம்.சி. காளிங்கராயன் வாய்க்காலில் இருந்து விடக்கூடிய தண்ணீர் 1.03 டி.எம்.சி. ஆக, தேவைப்படும் தண்ணீர் 2.93 டி.எம்.சி. ஆனால் நமக்கு வருகின்ற தண்ணீர், இன்றைக்கு இருக்கின்ற தண்ணீரைச் சேர்த்து—தற்போது நீர்த் தேக்கங்களில் இருக்கும் தண்ணீரையும், தொடர்ந்து மின் நிலையங்களிலிருந்து வருகின்ற தண்ணீரையும்—சேர்த்து பார்க்கின்ற நேரத்திலே 3.14 டி.எம்.சி. இருக்கிறது. ஆகவே இந்தப் புஞ்சைப் பயிர்களுக்கு தண்ணீர் விடுவதில் எந்தவிதச் சிக்கலும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் புஞ்சைப் பயிர்களைக் காப்பாற்றுகின்ற நடவடிக்கைகளை புரட்சித் தலைவி அவர்களின் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் அச்சப்படத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு போகம்கூட தண்ணீர் திறந்து விடாத சூழ்நிலையில் இருந்த கீழ்பவானி அணையிலிருந்து, நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, ஒரு போகம் நஞ்சைக்கும், இரண்டாவது போகம் புஞ்சைக்கும் தண்ணீர் திறந்துவிடும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது 15–4–1992 வரை திறந்துவிடுகின்ற நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாங்கள் கேட்பது 30–4–1992 வரை, இன்னும் ஒரு முறை தண்ணீர் திறந்துவிட்டால்தான் அந்தக் கடலைப் பயிரை முழுமையாகப் பறித்து எடுக்கின்ற

சூழ்நிலை உருவாகும். 15 ஆம் தேதியோடு தண்ணீரை நிறுத்தினால் கடலைப் பறிக்கும் நிலைமை கடினமாக இருக்கும். இன்னும் கடலைப் பயிர் முற்றாத சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே இன்னும் கூடுதலாக ஒரு தண்ணீர்விட இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறோம். விவசாயிகளும் அதை எதிர்பார்க்கிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் 30–4–1992 வரையில் மீண்டும் ஒரு முறை தண்ணீர்விட முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15–4–1992 வரையில் நமக்குத் தேவையான தண்ணீர் 2.93 டி.எம்.சி. என்று சொன்னேன். இன்றைக்கு இருக்கிற கணக்கைப் பார்த்தால், மின் நிலையங்களிலிருந்து வரக்கூடிய தண்ணீரைக் கணக்கு பார்க்கிறபோது, 3.14 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. ஆகவே மேற்கொண்டு 15 நாட்களுக்கு தண்ணீர் விடுவதில் எந்தவிதச் சிக்கலும் இருக்காது. அப்படி குறைவாக இருந்தாலும், 'பை–பாஸ்' மூலம் இந்தப் பயிர்களுக்குத் தண்ணீர் விடுவதற்கு அரசு ஆலோசித்து. வருகிறது ஆகவே, 30–4–1992 வரை தண்ணீர்விட தேவையிருக்கும் என்று அரசு கருதினால் நிச்சயமாக இந்த அரசு அதைச் செய்யும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு 30–4–1992 வரையிலும் அந்தப் புஞ்சைப் பயிர்களுக்குத் தண்ணீர் விடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக்கணக்கு குழுவின் அறிக்கைகளை அளித்தல் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

முற்பகல் 10.40

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

(1) 1982–83 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதியொதுக்கங்களிலும் மிகைச் செலவு பற்றிய அறிக்கையின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த



ஒம்பதாவது அறிக்கை (எட்டாவது பேரவை) யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய நாற்பதாவது அறிக்கை, மற்றும்

(2) தமிழ்நாடு அரசின் 1967–68 மற்றும் 1968–69 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) கணக்குகள் குறித்த இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கைகளில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை தொடர்பான பொதுக் கணக்குக் குழுவின் தனது முந்தைய அறிக்கைகளிலும் நான்காவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் இருபத்தி மூன்றாவது அறிக்கை (எட்டாவது பேரவை) யில் மேலும் தொடரப்பட்ட பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நாற்பத்தி ஒன்றாவது அறிக்கை ஆகியவைகளை நான் இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1985–86 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) நகராட்சி நிருவாகம் – குடிநீர் வழங்கல் துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை; மற்றும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செயல்பாடு குறித்த பொது நிறுவனங்கள் குழு (1989–90) அளித்த இருபத்தி ஐந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த மேல் நடவடிக்கை பற்றிய குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை அகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (இ) அரசு உறுதி மொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. இரா. நடேசன், அரசு உறுதி மொழிக்குழுவின் தலைவர்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதி மொழி குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) நான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு நான் அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும் ( குறுக்கீடு ) அவையின் அன்றாட நடவடிக்கைகளுக்குப் போய்விட்டோம் ( குறுக்கீடு ) அதை எழுப்ப வேண்டிய நேரம் வேறு. இப்போது நடவடிக்கைகளுக்குள் போய்க் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கும்போது குறுக்கிடக்கூடாது. மானியக் கோரிக்கையில் குறுக்கிடுவது நல்லநல்ல. உட்காருங்கள். ( குறுக்கீடு ) சொல்லுங்கள்.

4. காவிரிப் பிரச்சினை குறித்து நடுவர் மன்றம் அளித்துள்ள தீர்ப்பின்படி கர்நாடக அரசும், மத்திய அரசும் நடவடிக்கையெடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நடந்த பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் பதில் அளிக்கிறபோது, இந்த வருடம் ஜூன் மாதம் 12 ஆம் தேதி காவரியில் தண்ணீர் திறந்துவிடுவதாக அறிவித்தது குறித்து தஞ்சை மற்றும் டெல்டாப் பகுதி விவசாயப் பெருமக்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். 10 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு குறுவை சாகுபடி மிகச் சிறப்பாக நடக்கும் என்பதை அறிந்து மகிழ்ச்சியோடு தங்களது மராமத்துப் பணிகளை துவங்கியிருக்கிறார்கள். அதேபோன்று, கடந்த 4 ஆம் தேதி, காவரி நதி நீர்ப் பிரச்சினையில், நடுவர் மன்றத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கர்நாடக அரசு மனு அளித்ததை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல, நமக்கு நடுவர் மன்றம் தீர்ப்பு அளித்திருக்கக்கூடிய அந்த 205 டி. எம். சி. தண்ணீரை தமிழகத்திற்கு வழங்கவேண்டுமென்ற ஒரு நல்ல தீர்ப்பை இன்றையதினம் நடுவர் குழு அறிவித்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், துரிதமாக மத்திய அரசை அணுகி, இந்தத் தண்ணீரைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள் என்ற நல்ல செய்தியை தமிழ்நாட்டு மக்களுக்கு அறிவிக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று நீங்கள் இப்படிக் கேட்கிறபோது, ஒன்றும் சொல்லமுடியாதே. அதைத்தான் நான் அப்போதே சொன்னேன், நன்றி சொல்லி அமருகிறேன் என்று சொன்னீர்கள். இப்போது முதலமைச்சர் அவர்களிடத்திலே இருந்து ஒரு உறுதிமொழியைக் கேட்கிறீர்கள். அப்படியானால் முன்பே எனக்கு அதைப்பற்றி அறிவிப்பைக் கொடுத்து, நான் அதை முதலமைச்சருக்கு அனுப்பி அதற்கான பதிலைப் பெற வேண்டும்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் வர்கள் குறிப்பிட்ட செய்தி, உண்மையிலேயே தமிழக மக்கள்





ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியும் பேருவகையும் அளிக்கக் கூடிய செய்திதான். ( மேசையைத் தட்டும் ஒலி ) நீதி வென்றது, தர்மம் வென்றது, நியாயம் வென்றது என்றுதான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ( மேசையைத் தட்டும் ஒலி ) நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கர்நாடக அரசு செய்திருந்த மனுவினை பரிசீலித்த பிறகு, அதை நடுவர் மன்றம் நிராகரித்திருக்கிறது. ஏற்கெனவே கொடுத்த தீர்ப்பில் எந்தவிதமான மாற்றமும் செய்வதற்கில்லை. செய்ய வேண்டிய அவசியமும் இல்லை என்பதை நடுவர் மன்றம் திட்டவட்டமாக அறிவித்து விட்டது. இது தமிழகத்திற்கும், தர்மத்திற்கும் நியாயத்திற்கும் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். ( மேசையைத் தட்டும் ஒலி ) கர்நாடக அரசு இனியும் தாமதம் செய்யாமல், இதைப் பற்றி வீண் சர்ச்சைகளிலோ வீண் வாதங்களிலோ இறங்காமல், ஏற்கெனவே நடுவர் மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பின்படி சரியான நேரத்தில் குறித்த அளவு தண்ணீரைத் திறந்துவிட வேண்டும். இதற்கு மத்திய அரசும் கர்நாடக அரசை அறிவுறுத்த வேண்டும். இதைத்தான் தமிழகத்திலே உள்ள ஒவ்வொருவரும் எதிர்பார்க்கிறார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை மத்திய அரசும், கர்நாடக அரசும் செய்யும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது. ( மேசையைத் தட்டும் ஒலி ).

முற்பகல் 10-45

5. மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண்.26—கைத்தறியும் துணித் தொழிலும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 26 கைத்தறியும் துணித் தொழிலும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 60,82,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் எண்.1851, திரு. பி. வி. இராஜேந்திரன்

[1992 ஏப்ரல் 7

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கைத்தறிக்கு அடிப்படைத் தேவையான நூலின் விலை ஏற்றத்தை தவிர்த்து நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கபெறுகிற ரூ.60,82,77,000–ல் ரூ.100/ குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் அவையின்முன் வைக்கப்பட்டுள்ளன அதில் @ தமிழில் இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் பேசியதாகக் கருதி அவைக் குறிப்பிலே பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று கோருகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான ஆலோசனைகளையும் கருத்துகளையும் வழிங்குவார்களேயானால் இறுதியாக இந்த அரசின் முடிவுகளை நான் தெரிவிப்பேன் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணி நூல் மானியத்தில் பேசுவதற்கு அரிய வாய்ப்பு நல்கியமைக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று சொல்லுவார்கள். தொழில் என்பது நெசவுத் தொழிலைத் தான் குறிக்கும். நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுவது—தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கையில் அட்சயப் பாத்திரம் வைத்திருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை. விவசாயம் ஆனாலும் சரி, நெசவுத் துறையானாலும் சரி, வேறு எதுவாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கின்றார். எவ்வளவு வேண்டுமானாலும் எடுக்க, எடுக்க குறையாமல் இருக்கின்ற அளவிற்கு ஐம்பெருங்காப்பியங்களில் உள்ள அட்சய பாத்திரம் என்றே நான் வர்ணிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி ) இன்னுமொரு படி மேலே போனால் ஆறாவது பெரும் காப்பியமாக

@ [17—139-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1992 ஏப்ரல் 7] [திரு. வி. தண்டாயுதபாணி]

பாடலாம் என்றே ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே 50 இலட்சம் கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்கள் இருக்கின்றன. இதிலே பாதிக்கு மேலே வறுமைக்குக் கீழே உள்ளார்கள். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதியிலே நெசவாளர்களுக்கு கூலி உயர்வு வேண்டுமென்று கேட்டபோது எப்படி புரட்சித் தலைவி அவர்கள் எப்படி அட்சயப் பாத்திரத்திலே இருந்து கொடுப்பார்களோ அதிலே கொஞ்சம் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்து எங்களுக்குக் கொடுத்து, 15 சதவீதம் கூலி உயர்வு கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ( மேசையை தட்டும் ஒலி ).

இன்னுமொன்று, சென்ற வருடம் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவான முறையிலே குடியாத்தம் நகரிலும் லுங்கி ஏற்றுமதி மையம் எற்படுத்தித் தருகிறேன். 24 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கியிருக்கிறேன் என்று அவர்கள் தெளிவாக அறிவித்தார்கள். அந்த அறிவிப்பு, அறிவிப்போடு இருக்கிறதே ஒழிய இன்னும் அதிலே எந்தவிதமான வேகமும் காட்டப்படவில்லை என்பதை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் அவர் அளித்திருக்கின்ற நெசவாளர்கள் மானியத்திலே, நெசவாளர்கள் இறக்க நேரிட்டால், வாரிசுதாரர்களுக்கு பதினைந்தாயிரம் ரூபாய் கொடுப்போம் என்கின்ற அந்த அறிவிப்பானது தலைசிறந்ததாகும். வரவேற்கத்தக்கதாகும். ஆனால் அதே நேரத்தில் அதை ஓய்வூதியம் என்று சொல்லி மாதம் 250 ரூபாய் வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அதையும் வரவேற்கிறோம். ஓய்வூதியத்திற்கும் இறந்து போனவர்களுடைய குடும்பத்திற்குக் கொடுப்பதற்கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறது. ஓய்வு என்று சொன்னால் 60 வயதைக் கடந்தால் அவர்கள் ஒய்வு பெறுவார்கள். அவர்களுக்கு 250 ரூபாய் கொடுத்தால் பொருத்தமாக இருக்கும். ஆனால், அவர் செத்த பிறகு கொடுப்பதால் யாருக்குப் பலன் ஏற்படப் போகிறது? அவருடைய குடும்பத்திலே உள்ளவர்கள் நெசவாளர்களாக இருக்கிறார்களா அல்லது வேறு தொழில் செய்கிறார்களா என்பது புரியாது. ஆகவே, ஓய்வூதியம் கொடுப்பதற்கும், இறந்ததற்குப் பின்னாலே மானியம் கொடுப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை கொஞ்சம்கூட இந்தப் புத்தகத்திலே தெளிவுபடுத்தவில்லை என்பதை மெத்தப் பணிவன்போடு நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன். இறந்ததற்குப் பின்னாலே 15,000 ரூபாய் கொடுப்பது ஒன்று. அதற்கு மேலே 250 ரூபாய் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுப்பது என்று சொன்னால், யார் வாரிசுதாரர்கள், யாருக்கு எப்படிக் கொடுப்பது என்பது பற்றிய ஒரு தெளிவான வரைமுறையை தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10.50

1985 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் ராஜ்ய சபாவிலே கைத்தறி மானியத்திலே பேசுகிறபோது 1½ மணி நேரம் பேசினார்கள். கைத்தறிக்கு 22 ரகங்களை அரசியல் சட்டத்தின் 9-வது அத்தியாத்தின் கீழ் ஒதுக்கீடு செய்வதற்கு மத்திய அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அவர்கள் விடுத்த அந்தக் கோரிக்கையை நான் இங்கே வைக்க ஆசைப்படுகின்றேன். குறிப்பாக 22 ரகங்கள் இல்லை என்று சொன்னாலும், உச்சநீதிமன்றத்திலே 11 ரகங்களாவது கொடுக்கப்பட வேண்டுமென்றும் ஒரு தீர்ப்பு வந்து இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர ஆசைப்படுகின்றேன்.

ஒவ்வொரு முறையும் நான் இங்கே பேசுகிறபோது சிட்டாநூல் விலை ஏற்றமும் சிட்டாநூல் கிடைக்காமல் போவது பற்றியும் அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி இருக்கின்றேன். போன வருடம் ஜுன் மாதத்திலே புரட்சித் தலைவி அவர்கள் தனியார் துறை நெசவாளர்களுக்கு 2 ஆயிரம் பேருக்கு ஜுன் மாதத்தின் விலையிலே சிட்டா நூல் விநியோகம் செய்தார்கள். அதைப்போன்று இந்த வருடமும் 2 ஆயிரம் பேருக்கு சிட்டா நூலை 15 சதவீதம் குறைந்த விலையிலே நெசவாளர்களுக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கின்றேன். போன வருடம் கருணை குறைவாக இருந்தது. இந்த வருடம் நிச்சயமாக கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கு கருணை பெருக்கெடுத்து ஓடுகிறது. சிட்டா நூலுக்கு உள்ள வரியை—2 சதவீதம் தான் வரி; வேறு எந்த மாகாணத்திலேயும் அப்படிப் பட்ட வரி இல்லை; தமிழகத்திலே மட்டும் அந்த வரியை போட்டு இருக்கிறீர்கள், அந்த 2 சதவீத வரியைக் குறைத்து விட வேண்டும், எடுத்துவிட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த கைத்தறிகளை நவீனமயமாக்கும் திட்டத்தை வரவேற்கின்றேன். அதேநேரத்தில், அரசு வழங்கும் பல்வேறுவித பணத்தை பணமாகக் கொடுக்காமல் கைத்தறி உபகரணங்களாக கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், மாடு வாங்குவதற்கு கடன் வாங்குகிறபோது, ஒரே மாட்டை 10 முறை கொண்டுவந்து காண்பித்து, 10 முறை கடன் வாங்குவது போல, கைத்தறி உபகரணங்கள் வாங்குகிறோம் என்று சொல்லி, ஒரே உபகரணத்தை கொண்டுவந்து 10 முறை காண்பித்து 10 முறை பணம் வாங்குவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, அதைத் தடுப்பதற்கு, அவர்களுக்கு உபகரணங்களை அளிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.



ஜாக்கார்டு தறி ஒன்றுக்கு தற்போது வழங்கப்படுவது 4 ஆயிரம் ரூபாய். அது கொஞ்சங்கூட போதாது. அதை 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் துறை மில் முதலாளிகள் கண்டிப்பாக 50 சதவீதம் சிட்டா நூலை தயாரிப்பதே கிடையாது. கண்டிப்பாக அவர்கள் 50 சதவீதம் சிட்டா நூலை தயார் செய்யவில்லை என்று சொன்னால், அந்த மில்லுக்கு நீங்கள் ஒரு பெருத்த அபராதம் விதிக்க வேண்டும்; பெருத்த அளவிற்கு அவர்கள் மீது அரசாங்கம் வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொன்று, கைத்தறியைப் பற்றி நான் பேசுகிறபோது இந்த சிட்டா நூலை பற்றியும் மற்றவைகளைப் பற்றியும் நாம் பேசுகின்றோம். ஆனால், கைத்தறி நெசவாளர்கள் ஏற்றுமதி செய்தால். யார் அதிகமாக ஏற்றுமதி செய்கிறார்களோ அவர்களுக்கு அரசாங்கம் பரிசு வழங்குகிறது. தமிழகத்திலே இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிற துணியின் அளவு 250 கோடி ரூபாய். ஆனால், அதிலே 4 கோடி ரூபாய் தான் கூட்டுறவுத் துறையிலே இருந்து ஏற்றுமதி செய்கிறார்கள். மிச்சம் 246 கோடி ரூபாய்க்கு தனியார் துறையிலே உள்ளவர்கள் தான் ஏற்றுமதி செய்கிறார்கள். ஆனால், தனியார் துறையிலே உள்ளவர்களுக்கு நூலின் விலை, 40 ஆம் நம்பர் நூலை எடுத்துக் கொண்டால் அதனுடைய விலை சுமார் 325 ரூபாய்தான். ஆனால், கூட்டுறவுத் துறையிலே நெய்கின்றவர்களுக்கு 300 ரூபாய். 300 ரூபாய்க்கு நூல் கொடுத்து, 4 கோடிக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். 325 ரூபாய் நூல் விலை கொடுத்து 246 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கிறார்கள் என்றால், தனியார் துறைக்கும் அதே விலையில் நூல் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதோடு நெசவுத் தொழிலுக்குள்ள உபகரணங்களுடைய விலையை குறைத்தாக வேண்டும். அங்கே மருந்து தெளிக்கிறார்கள் என்றால் கொசு போய் விடுகிறது. உடனே அதற்கு தனியாக சர்டிபிகேட் வாங்க வேண்டும். பொலூஷன் கன்ட்ரோல் போர்டிலிருந்து சர்டிபிகேட் வேண்டுமென்று சொல்கிறார்கள். சரியானமுறையில் அது இல்லாமல் இருக்கிறது.

முற்பகல் 10-55

கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் இயங்குவதற்கு ஒரு உயர்தரக் குழுவை அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக நீங்கள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகிற நூலின் தரம் மற்ற

மில்களின் தரத்தைப் போல இருக்க வேண்டும். தனியார் துறையில் இருப்பவர்கள் எந்த அளவுக்கு நூலை தயாரிக்கிறார்களோ, அந்த அளவுக்கு, அந்தத் தரத்தைப் போல கூட்டுறவு நூற்பாலைகளிலும் தயாரிக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கத்தினுடைய நெசவு கொள்கையில் மிகத் தீவிரமான முறையில் செயல்பட வேண்டும். இந்தியாவில் அதிகமாக கைத்தறியை நம்பியிருப்பது தமிழகத்தில் தான். பெருமை பெறுவதும், புகழ் பெறுவதும் தமிழகத்தினுடைய கைத்தறி நெசவாளர்கள் தான். எனவே, இந்த கைத்தறி மானியத்தில் இன்றையதினம் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கங்களை கைத்தறி நெசவாளர்கள் மனதார, வாயாரப் பாராட்டுவார்கள் என்பதைக் கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. வெ. பழனிசாமி.

<u>திரு. வெ. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பை அளித்த உங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறி துறை என்பது திராவிட இயக்கத்தின் உணர்வோடு ஒட்டிய துறை என்பதை நாம் மறந்துவிட முடியாது. எப்படி காந்தியை நினைக்கிற நேரத்தில் நாம் கதரை நினைக்கிறோமோ, அதைப் போல கைத்தறி என்று சொன்னவுடன் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நமக்கு ஞாபகத்திற்கு வரும் திராவிட இயக்கம் துளிர்விட்ட நேரத்தில், நலிவடைந்த கைத்தறி நெசவாளர்களுடைய துணிகள் தேங்கிக் கிடந்த நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் தலையில் வைத்து தெருத் தெருவாக விற்று, கைத்தறி நெசவாளர்களுடைய துயரங்கள் போக்கப்பட வேண்டுமென்று அதை செய்து காட்டியதும், அதையொட்டி இன்று வரையில் அமைச்சர்களாக இருந்தாலும், தலைவர்களாக இருந்தாலும், மாலைக்கு பதிலாக கைத்தறித் துணியை மாலையாகப் பெற்றுக் கொள்வதும், அப்படிப் போடுவதன் மூலமாக அந்தத் துணியை நெய்கிற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலிருந்து தொன்று தொட்டு இருந்து வருகிற பழக்கமாகும். ஆகவே, கைத்தறி என்றால் பேரறிஞர் அண்ணா அவர்களும், கதர் என்றால் மகாத்மா அவர்களும் நினைவுக்கு வரக்கூடிய அளவுக்கு, இன்றைக்கு சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கைத்தறி



ஆள்கிறது, எதிர்க்கட்சியாக கதர் இருக்கிறது என்று கூட சொல்லலாம். அந்த அளவுக்கு திராவிட இயக்கத்தின் உணர்வோடு ஒட்டிய இந்த கைத்தறி துறையை இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில் மிகுந்த சிறப்போடு துளிர்விடக்கூடிய அளவிற்கு பல்வேறு செயல் திட்டங்களை முதல்வர் அவர்கள் அறிவித்து இருப்பதை நாம் தெளிவாகப் பார்க்கிறோம். கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கையில் உள்ள துயரங்களுக்கு நிரந்தரமாக தீர்வு காண வேண்டுமென்று சொன்னால், கைத்தறித் துறையைப் பொறுத்த வரையில் அதை நாம் அதிகமாக ஏற்றுமதி செய்வதும், துணி களைத் தரமாக உற்பத்தி செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்கு வதும் அவசியம் என்ற முறையில், அந்த எண்ணத்தின் அடிப் படையில் தான் செயல்பட வேண்டும். கடந்த கால ஆட்சியில் கைத்தறி நெசளாளர்களுக்கு கொடுக்கப்பட்ட சிட்டா நூலி னுடைய தரம் மிக மோசமாக இருந்ததன் விளைவாக அவர்கள் மிகுந்த சிரமத்திற்கு இடையே தொழிலை மேற்கொள்ள வேண்டி யிருந்தது. ஆனால், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்கு பின்னால், இன்றைக்கு கைத்தறியினுடைய சிட்டா நூல்களை உற்பத்தி செய்கிற கூட்டுறவுத் துறைகளை நவீனமயமாக்கி, நல்ல தரமான பஞ்சுகளைத் தந்து, அதன்மூலம் தரமான சிட்டா நூல்களைக் கொடுப்பதன் மூலமாக, சிறந்த துணிகளை உற்பத்தி செய்கிற வாய்ப்பையும், அதை ஏற்றுமதி செய்யக்கூடிய நல்ல திட்டத்தையும் இந்த அரசு உருவாக்கி இருக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி என்பது நெசவுத் தொழிலாளர்களுக்கு பொற்கால ஆட்சி என்று எடுத்துக் காட்டுகிறவகையில்தான், நெசவுத்தொழிலாளர்களுடைய குடும்பங் களுக்கு மாத ஓய்வூதியமாக 250ரூபாய் என்றும், அவர்களுடைய குடும்பத் தலைவர் இறந்துவிட்டால் 15,000 ரூபாய் என்றும், அறிவித்து தமிழகத்தில் உள்ள நெசவாளர் குடும்பங்களில் விளக்கு ஏற்றுகிறவகையில் மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி செயல்படுகிறது என்று நெசவாளர் தொழி லாளர்கள் கூறுவது கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கிறது. இன்றையதினம் கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில், நெசவுத் தொழிலாளர்களுக்கு சரியான கூலி உயர்வு அளிக்க அந்த மாவட்ட அளவில் இருக்கிற அதிகாரிகளைக் கொண்டு முடிவெடுத்துக் கொள்ளலாம் என்ற உத்தரவு இந்த அரசு ஏற்பட்டதற்கு பின்னால்தான் உருவாக்கப்பட்டது. அங்கேயிருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ற முறையில் கூலி உயர்வு பெறக்கூடிய நல்ல வாய்ப்பும் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. நெசவாளர் களுக்குத் தரமான நூல்களைத் தரவேண்டும். அதேபோல், கைத்தறியை விசைத்தறியாக மாற்றுவதும், கைத்தறித் துறையில் ஏற்றுமதியை அதிகமாகக் கொண்டு வருவதும், என்கிற நிகழ்ச்சி

[திரு. வெ. பழனிசாமி] [1992 ஏப்ரல் 7

எதிர்காலத்திலே கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில், பெருமளவிற்கு உள்நாட்டு வியாபாரத்திலும், வெளிநாட்டு வியாபாரத்திலும் ஒரு உன்னதமான இடத்தை அடைவதற்கு உண்டான வாய்ப்பு இன்றைக்கு உருவாக்கப்பட்டு இருக்கிறது.

முற்பகல் 11-00

பொதுவாக கைத்தறித் துறையினுடைய வளர்ச்சி என்பது, கூட்டுறவுத் துறையிலே உள்ள, நூற்பாலைகளிலிருந்து கொடுக்கப் படுகிற சிட்டா நூல்களினுடைய தரத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பதை, அடிப்படைக் கருவியாக அதுதான் இருக்கிறது என்பதை நாம் தெளிவாக உணர்கிறோம். அந்த வகையிலே கைத்தறித் தொழிலுக்குத் தேவையான, தரமான சிட்டா நூல்களைப் பெறுவதில்-அதற்கேற்ற பஞ்சுக் கொள்முதலை கடந்த காலத்தினுடைய அரசினுடைய தவறான கொள்கையி னுடைய அடிப்படையிலே உருவாக்கப்பட்டதால் அந்த நூலினுடைய தரம் மோசமாக இருந்தது. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், முடிந்தவரையில், அதிலே தனி கவனம் செலுத்தி, நல்ல தரமான பஞ்சுகளைப் பெறுவதற்கு உண்டான சூழ்நிலை உருவாக்கப்பட்டு இருக்கிறது. இந்த நேரத்திலே நான் ஒரு யோசனையை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் நாம் பஞ்சுகளைக் கொள்முதல் செய்கிற நேரத்தில் அரசினுடைய நாணயமான, நல்ல உயர் அதிகாரிகளைக் கொண்டு, தரமான பஞ்சுகளை ஆண்டுக்கு ஒருமுறை கொள்முதல் செய்து, அந்தத் தரமான பஞ்சு கிடைப்பதன் மூலம், நல்ல நூலை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு நமக்குக் கிடைக்கும். அதைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே பஞ்சு உற்பத்தியைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தினுடைய மத்திய அரசு செய்த தவறான நடவடிக்கை களின் காரணமாக நாம் ஏற்றுமதிக்கு பஞ்சுகளை அனுப்பியதி னுடைய விளைவு. இன்றைக்கு நூல் விலை கடுமையாக உயர்ந்து இருக்கிறது. ஆனால், இன்றைக்கு மத்திய அரசு 7 லட்சம் பேல் பஞ்சுகளை இறக்குமதி செய்திருக்கிறது என்ற இனிப்பான செய்தியைத் தந்திருக்கிறார்கள். கடந்த முறை சட்டப் பேரவையிலே நாங்கள் சொல்கிறநேரத்தில், பஞ்சினுடைய ஏற்று மதியால், கடுமையாக பாதிக்கப்பட்டு இருப்பதை இங்கே பேசுகிற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதினுடைய விளைவு, மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள்,ஏற்றுமதி செய்யக் கூடாது, மூலப்பொருட்களை என்பதை எடுத்துக் காட்டியதி னுடைய விளைவு, இன்றைக்கு 7 லட்சம் பேல் பஞ்சுகளை இறக்குமதி செய்யக்கூடிய அளவிற்கும், இனிமேல், எந்தச் சூழ் நிலையிலும், மூலப்பொருளான பஞ்சு ஏற்றுமதி என்பதை மத்திய அரசு உருவாக்கக்கூடாது. அதன் மூலமாக நூல் விலை அடிக்கடி



1992 ஏப்ரல் 7] [திரு. வெ. பழனிசாமி]

உயர்கிற வாய்ப்பும், சூழ்நிலையும் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், தரமான பஞ்சுகளைக் கொடுப்பது மட்டு மல்லாமல், இன்றைக்கு நூற்பாலைகளைப் பொறுத்தவரையில், 18 நூற்பாலைகள் இருந்துகொண்டு இருக்கின்றன. அந்த 18 நூற்பாலைகளில், 12 நூற்பாலைகளை சுமார் 25 கோடி ரூபாய்ச் செலவில், நவீனமயமாக்கப்படவேண்டும், எதிர்காலத்தில், 5 ஆண்டுக் காலத்தில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு இருக்கிறது. அதன் முதல்கட்டமாக 7 கோடி ரூபாயில் நவீனமயமாக்கப் படுகிற சூழ்நிலை உருவாக்கப்படுவதினுடைய விளைவு, தரமான பஞ்சு, தரமான மெஷின்கள் மூலமாக தரமான நூல்கள் கிடைப்பதும், அந்தத் தரமான நூல்கள் மூலமாக நெசவாளர்கள் தரமான துணிகளை தயாரிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கி இருப்பதை இன்றைக்கு அனைவரும் பாராட்டக் கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோல், இன்றைக்கு கைத்தறித் துறையிலே தொழி லாளர்கள் தங்களுடைய வாழ்விலே முன்னேற்றம் அடைய வேண்டும், தொன்றுதொட்டு, அதையே செய்து கொண்டிருக்கக் கூடாது, அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு கைத்தறி நெசவாளர்களை நவீனமயமாக்குகிற முறையிலே, இன்றைக்கு கைத்தறிகளை நவீனமயமாக்க பெரிய திட்டங்களை மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். 1992—93 ஆம் ஆண்டுக்கு 5 ஆயிரம் கைத்தறிகளை விசைத்தறி களாக மாற்றுவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொண்டு இருப்பது, வரவேற்கத்தக்க ஒரு சூழ்நிலை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறியில் மட்டுமல்லாமல், விசைத்தறிகளினுடைய வளர்ச்சிகளில் இந்தியாவிலே இன்றைக்கு முதன்மையாக தமிழகம் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. விசைத் தறிகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழகம் முன்னோடியாக இருக்கிறது. அதிலும், குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், இந்திய நாட்டிலே தமிழகத்திலே உற்பத்தியாகிற விசைத்தறியினுடைய காடாத் துணிகள் தான், தரத்திலே உயர்ந்ததாக இருந்து கொண்டிருக்கிறது.

இன்றைக்கு வெளிநாட்டிலே இருக்கிற வியாபாரிகள் கூட, தமிழகத்தினுடைய விசைத்தறித் துணிகளைத்தான் அதிகமாக விரும்புகிறார்கள். அதிகமாகக் கேட்டு பெற்றுக் கொண்டிருக் கிறார்கள். இன்றைக்கு மகாராஷ்டிரா மாநிலத்தைக் காட்டிலும், தமிழகத்திலே, இந்தத் தொழில் மிகுந்த அளவிலே

[திரு. வெ. பழனிசாமி] [1992 ஏப்ரல் 7

நல்ல முறையிலே வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும், அதே நேரத்தில், இந்தத் தொழிலை வைத்துக் கொண்டு இருப்பவர்கள், சாதாரணமாக ஏழை எளிய விவசாயிகள் அதிகமாக விசைத்தறியைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கோவை மாவட்டத்தில், பல்லடம், சோமனூர், திருப்பூர், அவினாசி போன்ற பகுதிகளில், நீர்வளம் குன்றிய பகுதிகளாக இருக்கிற விவசாயத்திற்கு இணையாக விசைத்தறிகளை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். அப்படி விசைத்தறிகளைப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல், அந்த விசைத்தறிகளின் மூலமாக உற்பத்தியாகிற காடாக்கள் கோவை மாவட்டத்திலிருந்து இந்திய நாடு முழுவதும் செல்வது மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கும் ஏராளமான முறையிலே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

திருப்பூரைப் பொறுத்தவரையில், பொதுவாகச் சொல்வார்கள், பனியன் தொழிலில்தான் வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்று. ஆனால் பனியன் தொழிலில் மட்டும் வளர்ச்சி பெற்றிருக்கிற நகரம் அல்ல, திருப்பூரிலே, இன்றைக்கு விசைத்தறியின் மூலமாக, காடா உற்பத்தியில் மிக அதிக அளவிலே ஏற்றுமதி ஸ்தாபனமாக திருப்பூர் ஒரு மையப் பகுதியாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம் கடந்த முறை, நடைபெற்ற மின்சாரத்தினுடைய கட்டண உயர்வினாலும், உதிரிப் பாகங்களினுடைய விலை உயர்வினாலும், ஏற்பட்ட போராட்ட நடவடிக்கைகளின் காரணமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பேசித் தீர்க்கப்பட்டு, தொழில் அமைதியாக இருந்து கொண்டு இருக்கிற சூழ்நிலையில், எந்தக் காரணத்தைக் கொண்டும், அடுத்த மாநிலத்தைக் காட்டிலும், உற்பத்தி செலவு அதிகம் ஆகாத அளவிற்கு, மின்சாரக் கட்டணம் இனிமேல் உயராத அளவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு கோவை மாவட்டத்தில் நான் மேற்சொன்ன அந்த நான்கு தொகுதிகளிலும் இந்தத் தொழில் மிக அதிகமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. குறிப்பாக கோவை மாவட்டத்தினுடைய திருப்பூர் பகுதியில் 1–1–91 முதல் 31–12–91 முடிய அந்த ஓராண்டு காலத்திற்கு கிட்டத்தட்ட 10.40 கோடி மீட்டர் பேல் துணிகள் ரூ. 130 கோடிக்கும், அதே நேரத்தில் உள்நாட்டு விற்பனைக்கு 14.50 கோடி மீட்டர் பேல்கள் சுமார் ரூ. 167 கோடிக்கும், இப்படி ஆக மொத்தம் சுமார் ரூ. 382 கோடிக்குக் கடந்த ஆண்டு மாத்திரம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.



1992 ஏப்ரல் 7] [திரு. வெ. பழனிசாமி]

இதிலே மொத்தம் 30,000 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். திருப்பூர் தொகுதியிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் துணிகள், அவிநாசி, பல்லடம், சோமனூர் போன்ற பகுதிகளிலிருந்து இன்றைக்கு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆகவே பனியனுக்கு அடுத்தபடியாக திருப்பூர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஏற்றுமதி செய்யப்படக் கூடிய சூழ்நிலை அதிகமாக இருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் இந்தத் தொழிலை மேலும் வளர்க்கக் கூடிய சூழ்நிலை உருவாக்குவோமேயானால், வேலை வாய்ப்பற்ற சூழ்நிலை உருவாக்கப்படும். அதே நேரத்தில் நீர் வளம் குன்றி இருக்கக் கூடிய விவசாயிகள், உட்தொழிலாக இருக்கக்கூடிய இந்தத் தொழிலை பட்டுப் போய்விடாமல் பாதுகாக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

நேற்றைக்கே தொழில் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள திருப்பூர் தொகுதியினுடைய பல்வேறு வளர்ச்சிப் பணிகளை, திருப்பூர் தொகுதி, டெக்ஸ்டைல் பனியன் உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் மேலும் வளம் பெற வேண்டுமென்பதற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஒரு கிளையை திருப்பூர் நகரத்திலே உருவாக்குகின்ற வாய்ப்பை அறிவித்ததற்காக திருப்பூர் தொகுதியினுடைய லட்சக்கணக்கான மக்களின் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே, நேற்றையதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் இ ய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் திருப்பூர் தொகுதியினுடைய அடிப்படை வசதிகளுக்காக மத்திய அரசினுடைய உதவியைப் பெற்று, அந்த அடிப்படை வசதிகளைச் செய்வதற்கான உத்தரவாதத்தைத் தந்தார்கள். கடந்த 20, 30 ஆண்டுகளாக திருப்பூர் தொகுதியினுடைய நலம் மிக்க தொழில் வளமான திருப்பூரில் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற அந்த நகரத்தில் அடிப்படை வசதிகளே இல்லாமல் குன்றிப் போய்க் கிடப்பதை இதுவரை எந்த அரசும் சரியாகக் கவனிக்கவில்லை. இதய தெய்வம் அவர்கள் தொழில் முன்னேற்றத்தை உருவாக்க வேண்டும். தொழில் வளம் மிக்க அந்தப் பகுதிகளில் எல்லாம் அடிப்படை வசதிகளை உருவாக்க வேண்டுமென்று சொல்லி, தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் குழுவின் மூல ஒரு தனி நிறுவனத்தை உருவாக்கி, தமிழகம் முழுவதும் தொழில் மாக துறையில் இருக்கின்ற பல்வேறு பகுதிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்க வேண்டுமென்பதற்காக திட்டமிட்டதை எதிர்காலத்தில். தொழிலாளர்கள் ஆகட்டும், தொழில்துறையைச் சார்ந்தவர்கள் ஆகட்டும், என்றென்றும் காலம் காலமாக நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

[திரு. வெ. பழனிசாமி] [1992 ஏப்ரல் 7

திருப்பூர் நகரத்தில் ரூ. 246 கோடிக்கு நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக திருப்பூர் நகரத்தைச் சுற்றி, ரிங் ரோடுகளும், அதேபோன்று சிட்கோவைச் சுற்றி சாலைகளும், நகராட்சிக்கு அருகில் சுரங்கப் பாதைகளும், அதேபோன்று இணைப்புச் சாலைகளும், திருப்பூர் நகரத்தில் சாக்கடைகள் அமைப்பதற்கும், நொய்யலாற்றிலே பாலம் கட்டுவதற்கும் சாலைகள், மின் விளக்குகள் அமைப்பதற்கும், மூன்றாவது குடிநீர்த் திட்டத்தை உருவாக்குவதற்கும் சுமார் ரூ. 246 கோடிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சியில், அவர்களால் உருவாக்கப்பட்ட திருப்பூர் டெவலப்மென்ட் கமிட்டி சிபாரிசு செய்கின்ற அந்தத் திட்டங்களை எதிர்காலத்தில் நாம் மத்திய அரசோடு கலந்து பேசி கிடைக்கக்கூடிய வாய்ப்பை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கையோடு இன்றைக்கு திருப்பூர் தொகுதி மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு திருப்பூர் தொகுதியில் பனியன் தொழில் மட்டுமல்ல. விசைத்தறி மென்மேலும் செழிப்படையக்கூடிய அந்தத் தொழில் நகரத்தில் இந்த அடிப்படை வசதிகளைச் செய்து தருவதன் மூலமாக, இன்னும் பல இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், இந்தத் தொழில் இன்னும் ஆழமாகக் கால் ஊன்றுகிற ஒரு நல்ல வாய்ப்பையும், எதிர்காலத்தில் உருவாக்குவதற்கு உண்டான நல்ல சூழ்நிலை இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் வளம் மிக்க தொழில் நகரத்தை மேலும் தமிழகத்தில் உருவாக்க வேண்டுமென்பதற்காக, இந்தச் சமுதாயத்திற்கு நாம் என்ன செய்தோம் என்பதைக் காட்டிலும் எதிர்வரும் சமுதாயத்திற்கு நாம் என்ன சாதிக்கப் போகிறோம் என்பதைத் திட்டமிட்டு செயலாற்றுகிற மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்த அடிப்படை வசதிகளை இந்தக் கொள்கைக் குறிப்பேட்டில் குறிப்பிட்டதைப்போல செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு தமிழகத்திலே மேலும் நூற்பாலைகளைப் புதிதாக உருவாக்குவதற்கு உண்டான நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருகிறது. சேலத்திற்குப் பக்கத்தில் திருச்செங்கோட்டில் இருக்கக்கூடிய பகுதிகளிலிருந்து ஏராளமான பஞ்சுகள் இன்றைக்கு வந்துகொண்டிருக்கின்றன. தமிழகத்தில் பஞ்சினுடைய மொத்தக் கொள்முதல் செய்யக்கூடிய அந்தப் பகுதியில் இருக்கின்ற இடங்களிலிருந்து திருப்பூர் தொகுதியினுடைய பனியன் தொழிலுக்குத் தேவையான ஓசியரி நூலைக் கொண்ட ஒரு நூற்பாலையை அமைத்து, ஓசியரி நூல் கிடைப்பதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் இன்றைக்கு நூல் விலை என்பது



1992 ஏப்ரல் 7] [திரு. வெ. பழனிசாமி]

யாருடைய கட்டுப்பாட்டிற்கும் இல்லாமல் அதிகமாக ஏறிக் கொண்டே இருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். திருப்பூரிலே பனியனுக்காகட்டும், டெக்ஸ்டைல் தொழில்களுக்கு ஆகட்டும், அடிப்படைப் பொருளாக இருக்கிற அந்த நூலின் விலையைத் தாறுமாறாக 3 மாதத்திற்கு ஒரு முறை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த முறை பஞ்சின் விலை குறைவாக இருந்த நேரத்திலும் கூட நூலின் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனால் பல்வேறு சிரமங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. காரணம் வெளிநாடுகளிலேயிருந்து நாம் ஏற்றுமதிக்கான ஆர்டர்களைப் பெறுகிற நேரத்திலே ஒரு விலை இருக்கிறது. அந்த ஆர்டரைப் பெற்று உற்பத்தி செய்கிற நேரத்திலே ஒரு விலையாக இருக்கிறது. நாம் ஆர்டரை அனுப்புகிற நேரத்திலே நூலின் விலை உயர்ந்து விடுகிறது. இடையிலே நாம் ஏற்கெனவே எடுத்த ஆர்டரின் பிரகாரம்பனியனையும், காடா துணிகளையும் ஏற்றுமதி செய்ய வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுவதால் இடையிலே விலை உயர்வால் பாதிக்கப்படுவது இங்கே இருக்கிற தொழிலாளர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-10

எந்த விலையாக இருந்தாலும்—ஒரு விலை என்பது இரண்டாண்டுகள் அல்லது ஒரு ஆண்டுக்கு ஒரு முறை ஏறக்கூடிய நிலைமை இருக்குமேயானால் எந்தவித பாதிப்பும் அதிகமாக ஏற்படாது. ஆகவே அரசு நூல் விலையை உயர்த்துகிற நேரத்திலே அரசு தரப்பிலும், பஞ்சாலைத் தரப்பிலும், அதே போல அங்கிருக்கிற பனியன் தொழில் அதிபர்கள் தரப்பிலும் ஆக மூன்று பேரையும் கலந்து விலையை ஆண்டுக்கு ஒரு முறை என்று நிர்ணயிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகுமானால் எதிர்காலத்திலே இப்படிப்பட்ட தர்ம சங்கடமான சூழ்நிலை உருவாகாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, பஞ்சைப் பொறுத்தவரையில் நல்ல தரமான பஞ்சைக் கொடுப்பதைப் போல தரமான நூல்களைக் கொடுப்பதைப்போல, நிரந்தரமான ஒரு நல்ல விலையை கிடைக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் கூட்டுறவு நூற்பாலை ஒன்றை பர்கூர் தொகுதியிலே அமைக்கப்படுவதாக இங்கே குறிப்பேட்டிலே வைக்கப்பட்டிருக்கிறது. கடந்த முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அன்னையார் அவர்களுடைய பெயரை இதற்கு வைக்கப் போவ

தாகக் குறிப்பிட்டிருந்தார்கள், ஆனால், இன்றைக்குப் பார்த்தால் அந்தப் பெயர் பற்றி ஒன்றுமே இல்லை. திராவிட இயக்கத்தினுடைய மூன்றாவது தலைமுறையை உருவாக்கி எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை ஈன்றெடுத்த அந்த அன்னையாருடைய பெயரை வைக்க வேண்டும். அதேபோல், எங்களுடைய சிறிய ஆசையையும் இந்த நேரத்திலே அமைச்சரிடத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த நாற்பாலையைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பெயரை வைக்கின்ற நேரத்திலே அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வினுடைய அனைத்துத் தொண்டர்களும் அதிலே பங்கு எடுத்துக் கொண்டு, ஷேர் போட்டு அவர்களும் சேர்ந்து இயக்கக்கூடிய அளவுக்கு ஒரு வாய்ப்பினை அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, திருப்பூர் நகரத்தினுடைய பனியன் காடா துணிகளுடைய ஏற்றுமதியைத் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்தத் தொழில் சிறப்பு சேர்க்கக்கூடிய அளவுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருகிற ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த— இந்தக் கொள்கைக்குறிப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

## 6. விதி 110-ன் கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை.

பாடப் புத்தகங்கள் பயன்படுத்தப்படாமல் அதிக அளவில் தேங்கிக் கிடப்பதாக 5-4-1992 ஆம் நாளைய இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்துள்ள தவறான செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை இப்போது அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-4-1992 நாளிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தித்தாளில் 3.5 கோடி ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் ஓரே பதிப்பாளரிடமிருந்து ஒப்பந்தப் புள்ளி கோரப்படாமல் பள்ளிக் கல்வி இயக்குநரால் வாங்கப்பட்டு உபயோகப் படுத்தப்படாமல் போரூரில் உள்ள கிடங்கு ஒன்றில் வைக்கப் பட்டுள்ளதாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அச்செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. பள்ளிக் கல்வி இயக்குநரால் 3.5 கோடி ரூபாய் மதிப்பிற்கு ஒரே பதிப்பாளரிடமிருந்து புத்தகங்கள் வாங்கப்படவில்லை. போரூரில் புத்தகக் கிடங்கும் இல்லை.



மைய அரசின் முழு உதவியுடன் செயல்பட்டுவரும் அறிவியல் கல்வி முன்னேற்றத் திட்டத்தின் கீழ் 1987-88-ல் 83.55 லட்சம் நிதி உதவி பெறப்பட்டு 82.47 லட்சம் செலவு செய்யப்பட்டது. 1988-89 ஆம் ஆண்டில் இதற்கு முன்னாலே இருந்த அரசு 180.6 லட்சம் நிதி உதவி பெறப்பட்டு 167.08 லட்சம் செலவு செய்யப்பட்டது. 1990-91 இல் மூன்றாவது கட்டத்தில் 35.02 லட்சம் ரூபாய் உதவி பெறப்பட்டு புத்தகங்கள் தேர்வுக்காக அறிவிப்பு செய்த செய்தி, செய்தித்தாளில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட செய்தியில் வேறு சில குற்றச்சாட்டுகளும் கூறப்பட்டுள்ளன. முதல் கட்டத்தில், வெளிநாட்டில் அச்சிடப்பட்டு எசன்ஷியல் சைன்ஸ் பிசிக்ஸ் என்ற புத்தகத்தினை சப்ளை செய்வதற்காக வெளியீட்டாளர், வெளிநாட்டு விலைப் பட்டியலைக் கொடுத்துவிட்டு புத்தகங்களை வெளிநாட்டிலிருந்து பெறாமல் உள்நாட்டிலேயே அச்சிட்டு சப்ளை செய்த வகையில் பெரும் அளவுக்கு லாபம் ஈட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இரண்டாவது, ஒப்பந்தப்புள்ளி பெறாமல் புத்தகங்கள் வாங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வுகள் இவ்வரசு பதவிக்கு வந்ததற்கு முன் நிகழ்ந்தவையாகும். இக்குற்றங்கள் குறித்து அரசு தீவிரமாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும்— (தொடர்ச்சி).

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கைத்தறி மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு அனுமதி தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக கூட்டுறவுத் தேர்தல் மே மாதம் நடைபெறும் என்று அறிவித்திருந்தாலும், எந்தவிதக் காரணமும் காட்டி தள்ளிப் போடாமல் அந்தத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் தேர்தல் என்று கூறுகின்றபோது அந்தச் சங்கங்களிலே எந்தவிதமான அனுபவமும் இல்லாமல் அந்தத் தொழிலே தெரியாமல் பல நபர்கள் எல்லாம் இன்றையதினம் அதில் அங்கத்தினர்களாக புகுத்தப்பட்டு வருவதாக அறிகிறேன். அதை அரசு விசாரித்து அதுபோன்ற

நபர்களை விடுவித்து உண்மையாக அந்தத் தொழிலிலே ஈடுபட்டு
ருக்கக் கூடியவர்கள் அனுபவம் உள்ளவர்கள், அதை நடத்தக்
கூடியவர்கள், திறமைவாய்ந்தவர்களைப் பயன்படுத்தி அந்தத்
தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
பொதுவாக தமிழ்நாட்டிலே 35இலட்சம் கைத்தறி நெசவாளர்கள்
இந்தத் தொழிலை நம்பி வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். 35
இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் என்று கூறுகின்றபோது
அவர்களைச் சார்ந்திருக்கக்கூடிய குடும்பத்தினர் அனைவரையும்
சேர்ப்போமானால் ஏறத்தாழ 1 கோடி அளவிற்கு இந்தத்
தொழிலை நம்பி வாழக்கூடிய சூழ்நிலை தமிழகத்தில் இருக்கிறது.
அப்படிப்பட்ட ஒரு தொழில் நசிந்து விடாமல் அதில் ஈடுபட்டு
இருக்கக்கூடியவர்கள், தொழிலாளர்கள் வாழ வேண்டும்
என்பதற்காக ஒரு குறைந்தபட்ச பொருளாதாரத்திற்கு உத்திர
வாதம் ஏற்பட வேண்டும் என்பதற்காக தொடர்ந்து பல
முயற்சிகள் எடுத்தார்கள். முன்னாள் முதல்வர் மாண்புமிகு
எம்.ஜி.ஆர். அவர்கள். அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்
திற்காக பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். 1981-ல்
வேலை, அதனுடைய நிலைமைகள், அவர்களுடைய பொருளாதார
வாழ்க்கை சம்பந்தமாக பல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.
ஆனால், 1981 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்ட அந்தச்
சட்டம் இதுநாள் வரையிலும் அமல்படுத்தாமல் ஏட்டளவிலே
இருக்கிறது. இதற்கு அடிப்படையான காரணம், சட்டம் நாம்
கொண்டு வருகின்றபோது அதை நிறைவேற்றுவதற்கான அதிகாரி
களையும் நாம் நியமிக்க வேண்டும். அப்படி அதிகாரிகள்
நியமிக்காத காரணத்தினால் அந்தச் சட்டத்தை அமல்படுத்த
முடியாமல் கிடப்பிலே போடுகின்ற சூழ்நிலை இருக்கிறது.
எனவே, அந்தச் சட்டத்தை மீண்டும் அமல்படுத்துவதற்கு விரை
வாக அந்தத் துறைகளிலே அதிகாரிகளை நியமிக்க வேண்டும்
என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதே
நேரத்தில் அப்படி கொண்டுவரக்கூடிய சட்டம் கூட்டுறவுத்
துறைக்குப் பொருந்தாது என்று சொல்லியிருந்தாலும் அதிலே
திருத்தம் கொண்டு வந்து கூட்டுறவுத் துறைக்கும் அந்தச்
சட்டங்கள் பொருந்தக்கூடிய அளவுக்கு கொண்டுவர வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி 1948-ஆம் ஆண்டில்
தமிழக அரசு இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்காக ஒரு
குறைந்தபட்ச கூலிச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தக்
கூலிச் சட்டம் அமல்படுத்தப்படாமல் கிடப்பிலே போடப்பட்டது.
மீண்டும் 1983 ஆம் ஆண்டும், 1989 ஆம் ஆண்டும் ஒரு சட்டம்
கொண்டு வந்து—1983 ஆம் ஆண்டு கொண்டு வந்த சட்டத்தி
னுடைய அரசு ஆணை எண். 1017, நாள் 19–4–1983. அது
போன்று 1989 ஆம் ஆண்டு கொண்டு வந்த அந்த சட்டத்தி
னுடைய அரசு ஆணை எண். 1249, நாள் 26–6–1989 ஆகும்.
அரசாங்கம். அரசு இதழிலே பிரசுரித்தது. ஆனால் அப்படி





பிரசுரிக்கப்பட்ட அந்தச் சட்டத்தை அமல்படுத்தாமல் இருப்ப
தற்கு கோர்ட்டிலே உயர் நீதிமன்றத்திலே தடை வாங்கியிருக்
கிறார்கள். அப்படித் தடை வாங்கிய அந்தத் தடையை எதிர்த்து
வழக்கு நடத்தி, சட்டத்தை அமல்படுத்துவதற்கு அது சம்பந்தப்
பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தாத அல்லது முன்னுக்கு
வராத காரணத்தினால் அந்தச் சட்டம் முழுமையும் அமல்படுத்
தப்படவில்லை. அதனால் எந்தத் தொழிலாளர்கள் வாழ
வேண்டும் என்பதற்காக ஒரு பொருளாதார விடுதலை
பெறவேண்டும் என்பதற்காக குறைந்தபட்ச ஊதிய சட்டத்தைக்
கொண்டு வந்தார்களோ அதை அமல்படுத்தாமல் இருப்பது
என்பது, அதை அமல்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசு
எடுக்காமல் இருப்பது என்பது மிகவும் வருந்தத்தக்கது ஆகும்.
எனவே இனியும் காலம் கடத்தாமல், அதுபோன்று இருக்கின்ற
தடைகளை நீக்குவதற்கு விரைவாக அரசு நடவடிக்கை எடுத்து
எதிர்த்து வழக்காட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன். அதே நேரத்தில், பொதுவாக ஒரு குறைந்த பட்ச
கூலிச்சட்டம் அறிவிக்க வேண்டுமென்று சொன்னால் இந்திய
அரசியல் சட்டத்திலே ஒன்பதாவது பிரிவிலே, அந்தப் பட்டி
யலிலே சேர்க்கப்பட்டு அதன்மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.
இதுவரையில் அப்படி இந்திய அரசியல் சட்டத்தில் 9-வது
பிரிவின் பட்டியலில் இந்த நெசவாளர்கள் சம்பநதப்பட்ட
பிரச்சினைகள் சேர்க்கப்படாத காரணத்தால் ஆங்காங்கே
துண்டு துக்காடியாக இருக்கக்கூடிய பிரச்சினைகளாக மட்டும்
அது இருக்கிறது. ஆகவே, இனியும் காலம் கடத்தாமல்
மத்திய அரசு இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டு
வந்து 9 வது பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

முற்பகல் 11–20

அதேபோல் 22 ரக நூல் மத்திய அரசு
ஒதுக்கீடு செய்திருந்தாலும் கூட அது இதுவரையில் அமல்
படுத்தப்படவில்லை. ஆகவே, அதை அமல் ஆக்காமல் இருப்
பதற்கு தடை வாங்கப்பட்டிருக்கிறது. அதனுடைய விளை
வாக இந்தத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கக்
கூடிய லட்சோப லட்சக்கணக்கான அந்த மக்களுக்கு நன்மை
செய்ய வேண்டுமென்று ஒரு ஏற்பாடாக இருந்தாலும் அது
இன்றைக்கு அமல்படுத்தப்படாமல் இருக்கிறது. அது பயன்
படுத்தப்படாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்
நிலையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே,
அதையும் அமல் ஆக்குகின்ற வகையில் ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நூல் விலை உயர்ந்து கொண்டே போகிறது. அப்படி உயர்ந்து கொண்டே போவதால் அந்தத் தொழிலாளர்கள் வாங்கி உற்பத்தி செய்வதிலே பல்வேறு சிரமங்கள், சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, இதற்கு அரசு ஒரு புதிய சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் கோருவது எல்லாம் ஒரு வங்கி, தனியான வங்கி ஒன்று திறக்கப்பட்டு அதன் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, அதை வினியோகிக்கிற வகையில் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு அதற்குரிய நூல்களை வாங்கி அவர்களுக்கு அந்த அடையாள அட்டை மூலம் பெறுவதற்கு அரசு விரை வாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 'அந்த கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக்கூடிய சில தொழிலாளர்கள் நீண்ட காலமாக பணியாற்றிக் கொண் டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரம் செய்ய ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு அந்த பட்டியலில் எடுத்தவர்களை கூட இது வரையில் நிரந்தரமாக கொண்டு வரப்படவில்லை. உதாரண மாகச் சொன்னால், திருபுவனம் பட்டு சோசைட்டியில் ஏறத்தாழ 20 நபர்கள் நீண்ட காலமாக பணியாற்றிக் கொண் டிருக்கிறார்கள். அவர்கள் அரசு நிரந்தரம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அது அப்படியே கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இதேபோன்று எந்த எந்த கூட்டுறவுச் சங்கங்களில் நிரந்தரமாக இருக்கக்கூடியவர்களை அந்த நிரந்தரம் செய்ய வேண்டும் என்று சொல்லி அரசு பட்டியல் தயாரித்து வைத்து இருக்கிறதோ அவர்களை விரை வாக நிரந்தரம் ஆக்குவதற்கு அரசு முன்னுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காயிதே மில்லத் மாவட்டம் என்பது விவசாயத் தைத் தவிர வேறு வழியில்லாத மாவட்டம், ஆனால் இப் போது கொஞ்சம் கொஞ்சப் பகுதிகளில் பருத்தி உற்பத்தி ஆவதற்கான நடவடிக்கையில் பருத்தி போர்டு ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றது. அங்கே நெல் விவசாயம் தான், வேறு ஒன்றும் இல்லை. ஆகவே, அதைச் சுற்றியுள்ள மற்ற பகுதிகளில் எல்லாம் நிறைய பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே, அதை மூலப்பொருளாகக் கொண்ட நூற்பாலையை காயிதே மில்லத் மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத் தொழிலை நம்பியிருக்கக் கூடிய மக்களுக்கு ஒரு மாறுதல் ஏற்படுத்தி அந்த ஆலைகளில் விலை கிடைக்கின்ற வகையில், படித்தவர்களுக்கு வேலை



கிடைக்கின்ற வகையில் ஒரு வாய்ப்பை உருவாக்குகின்ற வகை யில் காயிதே மில்லத் மாவட்டத்தில் நூற்பாலைகளை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அதேமாதிரி பஞ்சை முழுமையாக அரசே நேரடியாக கொள் முதல் செய்து அதை கழகத்தின் மூலம் அரசு ஆலைகளுக்கு வழங்க வேண்டும். இன்றைக்கு நாம் எவ்வளவு பஞ்சை உற்பத்தி செய்தாலும் இன்றையதினம் கொள்முதல் செய் தாலும் அது தனியாரால் ஏலம் போட்டு விற்கப்படுகிறது, அவர்கள் மூலம் ஆலை வாங்கக்கூடிய ஒரு நிர்பந்தம் என்பது இருக்கிறது. எனவே, அரசு நேரடியாக பஞ்சை கொள்முதல் செய்து அந்த பஞ்சை கழகத்தின் மூலம் நமது அரசுக்குச் சொந்தமான ஆலைகளுக்கு தேவையான பஞ்சை அது வழங்கி தரமான நூல் உற்பத்தி செய்து அந்தத் தொழிலை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதேபோன்று ஜரிகையில் இன்றையதினம் பல்வேறு விதமான ஜரிகைகள் தயாரிக்கப்படுகின்றன. வெளிமாநிலங்களிலிருந்தும் வாங்கக்கூடிய சூழ்நிலையும் நமக்கு இருக்கிறது. நம்முடைய அரசுக்குச் சொந்தமான அந்த ஜரிகை ஆலை போதுமானதாக இல்லை. ஆகவே, அரசு அதில் மேலும் முதலீடு செய்து அந்த ஜரிகை ஆலையை விஸ்தரித்து நல்ல தரமான ஜரிகையை நாம் தயார் செய்து மற்ற மாநிலங்களுக்கு விற்பனை செய்யக் கூடிய அளவுக்கு அதனுடைய தரத்தை உயர்த்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, அடிப்படையான இந்த கோரிக்கைகளை அரசு பரிசீலித்து எதிர்காலத்திலே கைத்தறித் தொழிலை நம்பியிருக்கக்கூடிய ஏறத்தாழ 35 லட்சம் குடும்பங்களை பாதுகாக்க அரசு விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு இந்த கைத்தறி மானியக் கோரிக் கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; திரு. ஆ. செல்லத் துரை.

*திரு. ஆ. செல்லத்துரை: வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 'ஓம்' என்ற சொல் லுக்கும் செயலுக்கும் இலக்கணமாக கோடி இருக்கிறதா என்று பாராமல், கேட்காமல் கொள்கை உடையவர்களா என்று

பார்த்து, லட்சம் இருக்கிறதா என்று பார்க்காமல், கேட்காமல் லட்சியவாதியா என்று பார்த்து என்னைப் போன்ற சாதாரண சாமானியர்களை எல்லாம் இந்த மாமன்றத்திலே அமர வைத்து பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்த எனது காவல் தெய்வம் எங்களின் வாழ்த்துக்கும் போற்றுதலுக்குமுரிய, நாடெல்லாம், தமிழர் வீடெல்லாம் 'எங்கள் அம்மா அம்மா' என்று சொல்லுக்குச் சொந்தமாக்கப்பட்டவரும், உலக அரசியலுக்கு நான் தான் சொந்தக்காரன். ஐக்கிய நாட்டு சபையா; அதிலும் நான்தான்; தமிழர்களின் மரபுகளைப்பற்றி பேசுகின்ற திறமை படைத்தவர் நான்தான் என்று சொன்னவர்களையெல்லாம் சொல்லுக்கு சொல், பதில் பேசமுடியாமல் இந்த மாமன்றத்தில் நாணி குனிந்து, எழுந்து நிற்க முடியாமல் அமர வைத்து இந்த மாமன்றத்தில் தனிப்பெரும் சக்தியோடு ஏக சக்கரவர்த்தியாக திகழ்பவரும் ஐயலங்காட்டு வழியில் அருளாட்சி நடத்தும் எங்களின் அம்மா மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புனித பொற்பாதங்களை எனது ஆனந்தக் கண்ணீரால் துடைத்து எனது இதயத்து மலர்களை தூவி, வாழ்த்தி, வணங்கி என் உரையைத் துவங்குகின்றேன். எங்கள் காவல் தெய்வம். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசால் இந்த மாமன்றத்தில் நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் படிக்கப்பட்ட, 1992-93 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், கைத்தறி மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பை எனக்கு தந்தமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–25

எனது திருச்செந்தூர் தொகுதியில் பரமன்குறிச்சி என்ற ஒரு பெரிய கிராமத்தில் 1,500 வாதிரியார் என்னும் நெசவாளர் குடும்பங்கள் அங்கே நெசவுத் தொழிலை நடத்திக்கொண்டு இருக்கின்றன. இந்த நெசவுத் தொழிலில் இரவு பகலாக அவர்கள் பாடுபட்டாலும் முழுக்க முழுக்க கைத்தறியாக செய்கின்ற காரணத்தால், ஓய்வின்றி பாடுபட்டாலும் 10 ரூபாயிலேயிருந்து சுமார் 12 ரூபாய் வரையில்தான் அவர்களுக்கு அங்கே ஊதியம் கிடைக்கிறது. கிட்டத்தட்ட 600 கைத்தறிகள் அங்கே இருக்கின்றன. அந்தக் குடும்பங்கள் இன்று இருக்கிற விலைவாசியைக் கொண்டு அங்கே குடும்பம் நடத்த முடியாமல் அவர்கள் தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையை மாற்றி அந்த ஏழையெளி மக்களுக்கு விசைத்தறி அமைத்துக் கொடுத்து, அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, அவர்கள் குடியிருக்க வீடில்லாமல் சின்னஞ்சிறு குடிசைகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழையெளிய மக்களின் கண்ணீரைத் துடைக்கின்ற வகையில் அரசு, மானியமாகவோ, இலவசமாகவோ அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் சமுதாயத்திலே மிக மிக பிற்படுத்தப்பட்டவர்கள். அவர்கள் குடும்பங்களில் இருக்கின்ற குழந்தைகள் உயர்ந்த படிப்பிற்கு வரக்கூடிய வாய்ப்பு இல்லாத காரணத்தினாலே, அவர்கள் கல்வித் தரத்திலே மிகவும் பின் தங்கியிருக்கிறார்கள். அவர்கள் கல்லூரி படிப்பு வரைக்கும் இலவசமாக படிப்பதற்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு படிப்பதற்கு தகுந்த வசதி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

குலசேகரபட்டினம் என்ற ஊர் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. அங்கேதான் பாண்டிய மன்னருடைய ஆட்சிக் காலத்தில் குலசேகரபாண்டியன் என்ற ஒரு மன்னன் ஆண்டு கொடிகட்டி, வாழ்ந்து இருக்கிறான், அங்கேதான் மிகப்பெரிய துறைமுகப்பட்டிணம் இருந்தது. அன்று, அங்கே பர்மா, ரங்கூன், இலங்கை போன்ற நாடுகளிலேயிருந்து வருகின்ற சரக்குகளை இறக்கி, ஏற்றி ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார்கள். அப்படி கொடிகட்டி வாழ்ந்த அந்த குலசேகர பட்டினம் இன்றைக்கு பெயரளவிற்கு பட்டினமாக இருக்கிறதே தவிர, மணல் மேடாக காட்சி அளிக்கிறது,

வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்டபொழுது அங்கே மிகப் பெரிய சீனி ஆலை ஒன்று இருந்தது. வெள்ளையர்கள் இந்த நாட்டை விட்டுப் போனவுடன் அந்த சீனி ஆலையை மூடிவிட்டார்கள். ஆகவே, அங்கே வாழ்கின்ற மக்கள் இன்றைக்கு எந்தத் தொழிலும் இல்லாமல், மிகவும் வறுமைக் கோட்டிலே இருந்து, வாடிக்கொண்டு இருக்கிறார்கள், இந்த அவல நிலையைப் போக்குகின்ற வகையில், ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க வந்த நம்முடைய காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே, திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை நாசரேத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற நூற்பாலையில் துணை நூற்பாலை ஒன்றை குலசேகரப் பட்டிணத்திலே அமைத்து, அங்கே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு வேலைவாய்ப்பை கொடுத்து அங்கே அவர்கள் படுகின்ற கஷ்டங்களை நீக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொற்பாதம் பணிந்து, வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய பகுதியில், சிதம்பரனார் மாவட்டம், நெல்லைக் கட்டபொம்மன் மாவட்டம் இவற்றைப் பொறுத்தவரையில், நிறைந்த தொழில் பனையேறும் தொழில் இந்த பனையேறும் தொழில் மிகவும் ஆபத்தான தொழில் ஆகும். இந்தத் தொழிலைச் செய்பவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் எந்த ஒரு அந்தஸ்தும் பெறவில்லை. அந்த மக்களுக்கு பனை ஏறும் தொழிலாளர்களுக்கு ஒரு தனி வாரியம் அமைத்து, அந்த வாரியத்தின் மூலம் அவர்களுடைய வாழ்வு வளம் பெறுவதற்கு இந்த அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

இன்றைக்கு, நெல்லை சிதம்பரனார் மாவட்டத்தைப் பொறுத்தவரை பனை ஏறும் தொழில் மிகவும் முக்கியமான தொழில், அந்தத் தொழில் மிகவும் ஆபத்தான தொழில் என்பதை எல்லோரும் அறிவோம். இந்த மாவட்டங்களில் அந்தத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்குத் தகுதியாக ஒரு வாரியத்தை அமைத்து, அந்த வாரியத்தின் மூலம் அவர்களுக்கு எல்லா வசதி வாய்ப்பையும் நீங்கள் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன், இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலே ஆண்டு கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி, ஏழை எளிய மக்களுடைய கண்ணீரைத் துடைக்கிற ஆட்சி; வறுமைக் கோட்டிலே வாழ்கிற மக்களின் வாட்டத்தைப் போக்குகிற ஆட்சி. இந்த ஆட்சியிலே இன்றைக்கு இந்தக் கைத்தறி பொறுப்பை எடுத்திருக்கிற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களைப் போல சாதாரணக் குடும்பத்திலே பிறந்து, வளர்ந்து இந்த மிகப் பெரிய பொறுப்புக்கு வந்திருக்கிறார்கள். இலாப நட்டங்களையும், கஷ்டங்களையும் எவ்வளவோ உணர்ந்தவர்கள். ஆகவே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில், இந்தக் குறைகளை நீக்கி, என்னுடைய தொகுதிக்கு ஒரு சீரான தொழிலை உருவாக்கித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சமர்ப்பித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

__மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:__ திரு. சோ. பாலகிருஷ்ணன்.

__திரு. சோ. பாலகிருஷ்ணன்:__ பெருமதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய கைத்தறி மானியத்தில் பேசுகிற வாய்ப்பு கிடைத்தமைக்காக உங்களுக்கு



என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறி விசைத்தறி, நூற்பாலைகள் என்று இன்று 3 வகைகளாக கைத்தறித்துறை வளர்ந்திருக்கிறது. இந்த நாடு விவசாய நாடு என்பதை உலகமே அறியும். விவசாயத்திற்கு அடுத்த படியாக கைத்தறி, தமிழகத்தில் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் பல இடங்களில பரவலாக இருக்கிற ஒரு சூழ் நிலை இருக்கிறது. குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு அடுத்தபடியாக, கைத்ததறித் துறை தான் பெரிய துறையாக இன்று வளர்ந்திருக்கிறது. இங்கே 30 லட்சத்திற்கும் மேற்பட்ட நம்முடைய மக்கள், கைத்தறி யிலே ஈடுபட்டிருக்கிறார்கள். கைத்தறி துறையில் இருந்து, விசைத்தறிக்குச் சென்றவர்கள் இன்று வளமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விசைத்தறியின் மூலமாக ஏராளமாக சம்பாத்தியம் செய்துவிட்டு அவர்கள் வெளிநாட்டிற்கு அனுப்பி இந்தியாவிற்கும் அந்நியச் செலவாணியையும் ஈட்டித் தருகிறார்கள். அவர்களுடைய குடும்பங்களிலே நல்ல வாழ்வு ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல, நூற்பாலைகளுக்குச் சென்றவர்கள் கோடிக் கோடியாக வருவாயை ஈட்டி, அவர் களுடைய குடும்பங்களும் இன்று வாழ்வாங்கு வாழ்ந்து கொண் டிருக்கின்றன. ஆனால், இந்தத் துறைக்கே அடிப்படையாக இருக்கிற கைத்தறித் துறையினுடைய நெசவாளர்கள் அவர் களுடைய வாழ்வில் இன்னும் எந்தவிதமான வளமும் ஏற்படவில்லை. நாள்தோறும் அவர்கள வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்களுடைய வாழ்க்கை யில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. உதாரணமாக, எங்களுடைய ராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடியில் பெரு வாரியான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அந்த நெசவாளர்கள் வாழ்வதற்கான வீடுகள் கிடையாது. குடியிருக்க வீடு இல்லாமல் தெருக்களில் நின்று அவதிப்படுகிறார்கள். நோய்வாய்ப்படுகிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கு ஒழுங்கான படிப்பு கிடையாது.

அதேபோல், எங்களுடைய முதுகுளத்தூர் தொகுதியில்கூட 2 கிராமங்கள்தான் கைத்தறி துறைக்கு எடுத்துக்காட்டாக இருந்த கிராமங்கள். ஒன்று, மண்டல மாணிக்கம் என்ற கிராமம். இன்னொன்று நீராவி என்கிற கிராமம். இந்த இரண்டு கிராமங் களிலேயும் நான் 1977-ஆம் ஆண்டு இந்த அவையில் முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக வந்தபோது மிகப் பெரிய வரவேற் பேல்லாம் எனக்குக் கிடைத்த நேரத்தில், அவற்றை எனக்குத் தந்த மக்கள், இப்போது சட்டமன்ற உறுப்பினராகி அந்தக் கிராமங்களுக்குச் சென்ற நேரத்தில், அந்த கிராமங்களேகூட இல்லாத ஒரு சூழ்நிலை அங்கே நிலவிக்கொண்டிருக்கிறது. ஒரு 15 ஆண்டுக் காலத்திற்குள் இவ்வளவு பெரிய மாறுதல் ஏன்

எழுந்தது என்று பார்க்கிற நேரத்தில், அந்தக் கைத்தறியாளர்கள் எல்லாம் வறுமையில் வாடி. பலர், ஊரை விட்டே போய் விட்டார்கள்.

முற்பகல் 11-35

இரண்டாயிரம் கைத்தறி இருந்த நீராவி என்ற கிராமத்தில் இன்று வெறும் 500 தைத்தறிதான் வைத்துக் கொண்டிருக் கிறார்கள். அவர்களும் நாள்தோறும் தங்களுடைய வாழ்நாளைக் கழிப்பதற்கு வறுமையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலைகள் எல்லாம் ஏன் ஏற்பட்டது என்பதனை நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் நன்கு ஆழ்ந்து சிந்தித்திருக்கிறார்கள் என்பது அவர்களுடைய கொள்கைக் குறிப்பிலே இருந்து தெரிகிறது. அவர்களே சொல்லு கிறார்கள். கைத்தறித் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் நாள் தோறும் வறுமையைத்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதைக் குறைத்தாக வேண்டும் என்கிற நல்ல எண்ணத் தோடு கைத்தறித் துறையில் இருக்கிறவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு அதாவது 37,000 கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு நபருக்கு இரண்டு விசைத்தறி மூலம் 10 ஆண்டுகளில் 75,000 விசைத்தறி களைக் கொடுப்பேன் என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லி யிருக்கிறார்கள், இது ஒரு நல்ல சிந்தனை என்பதனை வரவேற் கிறேன். ஆனால் அதே நேரத்தில் நம்முடைய வேகம் மிக்க, விவேகம் மிக்க கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் 10 ஆண்டு காலம் திட்டம் போடுவது என்பது, அது எந்த நாட்டிலேயும், யாருமே போடாத ஒரு திட்டம். நாம் பத்து ஆண்டுகளில் எப்படி இருப்போம். என்ன பண்ணுவோம் என்று சொல்லமுடியாது. ஆகவே, அதை 5 ஆண்டுக் காலமாகக் குறைக்க வேண்டுமென்று நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு 30 இலட்சம் மக்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது 37,000 பேர்களுக்கு மட்டும் 10 ஆண்டுத் திட்டம் போடுவது என்பது ஒரு சரியான திட்டமாக எனக்குப்படவில்லை. ஆகவே, குறைந்தபட்சம், 2 இலட்சம் பேர் களுக்காவது, ஒரு நபருக்கு இரண்டு விசைத்தறி மூலம் 5 ஆண்டு களுள் கொடுக்கின்ற திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலில் இருப்பவர்கள் விசைத்தறிக்கு மாறி அதன் பிறகு அவர்களுடைய வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்பது நம்முடைய கனவு. ஆனால், இன்று கைத்தறி நெசவாளர் களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை, வறுமைகளை ஒழிக்க வேண்டியது நம்முடைய கடமை. கைத்தறி நெசவாளர்களுக்கு முதலில் வீடு கட்டிக் கொடுத்தாக வேண்டும், எப்படி தாழ்த்தப் பட்ட மக்களுக்கு இனாமாக வீடு கட்டிக் கொடுக்கிறோமோ அதைப்போல, கைத்தறித் துறையில் இருக்கின்ற ஏழை எளிய



164975

தொழிலாளிகள் அத்தனை பேருக்கும் அரசு இனாமாக வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த வீடு அவர்கள் கைத்தறி வைத்துத் தொழில் நடத்துகின்ற அளவுக்கு ஒரு வாய்ப்பாக அமைய வேண்டும். அந்த அளவுக்கு அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய கொள்கைக் குறிப்பிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, போதுமான இடங்கள் கிடைக்கவில்லை இது ஒரு பிரச்சினையாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதை ஒரு போர்க்கால அடிப்படையில் எடுத்து எந்த எந்தப் பகுதிகளில் அவர்கள் குடியிருக்கிறார் களோ அங்கே சென்று அங்கே இல்லாவிட்டாலும் பக்கத்தில் ஒரு நகரத்தை அமைத்து, வீட்டோடு கூடிய ஒரு தொழில் தொடங்குகிற நல்ல இல்லங்களை அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அந்தப் பணியினை அவர்கள் செய்ய வேண்டும் என்று நான் அன்புடன்கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மத்திய அரசு கூட கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறது. ஏழை நெசவுத் தொழிலாளர்களுடைய வாழ்வில் ஒரு வளம் ஏற்பட வேண்டுமென்பதற்காக இறக்குமதிக்கான தீர்வை செலுத்தாமல் 2 இலட்சம் பேல்கள் பஞ்சை இறக்குமதி செய்து கொள்ள அனுமதிப்பது என்று சனிக்கிழமையன்று முடிவு செய்தது. வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள அரசு அறிவிப்பு இதைத் தெரிவிக்கிறது. இந்த இறக்குமதிக்கான விதிகளும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளன. நூற்பாலைகள் மட்டுமே இவ்வாறு பஞ்சு இறக்குமதி செய்ய முடியும். அப்படி இறக்குமதி செய்யும் நூற்பாலைகள் கட்டுபடியாகக் கூடிய விலையில் 'சிட்டா நூல்களை' அங்கீகரிக்கப்பட்ட ஏஜென்சிகளுக்குத் தரவேண்டும். தேசிய கைத்தறி வளர்ச்சிக் கார்ப்பரேஷன் மாநில கைத்தறி வளர்ச்சி கார்ப்பொரேஷன் பிராந்திய கைத்தறி நெச வாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், அகில இந்திய கைத்தறி நூல் விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை அங்கீகரிக்கப் பட்ட ஏஜென்சிகளில் அடங்கும். இவை தவிர, துவக்கக் கூட்டுறவுச் சங்கங்களும், கைத்தறித் துறை ஆணையாளரின் சிறப்பு அனுமதியின் பேரில் இத்தகுதியைப் பெறலாம். நூற் பாலைகள் இறக்குமதி செய்யும் 12 பேல்கள் பஞ்சு ஒவ் வொன்றும் 120 கிலோ எடை கொண்டது. 9 பேல் நூல் ஒவ்வொன்றும் 181.6 கிலோ எடை கொண்டது, சப்ளை செய்ய வேண்டும். இறக்குமதி செய்யும் பஞ்சின் தரத்தோடு சப்ளை செய்யும் நூலின் ரகத்தை ஒப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்றும் அந்த அறிவிப்பில் இருக்கிறது. இந்தச் செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே, இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, கேட்டுக் கொள்வது என்ன

வென்றால், தீர்வை இல்லாமல் வெளிநாடுகளிலிருந்து பஞ்சை இறக்குமதி செய்து அதை முறையாகச் செயல்படுத்துகின்ற திட்டத்தில் நம்முடைய அரசு மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

முற்பகல் 11-40

இவ்வளவு நல்ல திட்டம் எல்லாம் மக்களுக்கு நேரடியாகச் செல்கிற அளவுக்கு அதில் கவனம் செலுத்துகிற அதிகாரிகளை அங்கே நியமிக்க வேண்டும். இங்கேகூட நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே அதை மறுபடியும் தெளிவாகச் சொல்லி இந்த நல்ல திட்டம் உண்மையாக மக்களுக்குப் போய்ச் சேருகிற அளவுக்கு செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விசைத்தறியைப் பொறுத்தவரையில் நம்முடைய நாட்டில் இருக்கிற அத்தனை கைத்தறி நெசவாளர்களையும், விசைத்தறியாளர்களாக மாற்றுகிற பெரும் பொறுப்பில் நம்முடைய அரசு ஈடுபட வேண்டும். இதை ஒரு பெரிய புரட்சியான திட்டமாக நம்முடைய தமிழகத்திலே ஏற்படுத்தினால்தான் நம்முடைய விசைத்தறி, கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வில் ஒரு ஒளி ஏற்படும் என்பதை இங்கே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு நம்முடைய நூற்பாலைகளைப் பொறுத்தவரையில் நூற்பாலைகள் எல்லாம் கூட்டுறவுத் துறையில் நன்கு சிறப்பாக வளமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய பழைய இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரையிலே ஒரு நூற்பாலை இருக்கிறது. சோமசுந்தரம் நூற்பாலை என்று அதற்குப் பெயர். அந்த நூற்பாலை நலிந்து மூடப்பட்ட நிலையில் நம்முடைய அரசால் எடுக்கப்பட்டு தமிழ்நாடு துணி நூல் கழககத்தின் சார்பாக இப்போது நடத்தப்பட்டு வருகிறது. அந்த நூற்பாலையில் 1989-90ஆம் ஆண்டில் 274.73இலட்சம் ரூபாய்க்கு உற்பத்தி செய்து விற்று இருக்கிறார்கள். 1990-91 ஆம் ஆண்டில் 310.22 இலட்சத்திற்கு விற்பனை செய்திருக்கிறார்கள். பிறகு இந்த ஆண்டு 284.40 இலட்சத்திற்கு விற்பனை செய்திருக்கிறார்கள். இதை ஏன் நான் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் 1989-90 ஆம் ஆண்டில் 70.80 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது அந்த மில்லில் பிறகு 1990-91-ல் 9.37 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறார்கள். இந்த ஆண்டு 28.57 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ரூபாய் 9.37 இலட்சம் இலாபம் ஈட்டிய அதே நூற்பாலையில் இந்த ஆண்டு 28 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் இதற்கு என்ன காரணம் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் தீர விசாரணை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அந்த சோமசுந்தரம் மில்லில் இருக்கிற தொழிலாளர்கள் என்னிடம் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கொடுக்க இருக்கிறேன். அதில் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் அதிகாரிகளின் கவனக்குறைவு காரணமாக அதாவது அந்த மில்லை எப்படியாவது மூடிவிட வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே எல்லாவிதமான ஒழுங்கீனங்களும் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த மில்லில் இருக்கிற நல்ல தரமான மெஷின்களை எல்லாம் அவர்கள் கொஞ்சம் கூடக் கவனிக்காததன் காரணத்தால் இன்று மிக மோசமான நிலைக்கு வந்துவிட்டது. ஆகவே, அந்த மில்லை எப்படியாவது மூடிவிடவேண்டுமென்ற சிந்தனையோடு அந்த அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று என்னிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நம்முடைய மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒன்றை நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலேயே இந்த ஒரே ஒரு நூற்பாலையைத்தான் நம்முடைய அரசு எடுத்து நடத்துகிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே அந்த சோமசுந்தரம் நூற்பாலையை மூடிவிடாமல் நல்ல தரமான இயந்திரங்களை வைத்து நடத்தி அதை ஒரு சிறப்பான நூற்பாலையாக ஆக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அங்கே 300க்கு மேற்பட்ட தொழிலாளர்கள், மிக உற்சாகமாக வேலை செய்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

கடைசியாக ஒன்று. என்னுடைய முதுகுளத்தூர் தொகுதியில் இருந்து சென்ற தடவை நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து இங்கே இருந்தபோது நம்முடைய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இங்கே இருந்தார்கள். நான் அவரிடம் ஒரு கோரிக்கை வைத்தேன். நூற்பாலையே இல்லாத ஒரு தொகுதி உண்டென்று சொன்னால் அது முதுகுளத்தூர் என்று நான் சொன்னேன். அவர்கள் அப்போதே உடனடியாக உங்களுக்கு ஒரு நூற்பாலை தருகிறேன் என்று சொன்னார்கள். பிறகு எதில் பண்ணுவது என்று அவர்களுக்குத் தெரியாமல், நானும் அப்போதிருந்த நிதியமைச்சர் அவர்கள் எல்லாம் கலந்து பேசி நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்னோம். அந்த நேரத்தில் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுடைய சார்பாக ஏராளமான பணம் இருக்கிறது என்று சொல்லி அதிலே போடுவோம் என்று அச்சன் குளத்திலே ஒரு அரிஜன நூற்பாலை ஒன்று ஏற்படுத்திக் கொடுத்து இருக்கின்றார்கள். இன்று 500க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கே வேலை செய்துகொண்டிருக்கின்றார்கள்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 7

முற்பகல் 11-45

அதுபோலவே, நம்முடைய தேசீயத்தையும் தெய்வீகத்தையும் உயிராகக் கொண்ட முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்த அந்த தொகுதியில் கீழத்தூவல் என்று ஒரு கிராமம். ஒரு காலத்திலே மிகுந்து பாதிக்கப்பட்ட ஒரு கிராமம். இன்று அந்த கிராமம் நம்முடைய தேசீயத்தோடும் நம்முடைய அரசோடும் மிகுந்த உற்சாகத்தோடும் இயங்கி வருங்காலத்தில் நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக அவர்கள் மிகுந்த சுறுசுறுப்போடு இயங்கிக்கொண்டு இருக்கின்றார்கள். அந்த கிராமத்தில் 50 ஏக்கர்க்கு மேற்பட்ட நிலத்தை இனாமாகக் கூட தர இருக்கின்றார்கள். ஆகவே நம்முடைய மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள கீழத்தூவல் கிராமத்தில் கூட்டுறவு துறையில் ஒரு நூற்பாலை ஏற்படுத்திக் கொடுத்து எங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தே. ஜனார்தனன்.

திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணி நூல் துறை மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறிகளை முன்னேற்றுவதை விட, கைத்தறியாளர்களை, கைத்தறியினை நம்பி வாழ்க்கையை நடத்தி வரும் லட்சக் கணக்கான கைத்தறி நெசவாளர்களை முன்னேற்றுவதுதான் உண்மையில் நலம் பயக்கும் என்று கண்டறிந்து, கைத்தறியாளர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக புரட்சிகரமான திட்டமாக 37,500 கைத்தறிகளை 75,000 விசைத்தறிகளாக மாற்றுவதற்கு 10 ஆண்டுக்கால திட்டத்தினை தீட்டி செயல் படுத்தத்தொடங்கிய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும் கைத்தறி துறை அமைச்சர் அவர்களுக்கும் கைததறி நெசவாளர்களின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1991-92 ஆம் ஆண்டிற்கு 500 நெசவாளர்களுக்கு, 1,000 விசைத் தறிகளையும், 1992-93 ஆம் ஆண்டிற்கு 2,500 நெசவாளர்களுக்கு 5,000 விசைத் தறிகளையும் அளித்துள்ள அரசை பாராட்டுகிறேன்.

அதுபோலவே இந்தியாவிலேயே முதன்முதலாக வேறு எந்த மாநிலமும் இதுவரை அறிவிக்காத திட்டமாக 58 வயது அடையும் முன்னர் இறந்துபோகும் கூட்டுறவு நெசவாளர் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ. 250 பத்து ஆண்டு காலத்திற்கு வழங்கும் புரட்சிகரமான திட்டத்திற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 7] [திரு. தே. ஜனார்தனன்]

மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு இந்த ஆண்டு ஒரு கோடியே 20 லட்சம் நிலமற்ற விவசாயிகளுக்கு இலவச வேஷ்டி சேலை வழங்கியுள்ளது. அந்த திட்டத்தினை எனது தொகுதியான விழுப்புரத்தில் துவக்கி எங்கள் தொகுதிக்கு பெருமை சேர்த்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டம் செயல்பட்ட காரணத்தினால், ஒரு கோடியே இருபது இலட்சம் நிலமற்ற விவசாயிகள் பலன் பெற்றதோடல்லாமல், வருடம் முழுவதும் நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புக்கு இடம் அளித்துள்ளது. நெசவாளர் சங்கங்கள் தங்களிடம் தேங்கி இருந்த இருப்பினை விற்பனை செய்ய இத்திட்டம் பெரிதும் உதவியாக உள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களும் தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை தோளிலே சுமந்து விற்று நெசவாளர்களது துயர் துடைத்தனர். நெசவாளர்களின் துயரத்தை தன் நெஞ்சிலே சுமந்து புரட்சித் தலைவி அவர்கள் தேங்கிக்கிடந்த துணிகளை நிலமற்ற விவசாயி களுக்கு வழங்கியதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்போல் ஒரே நேரத்தில் நெசவாளர்கள் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு உதவி செய்துள்ளார்கள்.

தொழிற்கூடம் இணைந்த வீடுகளை நெசவாளர்களுக்கு 1991-92ல் 2 கோடி ரூபாய் செலவில் 2,000 வீடுகள் அரசு கட்டித் தந்துள்ளது. அதே போல் 1992-93-ல் 2 கோடி ரூபாய் செலவில் 2,000 வீடுகள் கட்டித்தர அரசு அறிவித்துள்ளதை வரவேற்கின்றேன். இத்திட்டத்தின் கீழ் தென்னாற்காடு மாவட்டம் மோட்சக்குளத்தில் 25 லட்சம் ரூபாய் செலவில் வீடுகள் கட்ட அரசு முன்வந்துள்ளதற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் 37,500 கைத்தறிகளை 75,000 விசைத்தறியாக மாற்ற 10 ஆண்டு கால திட்டம் தீட்டியதற்காகவும், கைத்தறி நெசவாளர்கள் சங்க உறுப்பினர் இறந்துவிட்டால் அவரது குடும்பத்திற்கு மாதம் ரூ. 250 வீதம் பத்தாண்டுகள் ஓய்வூதியம் தர திட்டம் தீட்டியதற்காகவும், நெசவுக்கூடம் இணைந்த வீடுகளை நெசவாளர்களுக்கு கட்டித் தருவதற்காகவும், ஒரு கோடியே இருபது இலட்சம் விவசாய கூலிகளுக்கு இலவச வேஷ்டி சேலையை தந்துள்ளது மூலம் வருடம் முழுவதும் நெசவாளர் களுக்கு வேலைவாய்ப்பு தந்ததற்காகவும், பஞ்சு எடுத்து பதப்படுத்தி நெஞ்சு ஒடிய ஆடை நெய்யும் நெசவாளர் களுக்கு மேற்கண்ட திட்டங்களை தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு தங்கள் வாழ்நாள் முழுவதும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள். இந்த

எந்த அரசும் செய்யாத பல அரிய திட்டங்கள் மூலம் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பெரிதும் முயற்சி எடுத்துள்ளார்கள். அதற்காக ஏனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தேசத் தலைவர்கள் பிறந்தநாள் விழாவின்போது கைத்தறி துணிகளுக்கு ரிபேட் தருவதுபோல நெசவாளர்களுக்கு உதவி செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது பிறந்தநாள் விழாவின் போதும் கைத்தறி துணிகளுக்கு ரிபேட் தர வேண்டும் என அரசை கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

குறிஞ்சிப்பாடி லுங்கிக்கு அயல்நாட்டில் மதிப்புள்ளது. தனியார் ஏற்றுமதி செய்து லாபம் அடைகின்றனர். அதேபோல காஞ்சிபுரம், திருபுவனத்தில் தயாராகும் சிறந்த பட்டுப் புடவைகளை அயல்நாட்டிற்கு ஏற்றுமதி செய்து தனியார் அதிக லாபத்தை அடைகின்றனர். அரசே கைத்தறி நெசவாளர் சங்கத்தின் மூலம் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். கைத்தறி துணி வகைகளை நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கு ஆக்கபூர்வமான திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்பட்டால் கூட்டுறவில் உள்ள சங்கங்கள் இன்றும் சிறப்பாக செயல்பட வாய்ப்புள்ளது என தெரிவித்துக்கொள்கிறேன்.

மில் துணிகளோடு கைத்தறி துணிகள் போட்டி போட வேண்டியுள்ளது. கைத்தறி துணிகளின் தரம் சிறந்த தரமாக இருக்கும்படி அரசு பார்த்துக்கொள்ள வேண்டும். கூட்டுறவில் உற்பத்தி செய்யப்படும் துணிவகைகளை கண்டிப்பான தரக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தத் தேவையான நடவடிக்கைளை இலாகா மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு உயர்ந்தவகை துணிகள் நெய்வதற்குத் தேவையான போதுமான பயிற்சி அளிக்கப்பட்டு அவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு பயிற்சியின் அடிப்படையில் துணி உற்பத்தி செய்ய வாய்ப்பு தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பாலைகள் நஷ்டத்தில் இயங்குவதாக அறிகின்றேன். கூட்டுறவு நூற்பாலைகளை நிர்வாகம் செய்பவர்கள் வருவாய் துறை அலுவலர்கள். இவர்களுக்கு டெக்ஸ்டைல் சம்பந்தமாக எதுவும் தெரிய வாய்ப்பில்லை. அதனால் நிர்வாகம் சரியாக இல்லை. அதனால் நஷ்டம் உண்டாகின்றது. தனியார் நூற்பாலைகளில் டெக்ஸ்டைல் டெக்னாலஜி படித்தவர்கள் நிர்வாகம் செய்கின்றனர். அவர்கள் நூற்பாலை சம்பந்தமான தொழில் நுட்பம் அறிந்தவர்கள். அதனால் தனியார் நூற்பாலை அதிபர்கள் லாபம் அடைகின்றனர். இதனை அரசு மனதிலேகொண்டு கூட்டுறவு நூற்பாலைகளிலும்



வருவாய் துறை அதிகாரிகளுக்குப் பதிலாக டெக்ஸ்டைல் டெக்னாலஜி படித்தவர்களை நிர்வாக அதிகாரிகளாக நியமிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி உதவி இயக்குநர் அலுவலகம் தற்போது சிதம்பரத்தில் இயங்குகின்றது. அதனை நெசவாளர்கள் சௌகரியத்தை முன்னிட்டு கடலூருக்கு மாற்றம் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பு அதிகரித்து வருகின்றது. தற்போது வெளிநாட்டில் இருந்து பட்டு நூல் இறக்குமதி செய்வதால் தமிழ்நாட்டில் பட்டுபூச்சிக்கு, விவசாயிகளுக்கு கிடைக்கும் விலை மிகவும் குறைந்துள்ளதாக கூறுகின்றனர். அதனால் பட்டுபூச்சி வளர்க்கும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் அரசு பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவு அமைப்பில் உள்ள நெசவாளர்களுக்கு அவ்வப்போது கூலி உயர்த்தப்படுகிறது. ஆனால், இவர்கள் உறுப்பினர்களாக் உள்ள சங்கத்தில் வேலை செய்யும் மேலாளர், எழுத்தர் போன்ற அலுவலர்களுக்கு மாத சம்பளம் நீண்ட காலமாக உயர்த்தவில்லை என்று அறிகிறேன். எனவே, தமிழ்நாட்டிலுள்ள பட்டு மற்றும் பருத்தி கூட்டுறவு சங்கங்களில் வேலை செய்யும் அலுவலர்களுக்கு மாத சம்பளத்தை அரசு உயர்த்துமா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்ற பிறகு இந்த நல்ல அரசு எத்தனையோ வகையில் மக்களுக்கு பயன் தரும் திட்டங்களை தீட்டியும் அவர்களுக்கு அநேக நன்மைகளையும் செய்துள்ளது. கருணை உள்ளம் கொண்ட எங்கள் புரட்சித் தலைவியின் இந்த நல்ல அரசு கூட்டுறவுச் சங்க அலுவலர்களுக்கும் கூடிய சீக்கிரம் அவர்களது மாத சம்பள விகிதத்தை உயர்த்தி அவர்களுக்கும் ஒரு நல்ல எதிர்காலத்தை அளிக்கும் என்று நம்புகிறேன்.

எனவே, இது சம்பந்தமான உத்தரவுகளை அரசு விரைவில் வெளியிட ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். எம். துரை.

திரு. எஸ். எம். துரை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 26, கைத்தறியும், துணித் தொழிலும் பற்றி பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்

தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, வருவதும் போவதும் இரண்டு, வந்தால் போகாதது இரண்டு, போனால் வராதது இரண்டு, வருவதும் போவதும் வறுமையும் செல்வமும், வந்தால் போகாதது வலியும் கீர்த்தியும், போனால் வராதது மானமும் உயிரும். ஆனால் வள்ளுவரோ உயிர் போனால் வந்தாலும் வந்துவிடும், ஆனால் மானம் போய்விட்டால் வரவே வராது என்று 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்று அழுத்தந் திருத்தமாக கூறுகிறார். ஆகவே, ஒழுக்கம், அதாவது மானம் உயிரைக் காட்டிலும் மேலானது. மானம் போனபின் மனிதன் வாழ்ந்து பயன் இல்லை என்கிறார் வள்ளுவர். உயிரை விட மேலான அந்த மானத்தைக் காப்பது உடைதான் என்கிறார் வள்ளுவர். ஆமாம், 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு'—குறள் 788. ஆகவே, ஒருவனது உயிரைக் காட்டிலும் மேலான மானத்தைக் காப்பது 'உடுக்கை' அதாவது, உடைதான் என்று மிக மிக அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார் வள்ளுவர். மேலும் உண்ணாமல் ஊர்வழி போகலாம். ஆனால் உடுக்காமல் ஊர்வழி போக முடியாது. ஆள் பாதி, ஆடை பாதி, ஆடை இல்லாதவன் அரை மனிதன் என்பதுதான் இப்போது நமது நடைமுறையில் உடையைப்பற்றி பெருமையாக நாம் அடிக்கடி பேசிக்கொள்வது. மேலும் இன்று அரசியலில் ஒவ்வொரு கட்சியும் மக்கள் மத்தியில் உறுதி கொடுப்பது, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்பது தான். ஆகவே, எல்லா வகையிலும் மனிதன் உயிரோடு வாழ்வதற்கு உணவும், மானத்தோடு வாழ்வதற்கு உடையும் மிக மிக அவசியமானது, இன்றியமையாதது என்பது உறுதியாகிறது. மனிதனது உயிருக்கும் மேலான மானத்தைக் காக்கும் உடைகளைத் தருபவர்கள் நெசவாளர்கள். அந்த நெசவாளப் பெருமக்கள் இன்று சில பிரச்சினைகளுக்கும், சில வேதனைகளுக்கும் உள்ளாகி இருக்கிறார்கள். தாயிடத்தில்கூட பிள்ளை, "அம்மா பசிக்கிறது" என்று கேட்டால்தான் பிள்ளைக்கு உணவு கிடைக்கிறது. அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் எங்கள் தாய் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் நெசவாளர்கள் பற்றிய சில பிரச்சினைகளை வைக்கிறேன். தாயன்போடு அவைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டுகிறேன். மேலும் நானும் ஒரு நெசவாளன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

முற்பகல் 11-55

சின்னாளப்பட்டி என்றாலே சின்னாளப்பட்டி செயற்கைப் பட்டுச் சேலைகளுக்குப் பெயர் பெற்ற ஊர் என்று இந்தியாவிலும், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் தெரிந்த அந்தப் [illegible], தற்சமயம் மறந்துவிடக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது,



செயற்கைப் பட்டுச்சேலைகள் உற்பத்தி நின்றுவிடக் காரணங்கள், சின்னாளப்பட்டியில் மட்டும் 24 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 150 மாஸ்டர் வீவர்களும் செயற்கைப் பட்டு ரகங்களை நெய்து வந்தனர். இதன்மூலம் சராசரி மாதம் ஒன்றுக்கு 10,000 சேலைகள்வரை தனியாரும், 5,000 சேலைகள்வரை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் உற்பத்தி செய்து, விற்பனை செய்து வந்தன.

பொதுவாக மூன்று நிலைகளில் துணி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஒன்று மில்லில் உற்பத்தி; இரண்டு விசைத் தறியில் உற்பத்தி; மூன்று கைத்தறியில் உற்பத்தி என மூன்று பிரிவுகளாகும். ஒவ்வொரு பிரிவிற்கும் சில ரகங்கள் அவற்றுக்கென தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன. விசைத் தறிப் போட்டியிலிருந்து கைத்தறித் தொழிலாளர்களைப் பாதுகாக்க சுமார் 18 ரகங்களை விசைத் தறிகள் தயாரிக்கக்கூடாது என அரசு அறிவித்து இருந்தாலும், நடைமுறையில் அதற்கு மாறாக பல இடங்களில் விசைத் தறியினர் கைத்தறிக்கு என ஒதுக்கிய ரகங்களை பெருமளவில் தயாரித்து, குறைந்த விலையில் விற்று, கைத்தறித் தொழிலாளர்களின் முதுகெலும்பை தொடர்ந்து நசுக்கி வருகிறார்கள். இதை அவசியம் தடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துணியில் சாயம் ஏற்றுவது ஒரு முக்கிய பணியாகும். நல்ல தரமான சாய மருந்துகளின் விலைகள் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகிறது. குறிப்பாக இன்றைக்கு சுமார் 150 விழுக்காட்டுக்கும் மேலாக விலை உயர்ந்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆங்காங்கே தேவைப்படுகின்ற இடங்களில் அரசு மையங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலமாகத் தரமான சாய மருந்துகளை நியாயமான விலையில் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கோவாப்டெக்ஸ் நிறுவனம் சேலைகளைக் கொள்முதல் செய்வதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே பாகுபாடின்றி கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது சில குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும் கொள்முதல் செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஏறக்குறைய எல்லா கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் சேலைகளின் ரகமும், தரமும் ஒரேமாதிரியாக இருக்கும்போது, ஒருசில கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யும் சேலைகளை மட்டும் கோவாப்டெக்ஸ் நிறுவனம் பெருமளவில் கொள்முதல் செய்து கொண்டிருக்கும் நிலை மாறாவிட்டால், பல கைத்தறி

கூட்டுறவுச் சங்கங்கள் நாளடைவில் நசிந்துவிடும் அபாயம் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கோவாப்டெக்ஸ் நிறுவனம் பணம் பட்டுவாடா செய்வதில் முன்பு சராசரி ஒரு வருடத்திற்கும் மேலாக தாமதப்படுத்தி பணம் பட்டுவாடா செய்ததால், நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு, தொழிலில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> திரு. பி. வி. இராஜேந்திரன்.

<u>திரு. பி. வி. இராஜேந்திரன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை அமைச்சரவர்களின் மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோரிக்கை வைத்த அமைச்சரவர்கள் இருக்கையில் இல்லாததால், அதனுடைய முக்கியத்துவத்தை இழந்துவிடுமோ என்று எண்ணுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களுடைய சார்பாக இங்கே நான் குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறேன். அமைச்சரவர்கள் தண்ணீர் குடிக்கப் போயிருக்கிறார்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் 7, 8 முறை வெளியே சென்றுவிட்டு வந்திருக்கிறார்கள். நானும் ஒரு மனிதர் என்பதை அவருக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

நண்பகல் 12–00

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களுக்கு எந்தக் கோரிக்கை வந்தாலும் அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்க வேண்டுமென்ற ஒரு நியதி இல்லை. அமைச்சர்களுக்குக் கூட்டுப் பொறுப்பு, கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி இருக்கிறது. அதற்கு அந்த அமைச்சர்தான் பதில் சொல்லவேண்டுமென்று இல்லை. எந்த அமைச்சரும் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லலாம்.



அவையில் இல்லை என்பது குறையில்லை. இதுஇங்கே மட்டுமல்ல, நாடாளுமன்றத்திலும் அப்படித்தான் நடககிறது. ஆகவே இதை குறையாகச் சொல்லத் தேவையில்லை.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அமைச்சர் அவையில் இல்லாவிட்டாலும், உறுப்பினர்கள் பேசுகின்ற குறிப்புகள், அவையின் நடவடிக்கைக்குறிப்பில் பதிவாகிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். திருநாவுக்கரசு:</u> இயற்கையின் உபாதைக்கு இவ்வளவு பெரிய சர்ச்சை தேவையில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

<u>திரு. எஸ். எம். துரை:</u> அத்துடன் ஏறிவரும் விலைவாசியினைக் கருத்தில் கொள்ளாமல், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1978-ல் கொடுத்த கூலியையே 1987-லும் கொடுத்து, நெ யவும், மெம்பர்கள் கூலி பற்றாக்குறையின் காரணமாக மாற்று ரகத்தினை விரும்ப ஆரம்பித்தனர். ஆகவே இத்தகைய காரணங்களால் சின்னாளப்பட்டியில் செயற்கைப் பட்டு ரக உற்பத்தி அடியோடு அழிந்துள்ளது. மீண்டும் செயற்கைப்பட்டுச் சேலைகள் உற்பத்தி தொடங்க வழிமுறைகள் காணப்படவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாதம் 15,000 சேலைகள் உற்பத்தியாகி விற்பனையான சின்னாளப்பட்டியில் மாதம் 3,000 சேலைகள் வரை உற்பத்தியினை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செய்தால், நல்ல கிராக்கியுடன் விற்பனை செய்ய வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெசவுக் கூலியினை இன்றுள்ள விலைவாசிக்கேற்றவாறு நிர்ணயம் செய்து, வழங்கினால் நெசவாளர்கள் மீண்டும் செயற்கைப்பட்டு ரகத்தை நெய்ய முன்வருவார்கள். செயற்கைப்பட்டு நூலையும் மில்லில் இருந்து கண்ட்ரோல் விலைக்கு வாங்கி, அவற்றை சங்கங்களுக்கு வழங்கினால், உற்பத்தி விலை குறைந்து அதன் மூலம் விற்பனையும் பெருக வாய்ப்புள்ளது. மேலும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனமும், ஜனதா ரகத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப்போல் செயற்கைப் பட்டு ரகத்திற்குத் தனி முக்கியத்துவம் கொடுத்து, பணம் பட்டுவாடா செய்தால் நல்லபடியாக அமையும். குறிப்பாக சின்னாளப்பட்டியில் உள்ள நலிந்த சங்கங்களுக்கு செயற்கைப் பட்டு நூலை வழங்கி அதன் மூலம் உற்பத்தி செய்து, விற்பனை செய்தால், நலிவுடைந்த

[திரு. எஸ். எம். துரை] [1992 ஏப்ரல் 7

சங்கங்களும் முன்னேற வாய்ப்புள்ளது. 3,000 சேலைகள் உற்பத்திக்குத் தேவையான 120-எஸ் செயற்கைப் பட்டு கிலோ 1,500-ஐ மாதந்தோறும் சங்கங்களுக்குக் கண்ட்ரோல் விலையில் வழங்க ஆவன செய்யவேண்டும்.

அடுத்ததாக, சின்னாளப்பட்டி சங்கங்களில் உள்ள பிரச்சினைகள் குறித்து சொல்ல விரும்புகிறேன். ரிபேட் தொகை மட்டும் 25 லட்சம் ரூபாய் பாக்கியுள்ளது. அதில் 50 சதவீதம் பட்டுவாடா செய்தால்கூட சங்கங்கள் நல்முறையில் நடக்க வாய்ப்புள்ளது. சின்னாளப்பட்டியில் மற்றும் அண்ணா மாவட்டத்தில் பாலியஸ்டர் நூல் தேவையைப் பொறுத்தமட்டில் சங்கங்கள் ரொக்க விலைக்கு வாங்கி 3 மாதம், 6 மாதம் கடனுக்கு கோ-ஆப்டெக்ஸ்க்கு விற்பனை செய்கிறது. இதனால் சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கிக்கு அதிக அளவில் வட்டி செலுத்தி, நஷ்டம் ஏற்படக்கூடிய நிலையில் உள்ளது. சங்கங்கள் நல்லபடியாக லாபத்தில் இயங்க வேண்டுமானால் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் சங்கங்களுக்கு கடன் முறையில் பாலியஸ்டர் நூல் வழங்கினால் சங்கங்கள் முன்னேற வாய்ப்புள்ளது.

நமது பட்ஜெட்டில், 5,000 விசைத் தறிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று கூறியுள்ளபடி, சின்னளப்பட்டி பகுதியில் பவர்லூம் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு துவக்கி, அதன் மூலம் 200 விசைத்தறிகள் கொடுத்து, நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஆவன செய்யலாம் ஏனென்றால் விசைத்தறி வாங்க அரசாங்கம் அளித்துள்ள மானியத் தொகை போக மீத முள்ள தொகையைக் கட்டி வாங்கக்கூட வசதியற்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் சின்னாளப்பட்டி சங்கங்களுக்கு ரூ. 50 லட்சம் வரை கொடுக்க வேண்டியுள்ளது. அதைப் பட்டுவாடா செய்யவேண்டும்.

பாலியஸ்டர் ரகங்களைப் பொறுத்தவரையில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம்தான் கூலி நிர்ணயம் செய்து வருகிறது. இதனால் நெசவாளர் சங்கங்களில் தொழில் புரியும் நெசவாளர்கள் மிகுந்து சிரமப்படுகிறார்கள். எனவே பாலியஸ்டர் ரகத்திற்கு மட்டும் வருடந்தோறும் 15 சதவீதம் கூலி உயர்வை வழங்க கைத்தறி இயக்குநர் அவர்கள் உத்தரவாதம் வழங்கி, அதை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்குத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். மேலும் குரூப் இன்சூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்துள்ள மெம்பர்கள் 58 வயதிற்கு மேற்பட்டு இறந்து போனால், அவர்களுக்கு இன்சூரன்ஸ் தொகை ரூ. 15,000 வழங்கப் படுவதில்லை. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ள அங்கத்தினர்கள் எந்த வயதில் இறந்தாலும்



1992 ஏப்ரல் 7] [திரு. எஸ். எம். துரை]

அவர்களுக்கு ரூ. 15,000 கிடைக்க கைத்தறி இயக்குநர் அவர்கள் வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர் சங்கங்கள் நெசவாளர்களுக்கு வருடந்தோறும் போனஸ் கொடுக்கவும் வழிவகை செய்யவேண்டும். தமிழகத்தில் ஏறக்குறைய 14 கூட்டுறவு மில்கள் உள்ளன. ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலையிலும் மின்சாரக் குறைவு என்று காட்டி, ஜெனரேட்டர் உபயோகிப்பதாக கூறுகிறார்கள். ஆனால் நமது முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் மின் தடையோ, மின் வெட்டோ கிடையாது. ஆனால் கூட்டுறவு நூற்பாலைகளில் தினசரி 800 முதல் 1,000 லிட்டர் டீசல் செலவு செய்வதாக எழுதி ஊழல் செய்கிறார்கள்.

(பிற்பகல் 12-05)

இதற்காக மேற்கொண்டு மில்லில் ஒரு நாளைக்கு மூன்று ஷிப்டுகளிலும் டீசல் உபயோகிப்பதாக கணக்கு எழுதுகிறார்கள். டீசல் உபயோகிக்காமல் இருக்கின்ற ஷிப்டுகளிலே மின்சாரத்தை உபயோகித்தால் குறைந்தபட்சம் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 3 முதல் 5 கோடி வரை மீதம் ஆகும். இந்த மில்லின் ஆண்டு அறிக்கையில் டீசல் உபயோகிக்க ஆகும் செலவுகளை காட்டிதான் நஷ்டம் வருகிறது என்று கூறுகிறார்கள். ஆகவே டீசலை உபயோகிக்காமல் இரண்டு மாத காலங்களுக்கு ஓட்டிப்பார்த் தால் வருமானம் வருவது தெரியும். அதற்காக தனியாக ஆட்களை நியமித்துப் பார்த்தால் 3 முதல் 5 கோடி ரூபாய் வரை செலவு ஆவது குறையும் என்பதை நமது மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும் கூட்டுறவு நூற்பாலைகளில் 50 பதவிகள் நிரப்பப் படாமல் இருக்கின்றன. அதற்குக் காரணம் கேட்டால், ஆதி திராவிடர்கள், மலைவாழ் மக்கள் வேலையில் சேரவில்லை என்று கூறுகிறார்கள். நமது அரசு வேலையில்லாத பட்டதாரிகளுக்கு எல்லோருக்கும் வேலை வாய்ப்பை கொடுக்கிறோம் என்று கூறியிருக்கிறது. ஆகவே அந்த இடத்திற்கு, ஆதி திராவிடர்கள் கிடைக்கும் வரை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை டெம்பரரியாக அங்கே நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பைக் கொடுத்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு** பேரவைத் **துணைத்** தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி, நெசவாளர்கள் மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பினைக் கொடுத்தமைக்கு முதலிலே நன்றி கலந்த வணக்கத்தை தெரியப்படுத்திக் கொள்கிறேன். நான் ஒரு கைத்தறி நெசவாளர் குடும்பத்தைச் சார்ந்தவன் என்று சொல்லிக்கொள்வதிலே பெருமை அடைகிறேன். சாதாரண நெசவாளர் குடும்பத்தைச் சார்ந்த என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய எனது காவல் தெய்வம் மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.

திருப்பத்தூர் தொகுதியிலே பத்தாண்டு காலமாக வனத் துறைக்கு தனி நீதிமன்றம் வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி 21-3-1992 ஆம் தேதி தனி நீதி மன்றம் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், தனி நீதி மன்றம் அமைக்க மிகவும் உறுதுணையாக இருந்த மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களுக்கும், 21-3-1992 அன்று அந்த தனி நீதிமன்றத்தைத் துவக்கி வைத்த சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தொகுதி வாழ் மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும், நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக செயல்படும் தொழில் நெசவுத் தொழிலாகும். அப்பேற்பட்ட நெசவுத் தொழிலை செய்யும் நெசவாளர்களின்பால் அக்கறை கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பல சலுகைகளை அளித்துள்ளது. நெசவாளர்களின் குடும்பத்திற்காக காப்புறுதி திட்டத்தை அறிவித்து நெசவாளர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு பதினைந்தாயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை வரவேற்கிறேன்.

நான் நெசவாளர்கள் குடும்பத்தைச் சார்ந்தவன் என்பதால் அவர்கள் சார்பாக சில கோரிக்கைகளையும் இந்த அவையின் முன் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். இன்றைய சூழ்நிலையில் நெசவுத் தொழில் நசிந்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பெரும்பாலும் கைத்தறி நெசவாளர்கள் தற்போது விசைத் தறிகளைப் போட்டு தங்களுடைய தொழிலை நடத்தி வருகிறார்கள். எனவே பிற உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் நூல் நியாய விலையிலே கிடைத்திட ஆவன செய்ய வேண்டும். இதற்காக மாவட்டம் தோறும் ஒரு அமைப்பை ஏற்படுத்தி கைத்தறி நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைத்திட வழி செய்ய வேண்டும்



கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் கைத்தறி துணிகள் தமிழகத்திலே நிறைய தேங்கிக் கிடக்கின்றன. அவை களை தமிழக அரசு நியாயமான விலையில் கொள்முதல் செய்து கைத்தறி நெசவாளர்களின் வாழ்வினை உயர்த்துமாறு கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் உற்பத்தி பொருள்களுக்கு இரண்டு சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. அதை மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு ரத்து செய்து நெசவுப் பொருள்கள் உற்பத்தி அதிகரிக்கச் செய்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமாய் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அரசு பதிவு பெற்ற சங்கங்களிலே உறுப்பினர்கள் மரணம் அடைந்தால் கருணைத் தொகை, மாதந்தோறும் ரூ. 250 வழங்கப்படுகிறது. அதை விரிவாக்கி தமிழகத்திலே உள்ள அனைத்து நெசவாளர் குடும்பங்களும் பயன்பெறும் வகையிலே அனைத்து தமிழக நெசவாளர் குடும்பங்களுக்கும் கருணைத் தொகை கிடைக்க ஆவன செய்யுமாறு மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

முந்தைய தி. மு. க. அரசு நெசவாளர்கள் சங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய தள்ளுபடித் தொகையை தராததால பல நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூடிவிடும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நெசவாளர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய தள்ளுபடித் தொகைகளை அவர்களுக்கு அளித்து நெசவாளர்கள் சங்கங்களை காப்பாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.10

நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஒரு அருமையான திட்டமாகும். இதை, தமிழகம் அனைத்திலும் உள்ள நெசவாளர்கள் வரவேற்கிறார்கள். இதனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழக நெசவாளர்கள் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுவிட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மேலும் நம் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் விசைத்தறி துணிகளும், அண்டை மாநிலமான ஆந்திராவில் தயாரிக்கப்படும் விசைத்தறித் துணிகளும் சென்னையில் உற்பத்தியாகின்றது ஆந்திர விசைத்தறிக்கு கணிசமான லாபம் கிடைக்கிறது ஆனால், தமிழக நெசவாளர்களுக்கோ சரியான லாபம் கிடைப்பது இல்லை. காரணம், அண்டை மாநிலமான ஆந்திராவில் ஒரு விசைத்தறிக்கு மின் கட்டணம் 50 பைசா வசூல் செய்கிறார்கள் ஆனால், இங்கே ஒரு ரூபாய் 90 பைசா வசூல் செய்கிறார்கள் இதை அரசு ஆராய்ந்து அண்டை மாநிலத்தில் உள்ளதுபோல

விசைத்தறிக்கு இங்கு ஒரு யூனிட்டுக்கு 50 பைசா என்று வசூல் செய்தால் இந்த ஏற்றத்தாழ்வு இருக்காது என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் உண்ண உணவு இல்லாமல்கூட இருந்துவிடலாம் ஆனால், ஆடை அணியாமல் இருக்க முடியாது. அப்பேர்பட்ட இன்றியமையா ஆடைகளைத் தயாரித்துக் கொடுக்கும் நெசவாளர் களின் நலன்களை பாதுகாப்பதிலே எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு முனைப்பாக செயல் பட்டு வருகிறது. மேலும் சிறப்பாகச் செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலேதான் தமிழகத்திலே உள்ள எல்லாப் பிரிவு மக்களும் பயன்பெறுகிறார்கள். இதிலே நெசவாளர்கள் மற்ற ஆட்சியில் பெற்ற பயன்களை விட, இந்த ஆட்சியிலே நிரம்பப் பெறுகிறார்கள் என்பதை கூறிக்கொள்வதிலே பெருமை அடைகிறேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் நெசவாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த வர்களுக்கு 2 சதவீத இட ஒதுக்கீடு செய்து கொடுத்தால் அவர் களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டத்திலே அறிவொளி இயக்கம் மிகவும் நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலே எங்கள் மாவட்டத்திலேதான் முதன்மையாகவும் சிறப்பாகவும் 4 இலட்சத்து 80 ஆயிரம் பேர்கள் படிக்கத் தெரியாமல் இருந்தவர்கள், இன்று அனைவரும் படித்து வருகிறார்கள். கருணாநிதி ஆட்சி வந்ததும் மதுக் கடை களையும், சாராயக் கடைகளையும் திறந்துவிட்டு எல்லோரையும் குடிக்கச் சொன்னார். ஆனால், நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எல்லோரையும் 'அறிவொளி இயக்கத்தின், மூலம் படிக்கச் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி). இதுதான் கருணாநிதிக்கும் எங்கள் தலைவி அவர்களுக்கும் உள்ள வித்தியாசம். அறிவொளி இயக்கத்திற்கு எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறார். அவரின் பெரும் முயற்சியால் எங்கள் மாவட்டத்தில் படிக்காதவர்களே இல்லை என்ற நிலைமை உருவாகி வருகிறது. இதற்குக் காரணமாக இருக்கும் எங்கள் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் மனமாரப் பாராட்டுகிறேன். இந்த கைத்தறி நெசவாளர்கள் மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொள் கிறேன்; நன்றி, வணக்கம்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். ஆர் ஜெயராமன்.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மானியக் கோரிக்கையிலே பேசு வதற்கு வாய்ப்பினை நல்கிய பேரவைத் தலைவருக்கு நன்றியினைக் கூறி, ஆடைக்கு ஒரு பணம் ஓடைக்கு ஒரு பணம் அடியேனுக்கு ஒரு பணம் என்று செய்யும் தொழிலே, நெய்யும் தொழிலே மேல் என்று சொல்லி நெசவுத் தொழில் தவறு செய்ய முடியாத தொழில் என்று அந்தத் தொழிலையே தன்னுடைய தொழிலாக எடுத்துக் கொண்டான் வள்ளுவன் என்று வரலாறு கூறுகின்றது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட ஏழை நெசவாளர்களின் நண்பனாக இருந்து, தன்னுடைய தோளின் மீது துணிகளைச் சுமந்து விற்றார் என்பதை நாம் நன்கு அறிவோம். அப்படிப்பட்ட வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான் புகழ் கொண்ட தமிழ்நாடு–இவ்வளவு பெருமை வாய்ந்த தமிழகத்தினுடைய 5½ கோடி மக்களின் தலைவியாக பொறுப்பேற்று இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழைகளின் நினைவிலே நீங்கா இடம் பெற்று- ஒட்டிய வயிறோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிற கைத்தறி நெசவாளர்களின் வர்க்கத்திற்கு மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

கட்டுப்படியாகாத கைத்தறிகளை நீக்கிவிட்டு, படிப்படியாக விசைத்தறிகளாக மாற்றும் திட்டத்தில் வரும் ஆண்டில் 5 ஆயிரம் விசைத்தறிகளை நிறுவும் திட்டத்தையும், 5 ஆயிரம் கைத்தறிகளை வரும் ஆண்டில் நவீனப்படுத்தும் திட்டத்தையும் வரவேற் கின்றேன். தற்போது நெசவாளர்களுக்கு வழங்கப்படும் ஈட்டுத் தொகை 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப் பட்டு இருப்பதும், இறந்து போனவர் குடும்பத்திற்கு ரூ. 250 வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருப்பதும் வரவேற்கத் தக்கது. நான் சென்ற கூட்டத் தொடரிலே சொல்லியதைப் போல, நெசவாளர்கள் குடும்பத்திற்கு இறப்பதற்கு முன்பாகவே அரசு ஊழியர்களுக்கு கொடுப்பதைப் போல, 58 வயதிலோ அல்லது 60 வயதிலோ அவர்களுக்கு உதவித் தொகை கொடுத்தால், வயதான அவர்களுக்கு அந்த உதவித் தொகை உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு பணிவோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவனாக உள்ளேன். காரணம், வயதான பிறகு உழைக்க முடியாத காரணத்தால் ஏழ்மையில் வாழ்கிற நெசவாளியின் குடும்பத்தில் மற்றவர்களுடைய வருமானத்தில் தற்கால சூழ்நிலையில் குடும்பத்தை காத்துக்கொள்ளும் சிரமமான சூழ்நிலையில் வயதானவர்கள் பராமரிப்பை பாரமாகக் கருது

[திரு. எஸ். ஆர். ஜெயராமன்] [1992 ஏப்ரல் 7

வதைப் பல இடங்களில் நாம் இன்று கண்டு கொண்டிருக்கிறோம் ஆகவே, நான் மேலே கூறியபடி வயதானவர்களுக்கு உதவித் தொகை உதவியாக இருக்கும்படி ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த உதவித் தொகையை விசைத்தறி தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

விசைத்தறி என்பது ஒரு குடிசைத்தொழில். நம் தமிழ் நாட்டில் விவசாயித்திற்கு அடுத்தபடியாக கைத்தறியும், விசைத் தறியும் பல உபதொழில்களைக் கொண்டு கோடிக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்து காப்பற்றிக் கொண்டிருக்கிற ஒரு தொழில் ஆகும். எனவே, இவர்களுக்கு மின்சாரக் கட்டணத்தை ஐந்து விசைத்தறி வரையிலாவது 75 காசுகள் வீதம் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டு ஏழ்மையில் வாழ்ந்து கொண்டிருக்கிற நெசவாளர்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நான் முந்தைய பட்ஜெட் கூட்டத்தில் சேலம் மாவட்டத்தில் எக்ஸ்போர்ட் காம்ப்ளெக்ஸ் ஏற்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறேன். சேலம் நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து ஏற்றுமதி ஜவுளி ரகங்கள் ஏறத்தாழ வருடம் ஒன்றுக்கு ரூபாய் 450 கோடி அளவில் உற்பத்தியாகிறது. இவைகள் அனைத்தும் பம்பாய், டெல்லி போன்ற வடநாட்டு வியாபாரிகள் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தத் துணிகள் தயாராகக் கூடிய சேலம் மாவட்டத்திலிருந்து ஏற்றுமதி செய்தால் வியாபாரிகளுக்கு நேரிடையாக வாய்ப்பு கிட்டுவதோடு, ஏற்றுமதி பெருகி, தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு பெருகுவதோடு, அந்நிய செலாவணி அதிகம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டும் அல்லாமல் தமிழகத்தில் இருக்கக்கூடிய தயாரிப்பாளர்களுக்கு நேரிடையாகவே தொழில் செய்ய வாய்ப்பும் கிட்டுகிறது. அதை கருத்திற்கொண்டு கைத்தறி, விசைத்தறி ஏற்றுமதி வில்லேஜ் காம்ப்ளெக்ஸ் ஏற்படுத்த வேண்டுமென்று -அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மத்திய அரசு ஏற்றுமதி ஜவுளி உற்பத்தியாளர் க்கு துணியை அயல்நாடுதளுக்கு ஏற்றுமதி செய்யும் -உரிமம் கோட்டா தற்போது 3 சதவீதம் கொடுப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளது. தமிழக அரசும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களும், மத்திய அரசை 15 சதவீதம் உரிமம் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



1992 ஏப்ரல் 7] [திரு. எஸ். ஆர். ஜெயராமன்]

அடுத்து பம்பாயில் உள்ள ''டெக்ஸ்புரோசல்'' இன்றைக்கு மில்களின் பிரதிநிதியாகவே செயல்படுகிறது. விசைத் தறியாளர்களுக்கு இந்த கவுன்சிலில் எந்த முக்கியத்துவமும் இல்லை. தமிழ்நாட்டில்தான் விசைத்தறி துணி ஏற்றுமதிக்கு அதிக அளவில் உற்பத்தியாகிறது. மேலும் பருத்தி நூல் ஏற்றுமதிக்கு நம்முடைய மில்கள் மூலமாகதான் தயாராகிறது. ஆகவே, டெக்ஸ்புரோசல் போல சேலத்திலோ, கோவையிலோ விசைத் தறி துணி மற்றும் நூல் ஏற்றுமதிக்கென அபிவிருத்திக் கழகம் அமைக்க மத்திய அரசை தமிழக அரசு கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஜனதா துணி கைத்தறி மூலமாக தயாரித்து விநியோகிக்க மத்திய அரசு ஆண்டுக்கு 200 கோடி அளவுக்கு மாநியமாக வழங்குகிறது. இந்தத் திட்டம் குறைந்த ஊதியம் காரணமாக கைத்தறியாளர்களுக்கு பலன் அளிப்பதில்லை. தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்திற்கு வரவேற்பு இல்லை. அந்த 200 கோடி ரூபாய் அளவுக்கான மானியத்தில் தமிழ் நாட்டிற்கு 10, 15 கோடி அளவுக்குக் கூட கிடைப்பதில்லை. நம்முடைய கைத்தறியின் அளவை கருத்திற்கொண்டால் ரூ. 50 கோடி அளவுக்கு மானியம் நமக்கு வர வேண்டும். மத்திய அரசும் இந்தத் திட்டம் செயல்படுவதில் உள்ள குறைபாடுகள் காரணமாக இந்தத் திட்டத்தை படிப்படியாகக் குறைத்து, இந்த மானியத் தொகையை வேறுவிதமாக செலவிடலாம் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, நாமும் மத்திய அரசை நம்முடைய கைத்தறியை விசைத்தறி தொழிலுக்கு மாற்றுவதற்கான நிலையில் ரூ. 20 கோடி அளவுக்கு ஆண்டுக்கு மானியமாக கோரி, ஒரு பண்ட் அமைத்து, நாம் திட்டத்தை செயல்படுத்த முடியும் என்று சொல்லிக்கொண்டு, அது தவிர தற்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிற ரிபேட் ஏழை நெசவாளர்களுக்குத்தான். ஆனால் அவைகள் அவர்களுக்கு போய்ச் சேராமல் நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள் பங்கு போட்டுக் கொள்கிற யதார்த்த நிலையை நாம் கண்டு கொண்டிருக்கிறோம். ஆகவே, மத்திய அரசிலே கொடுக்கக்கூடிய, ஜனதா ரகத்திற்காக தமிழகத்திற்கு வரக்கூடிய தொகையையும், தமிழக அரசு கொடுக்கக்கூடிய ரிபேட் தொகையையும் சேர்த்து நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கும், ஏழ்மையில் வாழ்கிற நெசவாளர்களின் குழந்தைகள் படிப்பதற்கும் 58 வயதிலோ அல்லது 60 வயதிலோ கொடுக்கச் சொல்கிற ஓய்வூதியத்திற்கும் பயன்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

தற்போது விசைத்தறிகளுக்கு லைசென்ஸ் முறையையும் அதற்குக் கட்டும் ரூபாயையும் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு துணிகளை உலக

நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற நம் நாட்டினுடைய திட்டத்தின் அடிப்படையில், விதைத்தறியின் உற்பத்தி மூலமாகத்தான் அதை நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அரசின் கவனத்திற்கு ஒரு கருத்தைச் சொல்வது என்னுடைய கடமை. நிரந்தரம் இல்லாமல் ஏறிக் கொண்டுவரும் நூல் விலையை கட்டுப்படுத்தும் முயற்சியாக தற்போது, வருவாய் இழப்பில் இயங்கிக் கொண்டிருக்கிற அரசின் நூற்பாலைகளை, ஏற்றுமதித் தொழிலிலே இருக்கக்கூடிய தயாரிப்பாளர்களைக் கொண்டு, ஒன்று திரட்டி, அவர்களை ஒரு சங்கமாக அமைத்து நலிவு அடைந்து நஷ்டத்தில் இயங்கிக் கொண்டு இருக்கிற நூற்பாலைகளில் அவர்களைப் பங்குதாரர்களாக சேர்த்து, உற்பத்தி செய்தால், நூற்பாலையும் நிரந்தரமாக உற்பத்தி செய்யும். அதே நேரத்தில், சீரான முறையிலே ஏற்றுமதியாளர் களுக்கு நூல்கள் கிடைப்பதோடு, வெளி மார்க்கெட்டில் திடீ ரென்று ஏறுகின்ற நூல்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தற்போது நமது நாட்டில், வருடம் ஒன்றுக்கு நூற்பாலைகளுக்கு ஒரு கோடியே 25 இலட்சம் பேல் பருத்தி தேவைப்படுகிறது என்கிற நிலையில் நமக்கு ஒரு கோடியே 15 இலட்சம் பேல்கள் மட்டும்தான் நமது நாட்டில் உற்பத்தி ஆகின்றன. 10 லட்சம் பேல்கள் பற்றாக்குறையில் 5 லட்சம் பேல்களை மத்திய அரசு இறக்குமதி செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். மேலும் 5 லட்சம் பேல்கள் பற்றாக் குறையை நமது தமிழகத்திலே இருக்கிற தஞ்சாவூர், பவானி சாகர். தேனி, இராஜபாளையம், விழுப்புரம் போன்ற இடங் களில் உற்பத்தி செய்யலாம் என்று கணக்கு எடுக்கப் பட்டுள்ளது.

குறிப்பாக தஞ்சாவூரிலே 3 லட்சம் பேல்களும், பவானி சாகரிலே 1½ லட்சம் பேல்களும், தேனி, ராஜபாளையம், விழுப்புரம் ஆகிய இந்த 3 ஊர்களிலும் 50 ஆயிரம் பேல்களும் உற்பத்தியாகும் என்று கணக்கெடுத்துக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், தஞ்சாவூர் பகுதியில் 2 முறை சாகுபடி செய்து விட்டு, ஜனவரியிலிருந்து கோடைக் காலங்களிலே நீர்ப்பாசனம் இல்லாத நாட்களிலே பருத்தியைப் பயிரிடலாம் என்றும்,—ஏன் என்றால், பாசனத்திற்கு ஆழ்துளைக் கிணறுகளுக்கு கடன் வழங்குவதாக 'நபாட்' அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கடனுக்கு ஊக்கத் தொகையாக தள்ளுபடியும் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.



இந்த நல்ல திட்டத்தைப் பயன்படுத்தி, பற்றாக்குறையாக இருக்கிற 5 லட்சம் பேல்களை தமிழகம் நிறைவு செய்யலாம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக, தி.மு.க. ஆட்சியில் கோ–ஆப்டெக்ஸ் மூலமாக ரூ. 1½ கோடி ஊழல் நடந்துள்ளது. மேற்படி ஊழலைக் கண்டுபிடித்த அதிகாரிக்கு பரிசு கொடுப்பதற்கு பதிலாக, அவருக்கு வேலையைக் கொடுக்காமல், சென்ற அரசு இருந்தது. எனவே, ஊழல் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்னும் மகாகவி பாரதியின் வைர வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்து வரும் தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியல் வரலாற்று வானில் ஒரு விடி வெள்ளியாய் மக்கள் சமுதாயப் பாலைவனத்தில் ஒரு நீர் ஊற்றாய், பத்தரை மாற்றுத் தங்கமாய், எத்திப் பிழைக்கும் எத்தர் கும்பலுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) சாட்டையாய், இன்று தமிழகத்தில் இருந்து, தமிழக மக்களின் இதயங்களில் நீங்காத இடம் பெற்றிருக்கிறார்கள்.

'பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு'

என்கிற வள்ளுவரின் வாக்கின்படி, பகைவரின் துணை பிரித்தும், தம்மிடம் உள்ள தொண்டர்களை தாய் உள்ளத்தோடு, மனித நேயத்தோடு காத்து, நம்மைவிட்டுப் பிரிந்தவர்களுக்கு பாவ மன்னிப்பு அளித்ததோடு—நம்மைவிட்டுப் பிரிந்தவர்களுக்கு பாவமன்னிப்பு அளித்து அவர்களை மீண்டும் சேர்த்துக்கொண்டு வள்ளுவர் ஒரு அமைச்சு எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணினாரோ, அதன்படி ஆட்சி நடத்தும் தமிழக முதல்வர் அவர்கள் இருக்கிற திசை நோக்கி, வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என் உரையைத் துவக்குகிறேன்.

[திரு. இ. மதுசூதனன்] [1992 ஏப்ரல் 7

'அரசு மக்களுக்குத்தானே தவிர, அரசுக்காக மக்கள் அல்ல' என்பதை நடைமுறையில் காட்டி, எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மக்களின் நன்மைக்காக என்பதை, தன்னுடைய கடந்த கால ஆட்சி முறையில் மாண்புமிகு தமிழக முதல்வர் நிருபித்துக் காட்டியுள்ளார்கள். எத்தனை எதிர்ப்புகள் பெற்றாலும், அது எந்த ரூபத்தில் வந்தாலும், தனக்கு வரும் தடைகளை எல்லாம் தகர்த்து எறிந்து, மக்களின் நன்மைக்காக புன் சிரிப்புடன் புரட்சித் திட்டத்துடன் தன் அரசியல் பயணத்தை நடத்தி வருகிற புரட்சித் தலைவி அவர்களின் அமைச்சரவையில் (மேசையைத் தட்டும் ஒலி) பூவோடு சேர்ந்த நாராய் இறைவனின் பாதங்களை அர்ச்சிக்கும் பூவாய் சேவை செய்து வருவதை என் பிறப்பின் புனிதத்தைப் பெற்றவனாய் உங்கள் முன் நிற்கின்றேன். என்னை இந்த நிலைக்குக் கொண்டுவந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினை அவர்களுடைய மலர்ப் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

பிற்பகல் 12-25

கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் சார்பில் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கையின் மேல் 44 மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் அடங்கிய வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு தங்களின் மேலான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். அந்த உறுப்பினர்களுக்கு எல்லாம் நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி மற்றும் துணி நூல் துறையினைப் பற்றிப் பாராட்டிப் பேசிய உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தகைய பாராட்டுக்கள் எங்களுடைய துறைக்கு ஒரு புத்துணர்வு ஊட்டும் என்பதில் சந்தேகமில்லை. குறைகளைச் சுட்டிக்காட்டிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில் எந்த மூலையில் தவறு நடந்தாலும் அதை உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய குறிப்புகள் பேருதவியாக இருக்கும்.

தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்த இடம், அதிகமான வேலைவாய்ப்பினை அளிப்பது நெசவுத் தொழிலாகும். மனி தனுக்குத் தேவையான உணவை அளிப்பது விவசாயம். உடுக்க உடை அளிப்பது நெசவுத் தொழிலாகும். இவைகள் இரண்டிலேயும் தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் தொழில்



1992 ஏப்ரல் 7] [திரு. இ. மதுசூதனன்]

நெசவுத் தொழிலாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி வளர்ச்சிக்கு பல திட்டங்கள் தீட்டி நெசவாளர்களின் துயர் துடைக்கப் பாடுபட்டார். அவருக்குப் பின் அமரர் புரட்சித் தலைவர் அவர்கள் நெசவாளர்களுக்குப் பல திட்டங் களைக் கொடுத்து, அவர்களின் பொருளாதார முன்னேற்றத் திற்குப் பாடுபட்டார். அடுத்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கைத்தறி யின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி, கைத்தறி நெசவாளர்கள் வளர்ச்சியையும், அவர்களின் பொருளாதார மேம்பாட்டினையும் கருத்திற்கொண்டு தொலைநோக்குத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார். கைத்தறி மற்றும் துணி நூல் துறையைப் பொறுத்த அளவில், இத்துறை மூன்று பெரும் பிரிவு களாகப் பிரிக்கப்பட்டது. நூல் உற்பத்திப் பிரிவு, துணி உற் பத்திப் பிரிவு, துணி விற்பனைப் பிரிவும், நூல் உற்பத்திப் பிரிவில் தமிழகத்தில் 18 நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. இவைகள் 4.69 இலட்சம் கதிர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இந்த நூற்பாலைகளில் 12,000 தொழிலாளர்கள் பணியாற்று கிறார்கள். இந்த நூற்பாலைகளின் மூலம் மாதந்தோறும் 16,000 முதல் 18,000 பேல்கள் வரையில் சிட்டா கோர் நூல்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. பல ஆண்டுக்காலமாக 1988 ஆம் ஆண்டு முதல் நலிவடைந்துள்ள 6 நூற்பாலைகளைக் கையகப்படுத்த வேண்டுமென்று தாயுள்ளத்தின் தனிப்பெரும் தலைவியான மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையின்போது எடுத்துரைத்து ரூ. 7 கோடி வரை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக ஏற்கெனவே இருந்த அரசினுடைய ஏற்றுமதிக் கொள்கையில் இருந்த குழப் பத்தின் காரணமாக பஞ்சு விலை ஏறியும், நூல் உற்பத்திக் குறைந்தும் 65 விழுக்காடு முதல் 90 விழுக்காடு வரையிலும் பஞ்சு விலை உயர்ந்தது. இவ்வாறு அதிகமாக இருந்ததனால், கூட்டுறவு நூற்பாலைகள் நட்டத்தில் இயங்க ஆரம்பித்தன. நலிவடைந்த இந்த நூற்பாலைகளைத், தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக் கூடாத வண்ணம் ஆலை களைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். ஆனால் சொல் வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று பேசிய, வாய்ச் சொல் வீரர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆலைகளை லாபகரமாக நடத்திய நேரத்தில்கூட எந்தவிதமான தொலை நோக்குத் திட்டங்களையும் உருவாக்கவில்லை என்பதை இந்த மாமன்றத்தில் மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

[திரு. இ. மதுசூதனன்] [1992 ஏப்ரல் 7

வரலாற்றுச் சிறப்புமிக்க அன்னை சத்தியா கூட்டுறவு நூற்
பாலை, பர்கூர், தர்மபுரி மாவட்டம், விண்வெளி ஆராய்ச்சி
முதல் மண் ஆளும் திறன் வரை பெண்களே நடத்தி, வெற்றி
கண்டிருக்கும் இந்த நாளில் முழுக்க முழுக்க பெண்களுக்காக
தர்மபுரி மாவட்டம், பர்கூரில் ரூ. 22 கோடி திட்ட மதிப்பீட்டில்
அன்னை சத்தியா கூட்டுறவு நூற்பாலை நிறுவ முடிவு எடுக்கப்
பட்டு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் குழுவின் மூலமாக கீழ்க்கண்ட
நிதியுதவி பெறத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. 50 சதவீதம் திட்ட
மதிப்பில், மாநில கூட்டுறவு வங்கி மூலம் கடன் பெறுவது (2)
தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மாநில அரசுக்கு 25
சதவீதம் கடன் வழங்குதல் (3) மாநில அரசு 20 சதவீதம்
நம்முடைய பங்குத் தொகையாக வழங்குதல், பழனிசாமி அவர்
கள் கூறியது போல் மீதம் உள்ள 5 சதவீதம் உறுப்பினர்களிட
மிருந்து பங்கு தொகை வசூல் செய்வது. மேலும் சேலம்
கூட்டுறவு நூற்பாலை மூலமாக ஆரம்பப் பணிகளுக்காக 2 லட்சம்
ரூபாய் பெறப்பட்டு முதல் கட்டப் பணிகள் துவக்கப்பட்டன.
1992-93 ஆம் ஆண்டு பகுதி நோத் திட்டத்தின் கீழ் ரூபாய் 50
லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-30

பம்பாயில் உள்ள அனைந்திந்திய கூட்டுறவு நூற்பாலை
சம்மேளனத்திடமிருந்து திட்ட வரைவு ஒன்றை தயாரிக்கக்
கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க
நூற்பு ஆலைக்கென கிருஷ்ணகிரி தாலுக்கா கொண்டப்பநாயக்கன்
பள்ளி கிராமத்தில் 25 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு
தர்மபுரி மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதலுக்கு அனுப்பப்
பட்டுள்ளது. இப்பணியை சிரும் சிறப்புடன் முடிக்கவும், அதை
துரிதப்படுத்தவும் தனி அதிகாரி ஒருவரை அரசு நியமித்துள்ளது
என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி).

துணி உறபத்தி பிரிவு; தமிழகத்தில் 4.2 இலட்சம்
கைத்தறிகள் உள்ளன. இவைகளில் 3.27 லட்சம் கைத்தறிகள்
1,473 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்களாக
உள்ளன. அதில், மிக அதிக வருவாய் ஈட்டக்கூடிய பட்டுக்
கைத்தறிகள், ஓரளவிற்கு வருவாய் ஈட்டக் கூடிய பெட்ஷீட் தரை
விரிப்புகள், அதிக விலை உள்ள பருத்தி சேலைகளை உற்பத்தி
செய்யும் தறிகள் மற்றும் குறைந்த வருவாயை ஈட்டக்கூடிய
சாதாரணத் துணிகளை நெய்யக்கூடிய தறிகளும் உள்ளன.
ஆதுவும் இல்லாமல் விசைத் தறிகளும் உள்ளன.

நலிவு அடைந்த சங்கங்களின் ஒருங்கிணைப்பில் (அமால்க
மேஷன் சொசைட்டி) தமிழகத்தில் 1,473 நெசவாளர் கூட்டுறவு
சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் 750 சங்கங்கள் மட்டுமே



1992 ஏப்ரல் 7] [திரு. இ. மதுசூதனன்]

லாபத்தில் இயங்குகின்றன. மீதிச் சங்கங்கள் நஷ்டத்திலே
இயங்கிக் கொண்டிருக்கின்றன. நஷ்டத்திற்குக் காரணம் சங்கங்
களின் நிதி நிர்வாகம் சரியில்லை என்றாலும் மக்கள் விரும்பும்
துணிகளைத் தயாரிக்காமல் ஒரே விதமான துணிகளைத்
தயாரித்து விற்பனையாகாமல் தேங்கி இருப்பதும் இச்சங்கங்
களின் நஷ்டத்திற்கு காரணமாகும். இவைகளில் 218 நலிவு
அடைந்த நிலையில் உள்ள நெசவாளர்களின் மேம்பாட்டிற்காக,
பொருளாதார முன்னேற்றத்திற்காக வழி வகைகளைச் செய்ய
தீர்மானிக்கப்பட்டு முதற்கட்டமாக 52 நலிவு அடைந்த சங்கங்
களை லாபத்துடன் இயங்கும் சங்கங்களுடன் இணைக்க முடிவு
எடுத்தோம். இதனால் நம் அரசின் சலுகைகள் அவர்களுக்குக்
கிடைக்கும். அவர்களின் பொருளாதார மேம்பாட்டை உயர்த்த
வும் தாய் உள்ளத்துடன் அலிப்பெரும் தலைவியான மாண்புமிகு
புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கட்டளை
பிறப்பித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்தில்
தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுக்குத் தேவையான துணி உற்பத்தி: மாறி வரும்
நாகரீகத்திற்கு ஏற்றவாறு, மக்களின் அன்றாடத் தேவைகளைப்
பூர்த்தி செய்யும் வண்ணம் அதே நேரத்தில் கைத்தறி உற்பத்தி
யில் துணி தேக்கம் அடையாமல் அவ்வப்போது விற்பனையாகும்
வகையிலும், ஏற்றுமதிக்கென துணி ரகங்களை உற்பத்தி
செய்யும் வகையிலும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தீவிர,
வளர்ச்சித் திட்டங்கள் நெசவாளர் சேவா மையம், கோவாப்
டெக்ஸ் மற்றும் துறையின் வடிவமைப்பு நிலையங்கள் ஆகிய
வற்றுடன் தறிகளை ஒருங்கிணைத்து புதிய புதிய டிசைன்களை,
வண்ண வண்ண வடிவமைப்புகளை புதிய ரகங்களை அமைக்கப்
படுவதாக இருக்கும். அது மட்டுமல்லாமல் பழம் பெருமை
களைக் கட்டி காப்பதிலும் கலாஷேத்திரா போன்ற நிறுவனங்
களுடன். அவர்களின் உதவியுடன் அவர்களிடம் உள்ள அரிய
வண்ண வண்ண வடிவமைப்புகளைப் பெற்று அவற்றை சங்கங்
களுக்கு உற்பத்தி செய்து சங்கங்களின் துணிகளில் தேக்கம்
இன்றி பார்த்துக் கொள்ள இத்துறை ஆவன செய்து வருகிறது.

குறிஞ்சிப்பாடி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டம்; இதுவரையில்
பெரும்பாலும் லுங்கிகள் மற்றும் சட்டை துணிகள் காடா துணிகள்
போன்றவற்றை உற்பத்தி செய்து வந்த குறிஞ்சிப்பாடி எற்றுமதி
வளர்ச்சித்-திட்டம் அந்த உற்பத்தி திட்டத்தை மாற்றி தற்போது
பெரும்பாலும் ஆண்கள் விரும்பி வாங்கும் ரெடிமேட் ஆடைகளை
உற்பத்தி செய்வதில் அடியெடுத்து வைத்துள்ளது. தற்சமயம்
இத்திட்டம் மிகத்தரமான பருத்திச் சட்டைகளை தயாரித்து அதில்
அறிமுகம் செய்துள்ளது. அதுமட்டுமின்றி மாறி வரும் மக்கள்
விருப்பத்திற்கு ஏற்ப குறைந்த விலையில் பட்டுச் சேலைகள் உற்
பத்தியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிற்பகல் 12-35

மதுரை தீவிர கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்; நெசவாளர் சேவை மையத்துடன் ஒருங்கிணைந்த மதுரை தீவிர கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ஏற்றுமதிக்கென டர்க்கி டவல்களை உற்பத்தி செய்து வருகிறது. அதே போல குடியாத்தம், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் குடியாத்தத்தில் இயங்கிவரும் 23 கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்றுமதிக்கென லுங்கிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு நிதிநிலை மானிய கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டவாறு இச்சங்கங்களின் செயல்பாட்டினையும், உற்பத்தியினையும் ஒருங்கிணைத்து தேவையான நிதிவசதிகளை ஏற்படுத்தியும், தேவையான, தரமான நூல் வகைகளை உற்பத்தி செய்தும் இச்சங்கங்களுக்கு அளித்து உற்பத்தி சாதனையைப் புரிந்துள்ளது. இதன் வாயிலாக இதன் நெசவாளர்கள் வருமானமும் கூடியுள்ளது' என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நவீன வசதியுடன் கூடிய விற்பனை வளாகங்கள்; பட்டுச் சேலைகள் விற்பனையும், பருத்தித் துணி விற்பனையும் அதிகரிக்க கடந்த வரவு செலவு திட்டத்தின்போது அறிவிக்கப்பட்டவாறு பட்டு விற்பனைக்கென்று காஞ்சிபுரத்தில் ஒரு நவீன வசதியுடன் கூடிய விற்பனை வளாகமும், பருத்தித் துணி விற்பனைக்கென்று ஈரோட்டில் நவீன வசதிகளுடன் கூடிய விற்பனை வளாகமும் 1992-93 ஆம் ஆண்டு வரவு செலவு பார்ட்-2 திட்டத்தின் கீழ் ரூ 22.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

விற்பனை மேம்பாட்டுத் தள்ளுபடி மானியத் திட்டம்: கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் சங்கங்களின் விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தில் கடந்த ஆட்சியின்போது 36 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டது. இதில் 50% மத்திய அரசின் மானியமாகவும் 50% தமிழக அரசின் மானியமாகவும் ஒதுக்கப்பட்டது. மத்திய அரசு இந்த மொத்த மானியத் தொகை யில் 75 விழுக்காடுகள் மட்டுமே தள்ளுபடி மானியமாக ஒதுக்கப் பட வேண்டும் என்றும், மீதமுள்ள 25 விழுக்காடுகள் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளது இத்தகைய தள்ளுபடிக்கென்று தனியாக மானியத்தொகை குறைப் பினால் கைத்தறியையே நம்பியிருக்கும் சிறிய நெசவாளர் சங்கங் களும், அவற்றை நம்பியுள்ள நெசவாளர்களின் வாழ்க்கைத்தரமும் பொருளாதார நிலையும் சீர்குலையும் என்பதை உணர்ந்து கருணைக் கடலான மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறித் துணி விற்பனை எந்த விதத்திலும் பாதிக்காத வண்ணம், மத்திய அரசு தள்ளுபடி மானியத்தில் எந்த அளவு தந்த போதிலும் அவர்கள்



அளிக்கும் தள்ளுபடி மானியத்திற்கு ஈடாகவும் அதற்கு மேலும் 1991-92 ஆம் ஆண்டில் 42 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து நெசவாளர்கள் வாழ்க்கையை மேம்படுத்தி அமைத்த பெருமை மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே போன்று 1992—93 ஆம் ஆண்டு 42 கோடி ரூபாய் ஒதுக்கி நெசவாளர்கள் எதிர்காலம் இருட்டாகாமல் அவர்களின் வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்றி வாழ வழி செய்திருக்கின்ற தலைவி, தாய் உள்ளத்தின் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி என்பதை நினைவூட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விசைத்தறி சேவை மையம்; கைத்தறியையும், கைத்தறி யாளர்களையும் பாதுகாக்கும் அதே நேரத்தில் விசைத்தறியின் வளர்ச்சியை ஒதுக்கிட முடியாது என்பதனை மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு உணர்ந்துள்ளது. ஆகையினால் தான் பல்லடம் தாலுக்காவில் கண்ணம்பாளையத்திலும், நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் சங்கரன்கோவிலிலும், ஆக இரண்டு இடங்களில் ஒவ்வொரு விசைத்தறி சேவை மையம் 14.11 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு மையங்களைத் தொடங்க ஆவன செய்யப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இச்சேவை மையங்கள் விசைத்தறிகளில் உற்பத்தி செய்ய நவீன உத்தியுடன் கூடிய புதிய வடிவமைப்புகளை விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கும். அதோடு ஒவ்வொரு ஆண்டும் சுமார் 80 விசைத்தறி நெசவாளர் களுக்கு இம்மையங்கள் பயிற்சி அளிக்கும். இதைத் தவிர மேலும் 4 விசைத்தறி மையங்கள் சேலம், மதுரை போன்ற இடங்களிலும், தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு, பெரியார் மாவட்டம் கோபி செட்டிப்பாளையம் போன்ற மிக அதிகமான அளவில் விசைத்தறி யாளர்கள் இயங்கும் இடங்களில் தொடங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஆலோசித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

நெசவாளர் நலத் திட்டங்கள்.—நெசவாளர்களுக்கு தறி நெசவுக்கூடம் இணைந்த வீடுகள்; ஒரு மனிதனுக்கு அடிப்படை தேவையான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்ற இந்த மூன்றும் மக்களுக்கு அளித்து, திட்டங்களைத் தீட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர் களின் அரசு நெசவாளர்களுக்கு வீடு கொடுப்பதோடு மட்டுமின்றி அவர்கள் உழைத்து உண்பதற்காக தறிக் கூடத்துடன் இணைந்த 2 ஆயிரம் வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டித்தர திட்டமிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-40

அதே போல் 1992-93 ஆம் ஆண்டில் 2 ஆயிரம் தறிக் கூடத் துடன் இணைந்த வீடுகள் கட்டித்தர திட்டமிட்டுள்ளது. (மேசை யைத் தட்டும் ஒலி).

கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வு ஊதிய திட்டம்;
இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எந்த மாநில அரசும் சாதிக்
காத சாதனையை ஏற்படுத்தி நெசவாளர் குடும்ப ஓய்வு ஊதியம்
அறிவித்து அதன் பயனாய் 58 வயதுக்கு முன் இறந்து போகும்
நெசவாளர் குடும்பங்களுக்கு மாதம் 250 ரூபாய் வீதம் 10 ஆண்டு
களுக்கு குடும்ப ஓய்வு ஊதியம் வழங்கி(மேசையைத் தட்டும் ஒலி)
ஆதரவற்ற நெசவாளர் குடும்பத்தின் வாழ்க்கையில் ஒரு உத்திர
வாதம் அளித்து மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டியாக மனித
நேயமுடன் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர்
அவர்களின் அரசு என்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கைத்தறிகளை நவீனப்படுத்தல்; வளர்ந்து வரும் விஞ்ஞான
உலகத்தின் வேகத்திற்கும், மாற்றத்திற்கும் இணங்க தொழில்
துறையில் மாறி வரும் புதுமைகளையும், புரட்சிகளையும் கைத்
தறியில் கொண்டு வந்து நெசவாளர்களின் வாழ்வின் தரத்தினை
உயர்த்திட வழிவகை செய்யும் தன்மையில் 50 ஆயிரம் கைத்தறி
களை நவீனப்படுத்த 5 ஆண்டு பெரும் திட்டம்—இங்கே சில
நண்பர்கள் பேசினார்கள், ஏதோ விசைத்தறியால் கைத்தறி அழியப்
படுகிறது என்று—இதற்காகத்தான் 50 ஆயிரம் கைத்தறிகளை 5
ஆண்டுக் காலத்தில் நவீனப்படுத்த 5 ஆண்டு பெரும் திட்டம் ஒன்
றினை 42.30 கோடி ரூபாய் செலவில் துவக்க இருக்கிறோம்.
நடப்பு ஆண்டில் 2 ஆயிரம் கைத்தறிகளை 82 லட்சம் ரூபாய்
செலவில் நவீனப்படுத்த உத்தரவிடப்பட்டு நடைமுறைப்படுத்தி
வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

1992-93 ஆம் ஆண்டில் 5 ஆயிரம் கைத்தறிகள் நவீனப்படுத்
தப்படவுள்ளது. இந்த மாற்றம் நெசவாளர்கள் வாழ்க்கையில்
ஒளி வீசச்செய்யும். கைத்தறியால் குறைந்த வருவாய் ஈட்டும்
நம் நெசவாளர் பெருமக்கள் அதிக வருவாய் ஈட்டி தங்களின்
பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ள இந்தத் திட்டம்
வழிவகை செய்கிறது. இந்தத் திட்டம் முழுமை பெற்றால்
நெசவாளர்களின் வாடி வதங்கிய வாழ்க்கையில் கோடி நன்மை
விளங்கும். தமிழக முதல்வரின் தாய் உள்ளத்தில் இந்தத் திட்டம்
மற்றும் ஒரு மைல் கல் ஆகிறது (மேசையைத் தட்டும் ஒலி).

கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றுதல்; அரசின் திட்டங்
களினால் தங்களுக்கு என்ன ஆதாயம் என்று நினைத்து இருந்த
இடத்தில் அரசின் திட்டங்களினால் ஏழை எளிய நெசவாளர்களுக்கு
என்ன ஆதாயம் என்ற தொலை நோக்கோடு கடந்த நிதிநிலை
அறிக்கையின்போது 37,500 கைத்தறிகளை 75 ஆயிரம் விசைத்
தறிகளாக படிப்படியாக 10 ஆண்டுக் காலத்தில் மாற்ற வேண்டும்
என்று பொன்மனத் தலைவி எங்கள் புரட்சித் தலைவி தமிழக
முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். அவர்களின்



ஆணைக்கேற்ப 1991–92 ஆம் ஆண்டில் முதற் கட்டமாக செங்கை–எம்.ஜி.ஆர்., திருச்சி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 500 கைத்தறிகளை ஆயிரம் விசைத்தறிகளாக மாற்ற 30 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல் 1992–93 ஆம் ஆண்டில் 2,500 கைத்தறிகளை 5 ஆயிரம் விசைத்தறிகளாக மாற்ற நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இலவச வேட்டி, சேலை; கரிசல் காட்டில் பருத்தி வளர உழைத்த கால்களுக்கு, உழுத்த கால்களுக்கு, சொந்தக்காரனாய் இருந்தும் நிலமற்ற ஏழை விவசாயி பொங்கலுக்குக்கூட தன் உழைப்பின் பயனாய் விளைத்த பருத்தியிலிருந்து வந்த ஆடையை அணிய முடியாமல் ஒட்டிய வயிரோடும், ஏக்கத்தின் உறைவிடமாய் குழி விழுந்த கண்களோடு கலங்கிப் போய் தவித்த இக்காலத்தில் அரசின் நிதிநிலையில் இலவசத் திட்டத்திற்கு ஏதுவாய் நிதி இல்லை என்றாலும்கூட கோடிகளைப்பற்றி கவலைப்படாமல் தெருக்கோடியிலுள்ள ஏழை எளிய மக்களின் மகிழ்ச்சிக்காக ஒரு கோடியே 20 இலட்சம் பேர் பயனடையுமாறு இலவச வேட்டி, சேலை ரூபாய் 42 கோடி செலவில் வழங்க இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்தக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

மேலும் ஆண்டுக்குக் குறைந்த நாட்களே நெசவுத் தொழில் வேலை கிடைத்து வந்ததை மாற்றி ஆண்டு முழுவதும் நெசவுத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க வழிவகை செய்வதோடு மட்டுமின்றி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் இலவச வேட்டி சேலை அளித்து. புதிய சரித்திரத்தைப் படைந்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவிதான் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறி விற்பனைப் பிரிவு; கோ-ஆப்டெக்ஸ். நெசவாளர்கள் கூட்டமைப்புதான் கோ-ஆப்டெக்ஸ் என்று பேரும் புகழும் பெற்று விளங்குகிறது. தமிழக கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் தாய் நிறுவனமாக இது செயல்படுகிறது.

[திரு. இ. மதுசூதனன்] [1992 ஏப்ரல் 7

துணி விற்பனை; 1990–91 ஆம் ஆண்டில், அதாவது
பெரியவர் கருணாநிதி தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த
போது ரூபாய் 137.72 கோடி விற்பனை செய்த கோ-ஆப்டெக்ஸ்
நிறுவனம், ஏழைகளின் இதய தெய்வம், தமிழகத்தின் முதல்வர்
புரட்சித் தலைவி பதவியேற்ற பிறகு 1991-92 ஆம் ஆண்டில் 165
கோடிக்கு மேல் விற்பனை நிகழ்த்தி, சாதனை படைத்து இருக்
கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

தீபாவளி விற்பனை; இந்தியாவிலுள்ள அனைத்து மாநில
தலைமை சங்கங்களை விட, தமிழக கோ-ஆப்டெக்ஸ் மாபெரும்
சாதனை புரிந்துள்ளது. ஆண்டு முழுவதும் 75 கோடி விற்பனை
செய்ய இயலாத நிலையில் உள்ளபோது, நமது கோ-ஆப்டெக்ஸ்
தீபாவளியில் மட்டும் 75.46கோடி விற்பனை சய்து (மேசையைத்
தட்டும் ஒலி) சாதனை புரிந்தது. இதுவும் முதியவர் கருணாநிதி
ஆட்சியில் இருந்த நேரத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நடந்த
விற்பனையை விட 15 கோடி விற்பனை அதிகம் என்பதை பெரு
மகிழ்ச்சியோடு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பட்டு விற்பனை. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் உயர்ரக
ஜரிகை மற்றும் கச்சா பட்டை உபயோகப்படுத்தி, அழகும் கலை
நயமும், சிறப்பும், விற்பனைக்கேற்ற கவர்ச்சி கொண்ட பட்டு
சேலைகளை கோ-ஆப்டெக்ஸ் கொண்டு வந்ததன் மூலமாக
1990-91 ஆம் ஆண்டு 28.44 கோடி ரூபாயாக இருந்த பட்டு
விற்பனை 1991-92 ஆம் ஆண்டு 39 கோடிக்கு மேல் பட்டு
விற்பனையை மட்டும் செய்து சாதனை புரிந்துள்ளது (மேசையைத்
தட்டும் ஒலி) என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்
கிறேன்.

கொள்முதல்; கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் உற்பத்தியை
வாங்குவதையும் கோ-ஆப்டெக்ஸ் முக்கியப்பணியாகச் செய்து வரு
கிறது. 1990-91 ஆம் ஆண்டு 111 கோடியாகவும் 1991-92 ஆம்
ஆண்டு 124 கோடிக்கு கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி நெசவாளர்கள்
பயன்பெற பிரதம சங்கங்களிடமிருந்து சரக்கு வாங்கியுள்ளது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய விற்பனை நிலையங்கள்; அதிகமான அளவில் சங்கங்
களிடமிரு து வாங்கியதாலும் விற்பனை ய அதிகப்படுத்துவதற்
காகவும் 1991-92 ஆம் ஆண்டு 8 புதிய விற்பனை நிலையங்களைத்
திறந்து விற்பனையைப் பெருக்க வழிவகை செய்துள்ளது.

நவீனபடுத்துதல்; கலையழகும், கண்கவரும் வண்ணமும் கோ-
ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டன.
1991-92ஆம் ஆண்டு இதன்படி 27 விற்பனை நிலையங்கள் நவீனப்
படுத்தப்பட்டதன் விளைவாக, 12.08 கோடி விற்பனையாக
இருந்தது 16.43 கோடியாக உயர்ந்து உள்ளது.



1992 ஏப்ரல் 7] [திரு. இ. மதுசூதனன்]

புதிய சேமிப்புக் கிடங்குகள். புதுடில்லியில் அமைந்துள்ள
தேசியக்கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் நிதியுதவியுடன் 1992-
93 ஆம் ஆண்டு வேலூர், திருச்சி, தஞ்சை, எர்ணாகுளம்,
கல்கத்தா மற்றும் ஹைதராபாத் ஆகிய இடங்களில்
வட்டார சேமிப்புக் கிடங்குகளைக் கட்டுவது என்று கோ-
ஆப்டெக்ஸ்-இல் திட்டமிடப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும்
ஒலி). வேலூரில் இருக்கிறது. சத்துவாச்சாரியிலே அல்ல.

பிற்பகல் 12-50

கைத்தறித் துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் இதர
நிறுவனங்கள். தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்.
தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 1975 ஆம் ஆண்டு
துவக்கப்பட்டது. இந்தக் கழகம் நெசவாளர் தொழிலாளர்கள்
மேம் ாட்டுக்காகவும் கைத்தறித் தொழிலைப் பொதுவாக
மேம்படுத்துவதற்காகவும், கூட்டுறவில் சேராத தொழிலாளர்
களுடைய மேம்பாட்டுக்காகவும் பாடுபட்டுக் கொண்டு வருகிறது.
இதன்மூலமாக 1991–92 ஆம் ஆண்டு ஜனவரி வரையிலும் 264.69
கடன் கொடுத்து, இதுவரையிலும் 71 சதவீதம் திரும்ப
பெறப்பட்டது. இதில் 1990-91 ஆம் ஆண்டில் 2.45 இலட்சம்
ரூபாய் இலாபம் அடைந்துள்ளது. இந்த நிறுவனம் 1991-92
ஆம் ஆண்டு ரூபாய் 6 இலட்சம் இலாபத்தை அடைந்திருக்கிறது
என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்
காலத்தில் கூட்டுறவுகளில் சேராத கைத்தறி நெசவாளர்களுக்குக்
குறைந்த விலையில் கச்சாப்பட்டை வெளிநாடுகளிலிருந்து
இறக்குமதி செய்து தந்து கூட்டுறவில் இயலாத அவர்களுக்குத்
தர வேண்டுமென்று திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று இரசாயனப் பொருட்களை நேரடியாகக்
கொள்முதல் மூலமாகக் குறைந்த விலையில் வழங்குவது என்று
இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு ஜரிகை ஆலை, காஞ்சீபுரம், இந்த ஆலை
பேரறிஞர் அண்ணாவினால் துவக்கப்பட்டது. நெசவாளர்
களுக்குத் தேவையான தரமான ஜரிகையை உற்பத்தி செய்வது,
மட்டுமின்றி, பட்டு மற்றும் பருத்தி நெசவாளர்களுக்குக்
கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாய விலையில் விநியோகம்
செய்வது; தமிழ்நாடு ஜரிகை நெசவாளர்களுக்குக் கூட்டுறவுச்
சங்கங்களுக்குத் தேவைப்படும் மொத்த ஜரிகையில் 10 சதவீதம்
மட்டுமே தயாரித்து வருகிறது. இந்த ஆலையின் உற்பத்தியினை
40 சதவீதம் அதிகரிக்க ஒரு விரிவான திட்டம் மேற்கொள்ளப்
பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் இந்த ஆலையில் 17,818
மார்க்குகள் ஜரிகை உற்பத்தி செய்து, ரூபாய் 440.51 இலட்சம்
அளவில் விற்பனை முடித்து அதன் மூலமாக 9.84 இலட்சம்

இலாபத்தை ஈட்டியுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் இந்த ஆலை 22,600 மார்க்குகள் ஜரிகை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு துணிநூல் கழகம், கோயம்புத்தூர்; தமிழ்நாடு துணிநூல் கழகம் நலிவடைந்துள்ள நூற்பாலைகளை எடுத்து நடத்துதல், விசைத்தறிக் கூடங்கள் அமைத்தல், கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தேவையான தொழில் நுட்ப வசதிகள் செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. இத்துடன் விசைத்தறிக் கூடங்களில் தயாராகும் துணிகளை விற்பனை செய்யும் பணியையும் நடத்திவருகிறது. இதன்படி 1991-92ஆம் ஆண்டில் விசைத்தறிக் கூடத்தின் மூலமாக உற்பத்தியான துணிகளை ரூபாய் 747.68 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது நலிவடைந்த சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில் ஆலையைக் கவனித்து வரும் இந்தக் கழகம் 1991-92 ஆம் ஆண்டில் இவ்வாலையின் உற்பத்தியான நூல் 284.40 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தண்டாயுதபாணி அவர்களுடைய கேள்விகளுக்கு நான் அளித்த பதிலில் விளக்கம் இருக்குமென்று கருதுகிறேன். தற்போது ஜகாட் தறிகளுக்கு 4,000 வழங்கப்படுகிறது, அதை 12,000 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சட்டத் தறிகளுக்கு 4,000-மும் ஜகாட் தறிகளுக்கு 8,000மும் உபகரணங் களுக்கு இந்த 4,000; 2,000; 1,000 தரப்படுகிறது. இதை உயர்த்த வேண்டுமென்பதற்காகப் பரிசிலித்து வருகிறோம். சட்டத் தறிகளுக்கு 2,000 தருவதை 4,000 ஆகவும், ஜகாட் தறிகளுக்கு 8,000 தருவதற்கு இப்பொழுது ஏறியிருக்கிற விலை வாசிகளைக் கருத்திற்கொண்டு இதற்காக மத்திய அரசோடு கலந்தாலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தண்டாயுதபாணி அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி அவர்கள் நூலின் தரம் உயர்த்த கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப் படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் 12 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த 25 கோடி ரூபாய் அளவில் அறிக்கை ஒன்று தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அவை சிறப்பாக நடைபெற ஐ.டி.பி.ஐ-க்கு வழிவகைச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

பர்கூர் கூட்டுறவு நூற்பாலைக்கு அன்னை சந்தியா என்ற பெயரை வைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொன்னார்கள்.



ஏற்கெனவே ஜி.ஓ. வழங்கப்பட்டுவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த அவையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் காயிதே மில்லத் மாவட்டத்தில் நூற்பாலை தேவை என்று கூறியுள்ளார் கள். ஏற்கெனவே மயிலாடுதுறையில் 30,000 தறிகள் கொண்ட ஒரு நூற்பாலை இருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 18 நூற்பாலைகள் இருக்கின்றன. அவைகளில் 16,000 முதல் 18,000 பேல்கள் வரை நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்போதே நாம் உபரி மாநிலமாக நூல் உற்பத்தியிலே இருக்கிறோம் என்பதை அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு குறைபாடுகளை இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் பரிசீலிக் கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அருமை நண்பர், மாண்புமிகு கடலூர் ஜனார்த்தனன் அவர்கள் எடுத்து வைத்த அனைத்துப்பிரச்சினைகளும் பரிசீலனையில் உள்ளன. அவர் இறுதி யாகச் சொன்னது அண்ணா தி.மு.க-வின் ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர், நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த நாளில் நல்ஜுபடி தரவேண்டும் என்பது. அது வரவேற்கத்தக்க ஒன்றுதான். அது குறித்து அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சில மாண்புமிகு உறுப்பினர்கள் விசைத்தறிக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்றும் அருகில் இருக்கிற மாநிலங்களில் எல்லாம் விசைத்தறிக்கு மின்சாரக் கட்டணம் குறைவாக இருக்கிறது என்றும் கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, 1200 கோடி ரூபாய் துண்டு தமிழ்நாட்டில்தான் ஏறத்தாழ பட்ஜெட்டை வைத்துவிட்டு, புரட்சித் தலைவி அவர்களிடத்திலே ஒப்படைத்துவிட்டுச் சென்றார்கள். தமிழ்நாட்டைச் சுற்றித்தான் ஒருபுறத்திலே விடுதலைப் புலிகள், ஒருபுறத்திலே கொலைகாரக் கும்பலை வைத்துக்கொண்டு அவர்களைச் சமாளித்து, தாய் உள்ளத்தின் தலைவியாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எதையும் தாங்கும் இதயத்தோடு ஆட்சி செய்துகொண்டிருக் கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). இத்தகைய நிதிநிலை நெருக்கடியிலும் கூட கைத்தறிக்கு இவ்வளவு சலுகைகளை அளித்திருக்கிறார்கள். அச்சம் என்பது மடமையடா என்பதை நிரூபித்துக் காட்டிக்கொண்டிருக்கிற வரலாற்று நாயகியாக (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழ்நாட்டின் ஒப்பற்ற

தலைவியாக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. நீங்களும் மனித நேயத்தோடு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வெட்டுத் தீர்மானங்கள். கைத்தறி மற்றும் துணி நூல் துறையைப் பொறுத்தவரையில் அரசின் கொள்கை பற்றி விவாதிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். சிங்காரம், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. மெ. ஆண்டி அம்பலம், திரு. எம். எம். எஸ். அபுல்ஹாசன், திரு. சோ. இராசாராமன், திரு. கே. கே. சின்னப்பன், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன், திரு. பி. வி. இராஜேந்திரன், திரு. எ. தெய்வநாயகம், திரு. ப.ரங்கநாதன் திரு. எச்.எம்.ராஜு போன்றவர்கள் வெட்டுத்தீர்மானங்களைத் தந்துள்ளார்கள். இந்த அரசினுடைய கொள்கைகளும் குறிப்புகளும் அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவை போதும் என்று கருதுகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள் கைத்தறிகளைப் பழுதுபார்ப்பதற்கும் இயந்திரங்கள் தருவதற்கும் கேள்விகளை எழுப்பியிருககிறார்கள். ஜாக்கார்டு தறிகள் வாங்குவதற்கு 4000 ரூபாய் வழங்கப்படுகிறது. கைத்தறிகளைப் பழுது பார்ப்பதற்கு அரசு நிதி தருவதில்லை. மாறாக பழைய தறிகளை மாற்றி, புதிய கைத்தறிகளைத் தருவதற்காக உதவி செய்யப்படுகிறது. ஜாக்கார்டு தறிகளுக்கு 4000 ரூபாய் வழங்கிக் கொண்டிருப்பதை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசுடன் பேசிக் கொண்டிருககிறோம்.

சாதாரண தறிகளுக்கு தற்சமயம் 2000 ரூபாய் தருகிறோம். அதை 4000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். தறி உபகரணங்கள் வாங்க 1000 ரூபாய் வழங்கப்பட்டு வருவதை 2000 ரூபாயாக உயர்த்த பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. மேற்கண்ட தொகையில் மூன்றில் இரண்டு பங்கு கடனாகவும், மூன்றில் ஒரு பங்கு மானியமாகவும் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 1-00

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், சத்துவாச்சாரியில் 'கோ-ஆப்டெக்ஸ்' நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். வேலூரில் ஏற்கெனவே 3 நிலையங்கள் இருக்கின்றன. சத்துவாச்சாரியிலே உள்ள வியாபாரிகள் அங்கே வந்து வாங்கிக் கொள்ளலாம் என்று உங்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராசாராமன், வெளிநாடு களில் விற்பனைக் கழகங்கள் அமைப்பது குறித்து வெட்டுத் தீர்மானம் கொடுத்துள்ளார். இப்போது 'கோ-ஆப்டெக்ஸ்' வாயிலாக அமெரிக்கா, நியூஸிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, சுவிட்ஸர்லாந்து, டென்மார்க் போன்ற இடங்களில் நாம் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய இந்த முயற்சியினால் ஒரு கோடி ரூபாய் அளவுக்குத்தான் எட்டியுள் யுள்ளோம். ஏற்கெனவே கோ-ஆப்டெக்ஸ் நிலையத்தை சிங்கப்பூர் போன்ற இடங்களில் எல்லாம் வைத்து, செலவு அதிகமாகி இருக்கிற காரணத்தினால், அது மூடப்பட்டது. ஆதலால், இதற்காக ஒரு புதிய திட்டத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் இறுதியில் அறிவிக்கிறேன். காரணம், நெசவாளி நேரடியாகப் பயனடைய வேண்டும் என்பதில் அக்கறையுள்ள தலைவி, புரட்சித் தலைவி அவர்கள்தான். எப்படி, தான் நடத்துகிற இயக்கத்தில் கொடி கட்டுகிற தொண்டனை முடிவெடுக்க விடுகிறார்களோ, அவர் களுக்கு உரிமைகளைத் தருகிறார்களோ, அதேபோன்று, அடித்தளத்திலே இருக்கிற, சாலையோரத்திலே இருக்கிற ஏழை எளிய நெசவாளி பயனடைய வேண்டும் என்பதற்காகத் திட்டங் களை உருவாக்கிக் கொண்டிருக்கிற தலைவி, தமிழகத்தை ஆளுகிறார்கள். இதை மறந்துவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தஞ்சாவூர் மாவட்டம், பாபனாசம் தொகுதி அய்யம்பேட்டை பேரூராட்சிக் கழக கைத்தறி நெசவாளர்களுக்கு பட்டு நூல் சரிவரக் கிடைக்கவில்லை என்றும் அவர் வெட்டுத் தீர்மானத்தைத் தந்திருக்கிறார். மேற்கண்ட மாவட்டத்தில், வ.உ.சி. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் உள்ளது. இதிலே மொத்தம் 176 தறிகள் உள்ளன. 20 தறிகள் மட்டுமே இயங்குகின்றன. மீதித் தறிகள் இயங்குவதில்லை; செயல்படுவ தில்லை. அதற்கான நிதியுதவி, நடப்பாண்டில், மத்தியக் கூட்டுறவு வங்கியிடம் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாயும், அரசு பங்கு மூலதனமாக ரூ. 40 ஆயிரமும், பங்கு மூலதனக் கடனாக 5,035 ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இதற்காக மூலதனம் 1 லட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. இந்த நிதியைப் பெற்றுக் கொண்ட பிறகு, இவர்களுக்கு மாநில ஜரிகைக் கழகத்தின் மூலம், ஜரிகையும் வாங்கி அந்தச் சங்க உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்யப் படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு, சிங்காரம் அவர்கள் சங்க் உறுப்பினர்களுக்கு நூல் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டைக சொல்லியிருக்கிறார். கூட்டுறவு நூற்பாலையிலே—கூட்டுறவிலே

இருப்பவர்களுக்கு நூல், கோ-ஆப்டெக்ஸ் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. கோ-ஆப்டெக்ஸிலே நூல் இல்லையென்றால்கூட, தேசிய துணி நூல் கழகத்தின் மற்றும் தேசிய அபிவிருத்திக் கழகத்தின் மூலமாக வாங்கி, குறைந்த விலையில் கூட்டுறவிலே உள்ள நெசவாளர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர் பகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் கடலூரிலே உள்ளவர்களுக்கு, கைத்தறித் துறை மூலமாகத் தருகிற சலுகைகள் தெரியவில்லை என்று கூறியிருக்கிறார். கடலூரில் 1540 நெசவாளர்கள் உள்ளனர். அதில் 790 பேர் மட்டுமே கூட்டுறவுச் சங்கத்தில் உள்ளனர். சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், அரசு பங்கு மூலதனம், அரசு பங்குத் தொகை கடன், தறிகள் நவீனப்படுத்தும் திட்டம், நெசவாளர் குடியிருப்புத் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம் ஆகியவை எல்லாம் கூட்டுறவு வார விழாவிலே மற்றும் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலமாகவும், கூட்டுறவு மாத இதழ் மூலமாகவும் விளம்பரம் செய்யப்படுகிறது. அதை அங்கு இருக்கிற நெசவாளர்கள் நன்றாக உணர்வார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், கைத்தறிச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவதுபற்றிக் கேட்டிருக்கிறார். தமிழகத்தில் அனைத்துப் பிரதம கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேர்தல் நடத்தும்போது, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல் நடக்கும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜு அவர்கள், கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் ஈவுத் தொகை வழங்குவது குறித்து வெட்டுத் தீர்மானத்தைத் தந்துள்ளார். தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 83—84-ஆம் ஆண்டில் 5.2 லட்சம் ரூபாய் லாபத்தை ஈட்டியுள்ளது. 1984—85-ஆம் ஆண்டு ரூ. 3.5 லட்சம் லாபத்தை ஈட்டியுள்ளது. 1985-86-ஆம் ஆண்டு ரூ. 4.47லட்சம் லாபத்தை ஈட்டியுள்ளது. ஈவுத் தொகையாக வழங்கப்பட்டது. 1986—87-ஆம் ஆண்டு முதல் லாபம், லாபத்திலிருந்து வருமான வரி, பொதுக் காப்பீட்டு நிதி மற்றும் ஏனைய ஒதுக்கீடுகளுக்குப் பிறகு போதுமான லாபத்தை ஈட்ட முடியவில்லை. அதனால், ஈவுத் தொகையைத் தர முடியவில்லை. இலாபம் ஈட்டுமேயானால் அவர்களுக்கு ஈவுத் தொகை தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பிற...

அதேபோன்று பல்வேறு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் தந்துள்ளார்கள். அவைகள் எல்லாம் என்னுடைய பரிசீலனையில் உள்ளன. அவைகளை விசாரித்து தக்க நடவடிக்கைகள், நியாயமான முறையில், நீதியான முறையில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போலி உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. தம்புசாமி அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். அதற்கு நான் விளக்கம் தருவதற்கு மறந்து விட்டேன். யாருடைய காலத்தில் எவ்வளவு போலி உறுப்பினர்களை எப்படிச் சேர்த்தார்கள் என்பதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்ற தத்துவத்திற்கிணங்க உழைப்பை மதிக்கிற தலைவிதான் தமிழகத்தின் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் தான் இப்பொழுது ஒரு அறிவிப்பை அறிவிக்கப் போகிறோம். உழைப்பாளர்களின் நலனுக்கு ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு முடிவை-புரட்சித் தலைவி அவர்கள் ஒரு ஆலோசனை கூறியுள்ளார்கள். ஆதலால் எங்களைப் பொறுத்த அளவில், போலி வேலை, வேஷம் போடுகிற வேலை, வேஷதாரிகள் அல்ல நாங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மேடையில் ஒன்று பேசிவிட்டு, இம்மாமன்றத்தில் ஒன்று பேசுகிறவர்கள் அல்ல நாங்கள். எங்களைப் பொறுத்த அளவில் 'கையிலே காசு இல்லை; நெஞ்சிலே மாசு இல்லை' என்று தான் நாங்கள் நடந்துகொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதலால் நீங்கள் தயவு செய்து அஞ்ச வேண்டாம். எங்களிடத்தில் தர்மமும், நீதியும், உண்மையும் நிலைக்க வேண்டும் என்பதற்காகத் தான் எங்களுடைய ஒப்பற்ற தலைவி எங்களை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

72,000 போலி உறுப்பினர்களைக் கடந்த ஆட்சியின்போது சேர்த்திருக்கிறார்கள். அதிலே இதுவரையிலும் 44,000 போலி உறுப்பினர்களை நீக்கி இருக்கிறோம். மீதம் உள்ளவர்களையும் நீக்க இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், தறி என்றால் என்ன என்று தெரியாதவர்கள் பாவு என்றால் என்ன என்று தெரியாதவர்கள் இவர்களையும் எல்லாம் உறுப்பினர்களாக பட்டு சொசைட்டிகளில் சேர்த்து இருக்கிறார்கள். பிறகு ஏன் நஷ்டம் ஏற்படாது. மன்றத்தில் உள்ளவர்கள் ஒரு கணம் சிந்திக்க வேண்டும். (மேசையைத்

தட்டும் ஒலி) ஏதோ தோழமைக் கட்சி நண்பர்கள் என்பதற்காக நான் உண்மையை, நீதியை, தர்மத்தை மூடி மறைக்க முடியாது. சூரியனுடைய ஒளியைக் கையால் மூடி மறைக்க முடியாது. ஆகவே, நியாயத்தின் வழியிலே இன்றைய தினம் உழைக்கிற நெசவாளிகள் பயன் அடைய வேண்டும், இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் துறையை வளர்க்க வேண்டும் என்று பார்க்காமல், தொழிலிலே உள்ள நெசவாளிகள் வாழ வேண்டும் என்பதற்காக உழைத்துக் கொண்டிருக்கிறவர்தான் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி என்பதனை நான் உங்களுக்கு நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட தலைவிதான், எங்களை ஒழுங்கான முறையில், நேர்மையான முறையில், நீதியான முறையில் நடக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார்கள். அன்றைய தினம் சொன்னதைப்போல இன்றும் சொல்கிறேன். "ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்ன புரட்சித் தலைவரின் வாரிசாக விளங்குகிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் தமிழகத்தை ஆள்கிறார். இல்லை என்றால் எங்களைப் போன்ற கொடி கட்டுகிற தொண்டர்களை இந்த நிலைக்கு ஆளாக்கி இருக்கமாட்டார்கள். நானும் 38 வருடங்களாக அரசியலில் இருந்தேன். இன்றுதான் எனக்கு அங்கீகாரம் கிடைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

<u>எதிர்காலத் திட்டங்கள்.</u>—கைத்தறிக் கூட்டுறவுக்கு என்று தனி வங்கி தேவை என்று புரட்சித் தலைவி கருதுகிற காரணத்தினால் இந்த வங்கியை இந்தத் துறையில் ஏற்படுத்துகின்ற நேரத்தில் கைத்தறி நெசவாளர்களுடைய குறைபாடுகள், அவர்களுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவதற்கு, கைத்தறி நெசவாளர்களுடைய வாட்டத்தைப் போக்கிட, அவர்கள் பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற கைத்தறி நெசவாளர்களுக்கு என்று ஒரு கூட்டுறவு வங்கி தேவையெனக் கருதி அதன் மாநில மற்றும் வட்டாரக் கிளைகளை அமைக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திட்டம் தீட்டியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது குறித்து இந்திய ரிசர்வ் வங்கிக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் துறையைப் பணித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்றுமதி வளர்ச்சி மையத்தைத் திருப்பூரில் உருவாக்க புரட்சித் தலைவி அவர்கள் திட்டத்தைத் தீட்டியுள்ளார்கள்.



பிற்பகல் 1-10

இப்போது ஏற்கெனவே 700 கோடி ரூபாய்; இந்த நாட்டினுடைய அதாவது இந்தியத் துணைக்கண்டத்தினுடைய பொருளாதாரத்தை வளர்ப்பதற்காக வருங்காலத்தில் அதாவது இன்னும் ஒரு 7, 8 ஆண்டுக்காலத்திற்குள் ஏறத்தாழ 2,500 கோடிகளுக்கு மேல் அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிற அளவுக்கு இந்த பின்னல் ஆடை முன்னேறி வருகிறது. அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் ஆரோக்கியத்துடனும், அனைத்து வசதிகளுடனும் இருக்கவேண்டும் என்பதற்காக அவர்களுக்குத் தேவையான குடிதண்ணீர் வசதி மற்றும் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கூட வெட்டுத் தீர்மானம் தந்திருக்கிறார்கள். நேற்றைய தினமே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துவிட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதி நிறுவனத்திடத்தில் இதனை ஒப்படைத்து திருப்பூருக்குத் தேவையான ஏற்றுமதி மையத்தை இந்த இடத்தில் உருவாக்கி அவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்துதரவேண்டும் என்று கட்டளை பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்கள் பரிசுத் திட்டம். தொழிலாளிகள் முடிவெடுக்க வேண்டும். ஒரு தொழில் முன்னேற வேண்டுமென்றால் அந்தத் தொழிலில் இருக்கின்ற அதாவது அடிப்படையில் இருக்கின்ற தொழிலாளர்கள் முன்னேற வேண்டும். அந்தத் தொழிலாளர்களுடைய முடிவுக்கேற்ப தறியின் தரத்தினை உயர்த்த, பயன் உள்ள ஆலோசனைகளைத் தரும் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அவர்களுடைய ஆலோசனையின் பயனுக்கேற்ப 5,000 ரூபாய் முதல் பரிசாகவும், 3,000 ரூபாய் இரண்டாவது பரிசாகவும், 2,000 ரூபாய் மூன்றாவது பரிசாகவும் அளிக்கவேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் வாயிலாக ஒரு தொழிற்சாலையில் இருக்கிற தொழிலாளி,—ஜப்பான் போன்ற நாடுகளில் எல்லாம் இப்படிப்பட்ட திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒரு தொழிலாளி தன்னுடைய கருத்துக்களைத் தரவேண்டும். அதாவது இலாபம் ஈட்டுவதற்கு ஆலோசனை தரவேண்டும். ஒரு தொழிற்சாலையில் 20 கவுன்ட்ஸ் வரவேண்டும்; ஆனால் 10 கவுன்ட்ஸ்தான் வருகிறது என்றால் அதனுடைய குறைபாடுகள் என்ன என்பதை நன்றாக உணர்ந்தவன் அடிமட்டத்தில் இருக்கின்ற தொழிலாளி. அந்த அடிமட்டத்தில் இருக்கின்ற தொழிலாளிகளின் உணர்வுகள் மதிக்கப்படவேண்டும் என்பதற்காக அவர்களுடைய ஆலோசனைகளை எடுத்துக்கொண்டு அவர்களின் பயனுள்ள ஆலோசனைகளுக்குப்

பரிசு தரவேண்டும் என்பதற்காக, உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்ற தத்துவத்திற்கிணங்க இந்த லட்சியத்தை உருவாக்கி இருக்கிறார்கள். பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இதனை வரவேற்பார்கள் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து கைத்தறி கிராமம் அமைத்தல். நெசவாளர்கள் அதிகமாக வாழ்ந்துவரும் அடிப்படை வசதி இல்லாத கிராமங்களை அரசே தத்து எடுக்கவேண்டும், கைத்தறி கிராமம் என்று அதை அறிவிக்கவேண்டும் என்ற அந்த வகையில் ஒரு வளர்ச்சித் திட்டம். அதாவது 25 இலட்சம் ரூபாயில் அனைத்து வசதிகளோடு கைத்தறி கிராமமாக செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள வளாகம் என்ற கிராமத்தைத் தத்து எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து குவாலிட்டீஸ் சர்க்கிள். கூட்டுறவு நூற்பாலைகள் தர நிர்ணயக் குழு அமைத்தல். கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தித் திறனை உயர்த்தி ஆலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளிகள் மற்றும் ஆலை அலுவலர்களைக் கொண்ட தர நிர்ணயக் குழு அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறி மற்றும் நூற்பு தொழில் நுட்ப ஆலோசனைக் குழு, அதாவது அட்வைசரி போர்ட். அதாவது எப்படி நூற்பாலைகளையும், கைத்தறியையும் வளர்ப்பதற்கு என்பதற்காக ஒரு ஆலோசனைக் குழுவை, அதாவது சிறந்த அறிவாற்றல் படைத்தவர்களை வைத்து ஒரு தொழில் நுட்ப ஆலோசனைக் குழு அமைக்கவேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஏற்கெனவே சொன்னேனே, சாதாரண சொசைட்டியில் இருக்கிற—இங்கே கூட பல நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். சின்னாளம்பட்டி போன்ற இடங்களில் எல்லாம் உற்பத்தி ஆகின்ற பொருட்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இயலவில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு வழிவகை செய்து தருவதற்காகத்தான் அயல் நாடுகளில் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதி வளர்ச்சிக்காக ஏஜெண்டுகளை நியமிப்பது; இங்கே இருக்கின்ற பொருளை அங்கே விற்கவேண்டும் என்று விரும்பினால் அந்தப் பகுதியில் இருக்கின்ற ஒரு இந்தியனை அல்லது ஒரு தமிழனை வளர்ப்பதன்



மூலம் இங்கே இருக்கிற பொருளை நேரடியாக சொசைட்டியே இடைத்தரகர்கள் இல்லாமல் விற்க, அந்த ஏழை, எளிய நெசவாளர்களுடைய வாழ்க்கையில் வாட்டத்தைப்போக்கி, வறுமையைப் போக்கிட, அவர்கள் பொருளாதார ரீதியில் வளர வேண்டும் என்பதற்காக ஏஜெண்டுகளைத் தரவேண்டும் என்று தாயுள்ளத்தின் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன அனைத்துக் கருத்துகளுக்கும் தக்க நடவடிக்கைகள் நியாயமான முறையில் எடுக்கப்படும். நீங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்கள் பேரிலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் **1–15**

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. வே. தம்புசாமி.

<u>திரு. வே. தம்புசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் குறைந்த பட்ச கூலி சட்டம் கொண்டு வந்து அது இப்போது தடையிலே இருக்கிறது. அது சம்பந்தமாக அரசினுடைய நிலை என்ன என்பதனை விளக்கவில்லை. இரண்டாவது சில கூட்டுறவுச் சங்கங்களிலே நீண்ட காலமாக பணியாற்றிய ஊழியர்களை நிரந்தரம் ஆக்குவதற்கு ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு அது அப்படியே இருக்கிறது. அது எதிர்காலத்தில் செயல்படுமா என்ன என்பதைப் பற்றி விளக்கவில்லை. அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தம்புசாமி அவர்கள் கொடுத்திருக்கின்ற குறிப்புகள் என்னிடத்திலே இருக்கின்றன. சில குறிப்புகள் தற்சமயம் இல்லை. அதற்கான தக்க நடவடிக்கைகளை நீதியான முறையிலே, நேர்மையான முறையிலே எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. சோ. பாலகிருஷ்ணன்.

<u>திரு. சோ. பாலகிருஷ்ணன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை பகுதியில் புத்தேனந்தல் கிராமத்தில் உள்ள சோமசுந்தரம் மில்

மூடப்போவதாக அங்கே இருக்கின்ற மில் தொழிலாளர்கள் எல்லாம் அஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரால் நடத்தப்படுகின்ற ஆலை களையே நடத்தி வருகின்ற கருணை உள்ளத் தலைவி தமிழகத்தினை ஆளுகின்றார் என்பதை நீங்கள் மறந்துவிட வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி) சோமசுந்தரம் மில் ஓரளவுக்கு அதுவும் தனியாருடைய ஆலை தான். நம்முடைய கைத்தறி துறையின் சார்பில் அவைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதற்கெல்லாம் அப்படிப்பட்ட ஆபத்துகள் வராது என்பதனை இந்த அவையின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திர சேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் சார்பாக மானியக் கோரிக்கை நடக்கின்ற சமயத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் அந்த துறையின் சார்பாக பரிசுப் பொருட்கள் வழங்குவது வழக்கம். இந்த மானிய கோரிக்கை யிலேயே கவனம் செலுத்திய காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறந்துவிட்டார்கள் என்று நினைக் கிறேன். அந்த பரிசுப் பொருட்களை எல்லாம் எங்களுக்கு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடுமையான சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உத்தரவைப் போட்டிருக்கிறார். (சிரிப்பு) அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதிலே கொண்டிருப்பார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுங் கள்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் விரும்பினால் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக கடன் தரப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாயிரம் வீடுகளை தறியுடனே கூடியதை கட்டப்போவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்





அறிவித்தார்கள். எந்தெந்த இடங்களில் அவை கட்டப்படும் என்று இந்த இடத்திலே குறிப்பிடவில்லை. இருந்தாலும் வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் பனப்பாக்கத்தில், சத்துவாச்சாரி, குடியாத்தம் போன்ற இடங்களில் நெசவாளர்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற காரணத்தினாலே அங்கே குறைந்த அளவு ஒரு 500 வீடுகளையாவது கட்டித் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்டு இருப்பதே 2 ஆயிரம் வீடுகள். அதில் நான்கில் ஒரு பங்கைக் கேட்கிறார். அதை யோசித்து உங்களிடத்திலே இருக்கின்ற நெசவாளர்கள் எத்தனை பேர்? எவ்வளவு சதவிகிதம் உங்களுடைய பகுதிக்கு ஒதுக்கீடு வரும் என்பதனை எல்லாம் தீர யோசித்து, அந்த இடத்திலே நிலம் இருக்கிறதா என்பதனை எல்லாம் பரிசீலித்து, பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான குன்னூரில் மிக நல்ல சீதோஷ்ண நிலை இருக்கிறது. 23 டிகிரி சென்டிகிரேட்-ல் நூல் நூற்றால் அது 'ஸ்ட்ரெட்சிங்' அல்லது 'சிரிங்கிங்' ஆவதில்லை. அதாவது சுருங்குவதும் இல்லை, விரிவடைவதும் இல்லை. சேரன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்கு உமா டெக்ஸ்டைல் என்ற ஒரு தனியார் நிறுவனம் ஒரு வருடத்திற்கு 3 ஆயிரம் பனியன்களை நெய்து கொடுக்கின்றார்கள். ஆகவே, அதை நன்கு பரிசீலித்து, அந்த அருமையான சூழ்நிலையில், சீதோஷ்ண நிலையில், அதைப்போன்ற பனியன்களை நெய்வதற்கு ஊக்குவிக்கப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஊக்குவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆர். ஜெய ராமன்.

திரு. எஸ். ஆர். ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், புரட்சித் தலைவி அவர்கள் நமது தமிழகத்திலே இருக்கக்கூடிய, அடிமட்டத்திலே இருக்கக்கூடிய ஏழைகளுக்கு பல சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே வயிறு ஒட்டி வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஏழை நெசவாளிகளை தங்களுடைய

நிலைகளை உயர்த்திக்கொள்வதற்கு, மாறுதலாக, அவர்கள் விசைத் தறியிலே செல்லுகின்ற இந்த நேரத்திலே, அந்த மின்சார சலுகைகளை அவர்கள் அறிவிக்கவேண்டும் என்று உங்கள் வாயிலாக நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.20

மாண்மிகு பேரவைத் தலைவர்: என்ன விளக்கம் கேட்கிறீர்கள்?

திரு. எஸ். ஆர். ஜெயராமன்; மேலும் எங்களுடைய சேலம் மாவட்டத்திலே கைத்தறிகள் சரித்திரக் காலத்திலேயிருந்து அங்கே நெய்யப்படுகின்றன. அந்தக் கைத்தறிகளிலே மாறுதல் செய்து இன்று நாங்கள் ஏறத்தாழ 450 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி ஜவுளிகளை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம். அப்படி ஏற்றுமதி செய்கின்ற அந்த ஜவுளிகளைப் பற்றி கடந்த 15, 17 ஆண்டுகளாக எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர்களாக வந்தவர்கள் அந்த நிலைப்பற்றி எடுத்துச் சொல்லாத காரணத்தாலே இன்றுவரை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெயராமன், என்ன விளக்கம் என்று கேட்க வேண்டும். நீங்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருக்கிறீர்கள். அமைச்சர் சொன்னதில் உங்களுக்கு என்ன விளக்கம் தேவை. அதைக் கேளுங்கள்.

திரு. எஸ். ஆர். ஜெயராமன்; ஏற்றுமதி காம்ப்ளக்ஸை ஏற்படுத்த வேண்டுமென்று எங்களுடைய மாவட்டத்ினுடைய மாப்பிள்ளை நிதியமைச்சர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. வி. தண்டாயுதபாணி.

திரு. வி. தண்டாயுதபாணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்கள் இறந்துவிட்டால் 15 ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்றும், 58 வயது நிறைந்தவர் இறந்துவிட்டால், மாதாமாதம் 250 ரூபாய் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். ஓய்வு பெறுவது எந்த வயது என்று சரியாக சொல்லவில்லை. அது ஓய்வூதியமா, இறப்பு ஊதியமா என்பது விளக்கமாக இல்லை. ஒருவர் 60 வயது அலலது 62 வயது வரையிலே வாழ்ந்து வந்தால் அவருக்கு அந்த 250 ரூபாய் உண்டா இல்லையா என்ற விளக்கத்தை அமைச்சர் அவர்கள் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்த குடும்பங்களுக்குத்தான், அவர்கள் தான் வாழ வகையற்றவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய



குடும்பங்களை, அநாதைகளைக் காப்பாற்றுவதுதான் நம்முடைய தலையாய கடமை. நெசவாளர்களைப் பொறுத்தவரை தொழில் நுட்பம் கொண்டவர்கள் அவர்களுக்கு ஓய்வு வயதே கிடையாது. அவர்கள் எந்த வயதிலேயும் அவர்களுடைய அறிவாற்றலை பயன்படுத்தி நெசவு தொழிலை செய்யக்கூடும். ஆதலால்தான் நெசவாளர்கள் வளர்ச்சிக்காக தான் கைத்தறிகளை விசைத் தறிகளாக ஆக்குகிறோம். கைத்தறிகளை நவீனப்படுத்து கிறோம். இந்த இரண்டு திட்டங்களை வைத்திருக்கிறோம். ஆதலால், மாண்புமிகு உறுப்பினர் அதற்குரிய தக்க குறிப்புகளை தருவார்களேயானால் தீர விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. கே. கந்தசாமி.

திரு. கே. கந்தசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அம்மாபேட்டை நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரிபேட் கொடுத்த வகையில் 55 இலட்சம் ரூபாயும் கோவாப்டெக்ஸ் நிறுவனம் துணி வாங்கிய வகையில் 49 இலட்சம் ரூபாயும் ஆகமொத்தம் ஒரு கோடியே 4 இலட்சம் ரூபாய் அரசு அந்த நெசவாளர் சங்கத்திற்கு தர வேண்டியுள்ளது; அந்த நெசவாளர் சங்கத்தில் உள்ள ஊழியர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியாமல் நிலைமை உள்ளது. ஆகவே அரசு இதை உடனடியாக கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்;

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களிலே மாஸ்டர் வீவர் களிடத்திலே கூலி நெசவாளர்கள் மாட்டிக் கொண்டு அவர்களிடத்திலேயிருந்து கடன் வாங்குகிறார்கள் பிறகு அந்தக் கடனை அவர்கள் கட்ட முடியாத சூழ்நிலை ஏற்படுகிற காரணத்தாலே அவர்களுக்காக இந்த மாதிரி கூட்டுறவு முறையிலே, வெளியிலே அமைத்துக்கொண்டு தொழில் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அப்படி மாஸ்டர் வீவர்களிடத்திலே மாட்டிக் கொண்டிருக்கிற கூலி நெசவாளர்களுக்கு அரசு ஏதாவது உதவி செய்து அவர்களுடைய பிடியிலிருந்து வெளியேற்றுவதற் கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிபட்ட பிரச்சினைகள் மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்ற தொகுதியில் ஏற்படுமானால் அவர்களாகவே ஒரு கூட்டுறவு சங்கத்தை அமைத்து, அவர்கள் அதில் உறுப்பினராக ஆகாமல், நெசவாளர்களை அவர் உறுப்பினர்களாக ஆக்கி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு உதவி செய்வார்களானால் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: உண்மைக்குப் புறம்பான விஷயங்களைச் சொல்லி நான் வாங்குவது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. இராம இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தையும், காயிதே மில்லத் மாவட்டத்தையும் சேர்ந்த முழுமையான, அதிகப்படியான நெசவாளப் பெருங்குடி மக்கள் என்னுடைய நெசவாளப் பெருங்குடி மக்கள் என்னுடைய கும்பகோணம் தொகுதியிலே வாழ்ந்து வருகிறார்கள். நம்முடைய அரசாங்கத்தின் சார்பாக நம்முடைய ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் கட்டிக் கொடுக்கின்ற வீடுகளில் என்னுடைய கும்பகோணம் தொகுதியிலே இருக்கின்ற நெசவாளப் பெருங்குடி மக்களுக்கு முன்னுரிமையோடு, கருணையோடு பரிசீலித்து .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேளுங்கள்.

திரு. இராம இராமநாதன்; வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன். அதை வழங்க வேண்டுமென்று அவர்கள் பொற்பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதியவர்கள் என்று சொன்னார்கள், அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தெரிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1.25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிப்பிட்ட வாசகம், வேறு மரியாதை காரணமாகச் சொன்னது. அதற்கும் ஓய்வூதியத்திற்கும் சம்பந்தமில்லை. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண், 26. கைத்தறியும் துணித் தொழிலும். வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றதா என அறிய விரும்புகிறேன். திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாக கருதப்படுகிறது



"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 26 ஆம் எண் மானியக்கோரிக்கையின் கீழ் ரூ. 60,82,77,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. ஆம்

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்,

தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-4-1992) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.26 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டபடிக்கான விதிகளும், ஆணைகளும்

54. ஸ்தர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான முப்பத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ் ஆங்கிலம்).

55. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (1990-91 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது. (தமிழ்—ஆங்கிலம்).

56. தமிழ்நாடு சீட்டுக் கழகத்தின் 1989-90-ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

82. கோரிக்கை எண். 49-குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93 (தமிழ், ஆங்கிலம்).

83. கோரிக்கை எண். 50 — நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் பற்றிய கொள்கை விளக்கக்குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்),

84. நகராட்சி நிருவாகமும் மாநகராட்சிகளின் செயல்திறன் பற்றிய குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்)

85. கோரிக்கை எண் 28 சமுதாய நல வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992-93. (தமிழ், ஆங்கிலம்)

86. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம். 1992-93, (தமிழ், ஆங்கிலம்).

87. பேரூராட்சிகள் நிர்வாகம் ஊரக வளர்ச்சித்துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1992-93. (தமிழ், ஆங்கிலம்)

88. கோரிக்கை எண். 26 — கைத்தறி மற்றும் துணிநூல் துறை பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1992-93. (தமிழ் ஆங்கிலம்).

89. கைத்தறி மற்றும் துணிநூல் பற்றிய சாதனைத் திட்டம், 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

90. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பதாவது அறிக்கை, 1991-92.

91. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை 1991-92.

92. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை, 1991-1992.

93. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை, 1991-92.

94. அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை 1991-92.



258 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

## கைத்தறி மற்றும் துணி நூல் துறைக்கான 1992-93 ஆம் ஆண்டிற்கான கொள்கையும் திட்டங்களும்.

முன்னுரை :

1.01. தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழிலே முக்கிய பங்கு வகிக்கிறது. அது மட்டுமின்றி மாநிலப் பொருளாதார முன்னேற்றத்தில் இத்தொழிலின் பங்கு கணிசமானதாகும். கைத்தறிக்கு முன்னிலை அளித்துள்ள தமிழ்நாடு அரசு இத்தொழிலின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் கைத்தறித் தொழிலின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பல வகை திட்டங்களை செயல்படுத்தி அதன் மூலம் ''கிராமப்புற வறுமையை ஒழிப்பதில்'' தனிக்கவனம் செலுத்தி வருகின்றன.

1.02. கைத்தறி தொழில் மற்ற கிராமத் தொழில்களைவிட குறைந்த மூலதனத்தில் அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடியதாகும். மேலும் கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு மக்கள் குடிபெயர்வதை தடுக்கவல்ல இத் தொழில், சுற்றுப்புற தூய்மைக்கு கேடு விளைவிக்காததாகும். கைத்தறித் தொழில் மற்றும் நெசவாளர்களின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு இந்த அரசு கைத்தறி தொழிலுக்கு மேலும் ஊக்கம் அளிக்க எண்ணியுள்ளது.

1.03. மூலப் பொருட்கள் ஒரு போதும் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது மட்டுமின்றி தேவையான அளவு நூல் ஒதுக்கீடு செய்யுமாறு மைய அரசு கோரப்பட்டுள்ளது.

1.04. நாட்டின் மிகப் பழமையான தொழிலான துணி நூல் தொழில் கடந்த ஆண்டுகளில் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்துள்ளது. இவ்வாண்டு பஞ்சு தட்டுப்பாடு மற்றும் விலை ஏற்றம் போன்றவை இருந்தாலும் இந்த ஆண்டில் இத்தொழிலின் நிலை திருப்தி அளிப்பதாக உள்ளது. பல இடர்ப்பாடுகளுக்கு உட்பட்டும், நூற்பாலைகள் முழுமையாக உற்பத்தி செய்து, நெசவாளர்களின் நூல் தேவையை பூர்த்தி செய்தன.

1.05. மாநிலத் துணித் தேவையை பூர்த்தி செய்வதில் விசைத்தறி தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. கைத்தறித் தொழில் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதால் நாட்டில் கூடுதல் துணி தேவைகளை விசைத்தறித் தொழில் ஈடு கட்டுகிறது. புதிய ஜவுளிக் கொள்கையின் மூலமாக சான்றிதழ் வழங்குதல் எளிதாக்கப்பட்டதாலும் விசைத்தறித் தொழில் தற்போது வளர்ச்சி பெற்றுள்ளது.

1.06. கைத்தறி நெசவாளர்களது சமுதாய மற்றும் பொருளாதார நிலையினை உயர்த்தும் பொருட்டு அரசு சுமார் 75,000 கைத்தறிகளை பத்து வருடங்களில் படிப்படியாக மாற்றியமைக்க ஒரு தகுந்த கால வரையிலான திட்டம் தயாரிக்க முடிவு எடுத்துள்ளது. இந்தத் திட்டம் செயலாக்கம் பெறும்போது, குறைந்த வருவாய் பெறும் 37,500 கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய வாழ்க்கை நிலையில் மேம்பாடு அடைவார்கள். இப்பெரிய திட்டம் கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. ஆரம்ப கட்டமாக செங்கை எம்.ஜி.ஆர்., திருச்சி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 500 நெசவாளர்களுக்கு 1,000 விசைத்தறிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது 1992-93 ஆம் ஆண்டு 2,500 நெசவாளர்களுக்கு 5,000 விசைத்தறிகள் வழங்கப்பட உள்ளன.

## 2.00. தறிகளைக் கூட்டுறவின்கீழ் கொணருதல் :

2.01. கைத்தறிகளை அதிக அளவில் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருதல் அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும். கூடுதலான தறிகளை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொணரும் பொருட்டும், அவர்கள் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பங்கு முதலீடு செய்யும் பொருட்டும் அவர்களுக்கு அரசு நிதி உதவியை கடன் வடிவில் வழங்குகின்றது, அதிகபட்சமாக பருத்தி தறிக்கு ரூ. 180-ம், பட்டு மற்றும் கம்பள தறிக்கு ரூ. 315-ம், பாலியஸ்டர் தறிக்கு ரூ. 900-ம் நிதியுதவியாக வழங்கப்படுகிறது. இக்கடன் தொகையானது மாநில மற்றும் மத்திய அரசால் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 1987 ஆம் வருட கைத்தறி கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில், 29-2-1992 தேதியில் 3.27 இலட்சம் தறிகள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் கொணரப்பட்டுள்ளன. இதன் மூலம் தேசியக் குறியீடான 60 விழுக்காட்டிற்கும் மேலாக நமது மாநிலத்தில் 77 விழுக்காட்டிற்கு உயர்ந்துள்ளது. பங்குத் தொகை கடனைத் தவிர விற்பனை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அரசு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவி அளிக்கிறது.

2.02. 29-2-1992 தேதியில் மாநிலத்தில் மொத்தம் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 1,473 ஆகும் 1991-92 ஆம் ஆண்டில் 12,000 நெசவாளர்களை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 15,128 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

## 3.00 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை அடிப்படையில் நடைமுறை மூலதனம் அளித்தல்.

3.01. அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றிற்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநில



தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாயிலாக தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியினால் வங்கி வட்டி விகிதத்திலிருந்து சலுகை அடிப்படையில் 9.8 விழுக்காடு வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனம் பெறுவதற்கு உதவி செய்யப்படுகிறது. தேசிய விவசாய மற்றும் கூட்டுறவு வங்கிகள், கிராமப்புற வளர்ச்சி வங்கியினால் அளிக்கப்படும் நிதி உதவியினை, சலுகை அடிப்படையில் வழங்குவதற்கு ஏதுவாக தமிழக அரசு, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி அளிக்கும் கடன் தொகைக்கு 1 சதவீத வட்டி உதவித் தொகையும், மத்திய கூட்டுறவு வங்கிகள் அளிக்கும் கடன் தொகைக்கு 3 சதவிகித மாறுபட்ட வட்டி விகிதத் தொகையும், மான்யமாக வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின் கோரிக்கைக்காக அரசு 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 350 இலட்சம் வழங்கியுள்ளது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றிற்கு 1991-92 ஆம் ஆண்டில் நடைமுறை மூலதனமாக ரூ. 222.08 கோடி நபார்டு நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

## 4.00. சங்கங்களுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடு செய்யும் திட்டம் :

4.01. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் நடைமுறை மூலதனம் வசூலாகாததினால் ஏற்படும் இழப்பில் 90 சதவீதம் அரசினால் ஈடு செய்யப்படுகிறது. எஞ்சிய 10 சதவீதம் சம்பந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் ஏற்கின்றன.

## 5.00 நூல் விநியோகம் :

5.01. தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு 4.27 இலட்சம் கைத்தறிகளுக்கு 187 இலட்சம் கிலோ கிராம் சிட்ட நூல் தேவைப்படுகிறது. கூட்டுறவு நூற்பாலைகளின் மூலம், ஆண்டொன்றுக்கு 80,000 பேல்கள் சிட்ட நூலினை 1,473 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. பொதுவாக மாநிலத்தில் சிட்ட நூலின் உற்பத்தி உபரியாக உள்ளது.

5.02. பருத்தி உற்பத்தி குறைவாக இருப்பதால், மத்திய அரசு 7 இலட்சம் பேல்கள் பருத்தியினை வெளிநாடுகளிலிருந்து இந்திய பருத்திக் கழகம் மூலமாக இறக்குமதி செய்து கைத்தறி நெசவாளர்களுக்கு சிட்ட நூல் வழங்க முடிவு செய்துள்ளது.

5.03. ''சட்ட பூர்வமான சிட்ட நூல் உற்பத்தியை தனியார் நூற்பாலைகள் செய்யும்படியான'' மத்திய அரசின் ''சிட்டநூல் உற்பத்தி ஒழுங்குமுறை திட்டத்தின்கீழ்'' பதுக்கலைத் தவிர்த்து சிட்ட நூலின் விலையை சீரான முறையில் நிர்ணயிக்கும் பொருட்டு இத்திட்டத்தின்கீழ் உள்ள உத்தரவுகளை நிறம்பட நிறைவேற்றும்படி மாவட்ட ஆட்சியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## 6.00. விற்பனை மேம்பாட்டு உதவி திட்டம் (தள்ளுபடி மான்ய திட்டம்) :

6.01. கூட்டுறவின்கீழ், வரும் நெசவாளர்கள் சங்கங்கள் மேற்கொள்ளும் கைத்தறி துணிகளின் விற்பனையின்மீது, வெவ் வேறு விகிதங்களில் தள்ளுபடி அளிக்கும் திட்டமும், அதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் கடந்த 37 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகின்றன. கைத்தறி துணி விற் பனைகட்கு தள்ளுபடி அளிக்கும் திட்டமானது பொதுமக்கள் கைத்தறி துணிகளை ஆர்வத்துடன் வாங்குவதற்கு உதவி வரு கிறது. இத் திட்டமானது இதர விசைத்தறி மற்றும் ஆலைத் துறைகளுடன் கூட்டுறவுத் துறையிலுள்ள சங்கங்கள் போட்டி யிட்டு விற்பனை செய்ய தேவையான பக்கபலத்தை தருகிறது. மேலும், தள்ளுபடி மூலம் ஊக்கம் அளிப்பதன் பயனாக விற்பனை அளவு பெருகவும், அதன் மூலம் நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெற்று அவர்களின் கூலி வருமானம் பெருகவும் வழி செய்கிறது.

6.02. கைத்தறி சங்கங்களுக்கும் கோ-ஆப்டெக்ஸ்க்கும் விற்பனை உதவி செய்யும் நோக்குடன், ஆண்டொன்றுக்கு, நூறு நாட்களுக்கு தள்ளுபடி வழங்கும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. வெளி மாநிலங்களில் உள்ள விற்பனை நிலையங்களில் அங்குள்ள சூழ்நிலையை பொறுத்து, தள்ளுபடி மான்யம் வழங்கும் நாட்களை நிர்ணயம் செய்ய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு, அரசு அனுமதி அளித்துள்ளது.

6.03. 31—3—1989 வரை கைத்தறி துணி விற்பனைமீது அளிக்கப்படும் தள்ளுபடி மான்ய செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் 50 : 50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டு வந்தன. 1—4—1989 முதல் மத்திய அரசு விற்பனை மேம்பாட்டு உதவி திட்டம் என்று அழைக்கப்படும் புதிய திட்டத்தை அறி முகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் 50 சதவிகிதம் மையஅரசிடம் இருந்து உதவியாககிடைக்கும். மேம்பாட்டு உதவித்திட்டத்தின்கீழ், ஓராண்டிற்கு பெறப்படும் உதவி தொகையானது அடிப்படைவருட மான 1988-89ஆம் ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங் கள் மற்றும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் பெற்ற/பெற வேண்டிய தள்ளுபடி மான்யம் மற்றும் அரசு பங்கு மூலதனம் (கூடுதலாக பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கம் பொருத்த வரை மேலாண்மை மான்யம்) இவற்றிற்கு சமமான தொகை யாகும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

6.04. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின்கீழ் உள்ள மான்யத்தினை செலவிடுவதில், தள்ளுபடி மான்யத்திற்கு 75 விழுக்காடும், எஞ்சிய 25 விழுக்காட்டை பலதரப்பட்ட மேம்பாட்டு யுக்திகளுக்கும் செலவிட்டு, கைத்தறி விற்பனையினை அதிகரிக்க வேண்டுமென்றும் மத்திய அரசு இத்திட்டத்திற்காக வழங்கியுள்ள பின்பற்றத்தக்க வழிமுறைகளில் தெரிவித்துள்ளது.



6.05. 1990-91 ஆம் ஆண்டிற்கு மைய அரசிடமிருந்து, இத் திட்டத்தின்கீழ் ரூ. 17.24 கோடி பெறப்பட்டுள்ளது. 1991-92-ல் ரூ. 15.70 கோடி பெறப்பட்டுள்ளது. மீதம் ரூ. 1.55 கோடி மைய அரசின் பங்கு நிலுவையில் உள்ளது. இருந்தபோதிலும் தமிழ்நாடு அரசு தள்ளுபடி மானயக் கோரிக்கைகளுக்காக 1991-92-ல் ரூ. 42 கோடி கொடுத்துள்ளது. 1992-93-ல் தள்ளுபடி மான்ய கோரிக்கைகளுக்காக ரூ. 42 கோடிக்கு, வழி வகை செய்யப்பட்டுள்ளது.

## 7.00. கைத்தறிகளை நவீனமயமாக்கும் திட்டம் :

7.01. கைத்தறித் துறையின்கீழ் கைத்தறியின் உற்பத்தி திறன் மற்றும் தரம் ஆகியவற்றை உயர்த்தும் நோக்குடன் நெசவாளர்களின் சோர்வை அகற்றவும் கூட்டுறவின்கீழ் இயங்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு தறி களை நவீனப்படுத்தும் திட்டம் 1980-81 முதல் அமுல்படுத்தப் பட்டு வருகின்றது. மத்திய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதியுதவி அளிக்கின்றன. இதில் 3-ல் 2 பகுதி கடனாகவும் 3-ல் 1 பகுதி மான்யமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது :

| | | ரூபாய் |
|---|---|---|
| 1. | சாதா தறிகள் வாங்க தறி ஒன்றுக்கு .. .. | 2,000 |
| 2. | ஜாக்கார்டு/தானியங்கி தறிகள் வாங்க தறி ஒன்றுக்கு | 4,000 |
| 3. | தறி உபகரணங்கள் வாங்க .. .. .. | 1,000 |

இத்திட்டத்தின் மூலம் இதுவரை 54,131 தறிகள் பயன் பெற்றுள்ளன.

7.02. தறிகள் மற்றும் தறி உபகரணங்களின் விலை ஏற் றத்தை கருத்தில் கொண்டு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவியினை அதிகப்படுத்தவும் ஏற்றுமதி இரகங்கள் தயாரிக்கக் கூடிய 110 அகல தறிகளுக்கும் புதியதாக நிதியுதவியினை வழங்கவும், மத்திய அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், ரூ. 42.30 கோடி செலவில் ஐந்து ஆண்டுகளில் 50,000 கைத்தறிகளை நவீனமயமாக்கும் ஒரு பெரிய திட்டத்தில் இறங்கியுள்ளது. இதற்காக 1991-92 ஆம் ஆண்டில் 2,000 கைத்தறிகளை நவீனமயமாக்குவதற்கு ரூ. 88.012 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1992-93-ல் 5,000 கைத்தறிகள் நவீனமாக்கப்படும்.

**8.00. ஜனதா துணி திட்டம் :**

8.01. ஜனதா துணி உற்பத்தி திட்டமானது கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து தொழில் கொடுக்கவும், கிராமப்புற மக்களுக்கு வாங்கத் தகுந்த விலையில் துணிகள் வழங்கவும், கைத்தறி துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, இத்திட்டத்தின்கீழ் கணிசமான தொகையினை மானியமாக வழங்குகிறது. 1991-92-ம் ஆண்டில் மட்டும் மத்திய அரசு ரூபாய் 12.22 கோடி ஜனதா துணி மான்யத் தொகை வழங்கியுள்ளது. ஜனதா துணிகள் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் தற்போது விற்பனை செய்யப்படுகிறது. பரிட்சார்த்தமாக தர்மபுரி மாவட்டத்தில் பொது விநியோக முறையில் ஜனதா துணிகள் விற்பனை செய்ய முயற்சி செய்யப்படும்.

8.02. ஜனதா ரக துணி உற்பத்தி பற்றி மறுபரிசிலனை தேவை என்பதால் '' தரமான மற்றும் நேர்த்தியான வேலைப்பாடும் திறமையும் தொழிலை நவீனப்படுத்துதல் திட்டத்துடன்' சேர்ந்து ஜனதா ரக உற்பத்தி செய்யும் நெசவாளர்களை உயர் ரக கைத்தறி துணிகளை உற்பத்தி செய்வித்து அதன் மூலம் நெசவாளர்கள் தங்கள் வருமானத்தை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ஒரு தகுந்த திட்டத்தை உருவாக்குகிறது.

**9.00. ஏற்றுமதியாளர்களுக்கு அரசு பரிசு வழங்கும் திட்டம் :**

9.01. தமிழக அரசு கைத்தறி துணி ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், தமிழகத்தில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை வெளிநாட்டுச் சந்தையில் அதிகரிக்கும் பொருட்டும் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு அரசு, பரிசு வழங்கும் திட்டத்தை 1975 முதல் செயல்படுத்தி வருகிறது.

9.02. இத்திட்டத்தின்கீழ் திறமையான ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்க வருடத்திற்கு ரூபாய் 22,500 வீதம் செலவிட அரசு உத்திரவிட்டுள்ளது.

**10.00. கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றுவது :**

10.01. கைத்தறி தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரும்பாலோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுடன் கிராம பொருளாதார முன்னேற்றத்திலும் முக்கிய பங்கேற்கிறது. மேலும் 10 இலட்சத்திற்கு மேலான மக்கள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் இத்தொழில் வாயிலாக பயனடைகிறார்கள். ஆனால் நெசவாளர்களில் ஒரு பகுதியினரே விலையுயர்ந்த ரகங்களை உற்பத்தி செய்வதன் மூலம் வருவாய் அதிகம் பெற்று, பொருளாதார உயர்வு பெற்றார்கள் என்றும், பெரும்பாலோர் குறைந்த மதிப்புள்ள துணிகள் நெய்வதில் ஈடுபட்டுள்ளவர்கள் என்றும் அதனால் குறைந்த மற்றும் சராசரி வருவாய் பெறுகிறார்



கள் என்றும் பல ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. இத்தொழிலின் நிலையற்ற தன்மையால் நெசவாளர்களின் வருவாய் ஈட்டும் திறன் வருடா வருடம் குறைந்து வருகிறது. எனவே, நெசவாளர்களின் வருவாய் ஈட்டும் திறனை அதிகரிக்கவும், அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படச் செய்யவும் ஏதுவாக கைத்தறி நெசவாளர்களை விசைத்தறி நெசவாளர்களாக மாற்றும் நோக்கத்தோடு 37,500 நெசவாளர்களுக்கு (ஒரு நெசவாளருக்கு இரண்டு தறிகள் வீதம்) 75,000 விசைத்தறிகளை அடுத்த பத்து ஆண்டு காலத்தில் நபார்டு நிறுவனத்தின் உதவியுடன் அமைத்துக் கொடுக்கும் வகையில் திட்டம் ஒன்றினை அரசு தீர்மானித்து உள்ளது. இந்த சீரிய திட்டத்தின் முதலாம் கட்ட நடவடிக்கையாக 500 நெசவாளர்களுக்கு 1,000 விசைத்தறிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 30 இட்சம் 1991-92 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் மற்றும் 2,500 நெசவாளர்களுக்கு உதவி பெறும் வகையில் 5,000 விசைத்தறிகள் வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**11.00. நலத் திட்டங்கள்.**

11.01. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம். கைத்தறி நெசவாளர்கள் நலனுக்காக தமிழக அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் பல சிறப்பு திட்டங்களில் இத்திட்டம் ஒன்றாகும். இத்திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளி பெறும் கூலியில் ரூபாய்க்கு 6 பைசா வீதம் செலுத்தவேண்டும்.

11.02. நெசவாளர் பெறும் ஊதியத்தில் ரூபாய்க்கு 6 பைசா வீதம் இந்த சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு கொடுக்கிறார். பெறும் ஊதியத்தில் ரூபாய்க்கு 3 பைசா வீதம் அரசும் கொடுக்கிறது. நிதியின் கூடுதல் தொகைக்கு அரசு மேலும் 7 சதவிகிதம் வட்டி அளிக்கிறது. நெசவாளரின் ஆயுள் காப்பு செய்யப்படுகிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு இந்த திட்டத்தின் கீழ் வரும் நெசவாளர்களுக்காக தவணைக் கட்டணத்தை கொடுக்கிறது. நெசவாளர் இறக்க நேரிட்டால், அவருடைய வாரிசுதாரர்கள் ரூபாய் 15,000 காப்பீட்டு நிதியாக பெறுவார்கள். அரசு இந்த காப்பீட்டு நிதியை ரூபாய் 10,000-லிருந்து அண்மையில் ரூபாய் 15,000 ஆக உயர்த்தியுள்ளது. மேலும், நெசவாளர் இறக்க நேரிட்டால், அவருடைய வாரிசுதாரர்கள் இறந்த நெசவாளரின் கணக்கில் உள்ள தொகையையும் பெறுவார்கள் 1991-92-ல் (1992 பிப்ரவரி மாதம் வரையில்) 1,27,187 நெசவாளர்கள் இந்த திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள்.

**12.00 குடும்ப ஓய்வூதிய திட்டம் :**

12.01. மாதம் ரூ. 250 வீதம் வாரிசுதாரர்கள் 10 ஆண்டுகள் பெறும்படி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம் இந்த அரசினால் உருவாக்கப்பட்டுள்ளது. அரசு, சேமிப்பு மற்றும்

பாதுகாப்புத் திட்டத்தில் உள்ள மொத்த தொகைக்கு மேலும் கூடுதலாக 5 சதவிகித வட்டி அளித்து இந்த ஒய்வூதியத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவுள்ள ஓய்வூதிய நிதியை ஏற் படுத்தியுள்ளது. நெசவாளர்கள் மாதத்திற்கு ரூ. 2 இந்த நிதிக்கு கொடுக்கிறார்கள். இந்த திட்டம் 1-1-1992க்குப் பிறகு ஏற்பட்ட இறப்புகளுக்குப் பொருந்தும்.

13.00 மத்திய சேம நல நிதித் திட்டம் :

13.01. இத்திட்டம் மைய அரசால் தொடங்கப்பட்டு அமுல் படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் மைய அரசு தனது பங்காக உதவி பெறும் நெசவாளர்கள் பெறும் கூலித் தொகையில் 3 சதவீதம், ஆனால் ஒருவருக்கு ஆண்டுக்கு வழங்கப் படும் உதவி ரூ. 90க்கு மிகாமல் ''சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின்'' உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவருகிறது. இத்தொகை உறுப்பினர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. 1991–92 ஆம் ஆண்டில் ரூ. 46,41,497 இத்திட்டத்தின்கீழ் செலவழிக்கப் பட்டுள்ளது.

13.02. 1992–93 முதல் மைய அரசு இந்த திட்டத்தை திருத்தியமைத்துள்ளது. மைய அரசின் கருத்துரு மாநில அரசின் பரிசீலனையின்கீழ் உள்ளது.

14.00. நெசவாளர் வீட்டு வசதி மற்றும் தொழிற்கூடத் திட்டம்:

14.01. நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்து வதற்கான வீட்டு வசதி மற்றும் தொழிற்கூடம் திட்டம் மற்றொரு நலவாழ்வு திட்டம். இந்த நலத் திட்டத்திற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. அதற்காக தேவையான நிதிவசதி களை கடந்த ஆண்டுகளில் செய்து கொடுத்துள்ளது. மொத்த மாக நிலங்கள் கிடைப்பதில் சிரமங்கள் உள்ளது. நெசவாளர் களுக்கு; தனித்த வீடுகள் கட்டும் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கும் செயற்குறிப்பு உள்ளது. நெசவாளர்கள் சொந்தமாக வீட்டு மனைகள் பெற்றிருந்தால் அவர்களும் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெறுவதற்கு உதவப்படும். மாநில அரசு ஒரு வீட்டிற்கு ரூ. 5,000 என்று மான்யம் இப்பொழுது வழங்குகிறது. மைய அரசு 1990–91 வரை ரூ. 2,500 என்று மான்யம் வழங்கியுள்ளது. இந்தஆண்டிலிருந்து திருத்திய திட்டத்தை மைய அரசு உருவாக்கி யுள்ளது. இந்த திருத்திய திட்டம் மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது.

14.02. 1991–92ல் ரூ. 2 கோடி செலவில் 2,000 வீடுகள் கட்டுவதற்காக கொடுக்கப்பட்டுள்ளது. 1992–93ல் 2,000 வீடுகள். கட்டுவதற்காக மேலும் ரூ. 2 கோடிக்கு நிதி நிலைக் கணக்கில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.



15.00. ''பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்:

15.01 1 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் மதிய உணவு
திட்டத்தின்கீழ் பயன்பெறும் பள்ளிச் சிறார்களுக்கு ஒரு செட்
இலவச சீருடை வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் 1985-86
முதல் துவங்கப்பட்டது. இத்திட்டம் கைத்தறி மற்றும் துணி
நூல் துறை, கல்வித் துறை மற்றும் சமூக நலத்துறை ஆகியவை
களின் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்காக
வழங்கப்படும் சீருடைத் துணிகளை கைத்தறி துறை வழங்கு
கின்றது. அளவு மற்றும் அதற்கான செலவினத்தைக் கணக்கிடும்
பணியை கல்வித் துறை ஏற்கின்றது. வழங்கப்படும் துணி ரகங்
களை சீருடையாக தைத்து வழங்கும் பணியை சமூக நலத்துறை
ஏற்று திட்டம் செயல்பட்டு வருகின்றது. துணிகள் வழங்கு
வதற்கு, பொறுப்பு அதிகாரியாக கைத்தறி மற்றும் துணிநூல்
இயக்குநர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். 1991-92 ஆம் ஆண்
டிற்கு 128.50 லட்சம் மீட்டர் துணி ரகங்கள் ரூ. 16.68 கோடி
மதிப்புக்கு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

16.00 டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல் வாழ்வு அறக்கட்டளை.

16.01 1986–ம் ஆண்டு ''கோ–ஆப்டெக்ஸ்'' பொன்
விழாக் கொண்டாட்டத்தின்போது, கைத்தறி நெசவாளர்
களின் நல்வாழ்விற்காக ''டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி
நெசவாளர்கள் நல்வாழ்வு அறக்கட்டளை'' ஒன்று அமைக்கப்
பட்டது.

கோ–ஆப்டெக்ஸ் மற்றும் இதர பிரதம நெசவாளர் கூட்
டுறவு சங்கங்கள் இந்த அறக்கட்டளையை நிறுவ பொதுநிதி
மற்றும் பொது நல நிதியிலிருந்து கணிசமான தொகையைக்
கொடுத்துதவியுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட தொகை கீழ்க்
கண்டவாறு சேமிப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.—

1. தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், சென்னை (கால இட்டு வைப்பு) — ரூ. 7.82 இலட்சம்.
2. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் சேமிப்பு கணக்கு — ரூ. 2.30 இலட்சம்

16.02 நெசவாளர்களின் குழந்தைகளுக்கு, மேற்படிப்
பிற்காக இந்த அறக்கட்டளை உதவித் தொகைகளை வழங்கு
கிறது. இத்திட்டத்தின்கீழ், மருத்துவம், பொறியியல், விஞ்
ஞானம், பட்டயக் கணக்கு மற்றும் பல வகையான கல்விக்
காக உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை, நெச
வாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களின் வாரிசுகள்
60 பேர் இத்திட்டத்தின்கீழ், பயன் அடைந்துள்ளனர்.

## 17.00 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் :

17.01 பல நெசவாளர்கள் சொந்தமாக தறியில்லாத காரணத்தால் கூலிக்காக வேலை செய்கிறார்கள். இவர்களது இந்த நிலையை மாற்ற அரசு தொழிலியல் நெசவாளர் கூட் டுறவு சங்கங்களை தொடங்கியது. இத்தகைய சங்கங்களில் தறி மற்றும் மூலப்பொருட்கள் நெசவாளர்களுக்கு வழங்கப் படுகிறது. தமிழ்நாட்டில் 190 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. (29–2–1992–ல்) இவற்றில் 29 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தனியாக ஆதி திராவிடர்களுக்காகவும்;, 11 சங்கங்கள் பெண்களுக்காக வும் ஏற்படுத்தப்பட்டவையாகும்.

## 18.00 'நொராட்'' திட்டத்தின்கீழ், தொழிலியல் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்.

18.01 கிராமப்புறங்களிலுள்ள மகளிருக்கு வேலை வாய்ப்பு அதிக பட்சமாக வழங்க மாநில அரசின் கொள்கைப் படி 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், மக ளிர்க்கென்றே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழக ''நொராட்'' திட்டத்தின்கீழ் மான்யமாக கீழ்க்கண்டவாறு நிதியுதவி பெறப்பட்டு இத் திட்டத்தினை செயல்படுத்தப்பட்டு வருகின் றது.

| | ரூ. |
|---|---|
| (1) நிலம் கொள்முதல் செய்ய | 50,000 |
| (2) கட்டிடம் கட்ட | 5,50,000 |
| (3) தறி மற்றும் உபகரணங்கள் வாங்க | 2.50,000 |
| (4) பயிற்சி | 1,50,000 |
| மொத்தம் | 10,00.000 |

29–2–1992 முடிய இந்த தொழிலியல் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் 977 பெண் நெசவாளிகளாக சேர்க் கப்பட்டுள்ளனர்.

## 19.00 ''பட்டு நெசவுத் தொழில்'' :

19.01 தமிழகம் பட்டு உற்பத்திக்கு மிகவும் புகழ் பெற்ற மாநிலமாகும். அதிலும் குறிப்பாக காஞ்சிபுரம், கும்ப கோணம், சேலம் போன்ற நகரங்களில் உற்பத்தி செய்யப் படும் பட்டு இரகங்கள் நமது நாட்டிலேயே வியாபார ரீதியில்



<தலையாய இடத்தை வகிக்கின்றன. 1990–91–ம் ஆண்டில் புதிதாக துவக்கப்பட்ட பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங் கங்களுக்கு 29–2–1992 வரையில் ரூ. 1.78 இலட்சம் மான்யம் மற்றும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

| 1991–92–ல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உற்பத்தி. | மதிப்பு. இலட்சத் தில். | 1991–92ல் மொத்த விற்பனை. | மதிப்பு, |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 22.05 இலட்சம் மீட்டர். | ரூபாய் 7425.59 | 25.33 இலட்சம் | ரூபாய் 9881.70 |

19.02. 1991–92 ஆம் ஆண்டில் இருந்த கச்சாப் பட்டின் அதிக விலையும் மற்றும் கச்சாப் பட்டின் உற்பத்தி வீழ்ச்சியும், கைத்தறித் தொழிலை பாதிக்கும் நிலை ஏற்பட்டதன் காரண மாக இந்த அரசு மைய அரசினை கேட்டுக்கொண்டவாறு கச்சாப் பட்டு விலை ஏற்றத்தை தடுக்க 200 மெட்ரிக் டன் சீனப் பட்டு இறக்குமதி செய்ய உள்ளதாக மைய அரசு அறிவித் துள்ளது இது பட்டு உற்பத்திக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

## 20.00 குடியாத்தத்தில் ஏற்றுமதி ரக உற்பத்தி ஒருங்கிணைப்புத் திட்டம்.

20.01. குடியாத்தம் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் லுங்கி இரகங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சட்டப் பேரவையில் அறிவித்தபடி, இப் பகுதியிலுள்ள 23 நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஒருங்கிணைத்து செயல்பட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தறிவாரி உற்பத்தியினை அதிகரித்து நல்ல ஏற்றுமதி ரக உற்பத்தியை பெருக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

20.02. மேற்படி திட்டத்தினை செயல்படுத்தும் முகமாக மேற்படி சங்கங்களுக்கு ஆறு மாதங்களுக்குத் தேவையான தரமான நூல், கூட்டுறவு நூற்பாலைகளிடமிருந்து பெற்று வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவையான நடை முறை மூலதனம், வடஆற்காடு மாவட்டக் கூட்டுறவு வங்கி வழங்கியுள்ளது. ஏற்றுமதி ரக உற்பத்திக்கு ஏற்றவகையில் சாயம் தோய்த்தலை தரமாக்குவதுபற்றி ''சித்ரா'' நிறுவனம் ஒரு ஆய்வு நடத்தியுள்ளது. மேலும் தேசிய கைத்தறி அபிவிருத்திக் கழகம் சாயப் பொருட்களை நவீன முறையில் உபயோகிப்பது குறித்து ஒரு ஆய்வு நடத்த உள்ளது.

20.03. தறியின் சராசரி உற்பத்தியினை அதிகரிப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சியின் விளைவாக நாளொன் றுக்கு 1.03 மீட்டர்கள் செய்யப்பட்ட உற்பத்தி, தற்போது 2 மீட்டராக உயர்ந்துள்ளது. இதனால் நெசவாளர்கள் பெறும் ஊதியமும் கணிசமாக உயர்ந்துள்ளது.

## 21.00 இலவச வேட்டி சேலை, வழங்கும் திட்டம்.

21.01. தமிழக அரசு இந்தாண்டு பண்டிகையை முன்னிட்டு ஒரு கோடியே இருபது லட்சம் நிலமற்ற விவசாயிகள் மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்க உத்தரவு பிறப்பித்து 60 இலட்சம் வேட்டிகள் மற்றும் 60 இலட்சம் சேலைகள் தேவையென நிர்ணயம் செய்யப்பட்டது. இவற்றின் மதிப்பு ரூ. 42 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது.

இது நெசவாளர்களுக்கு வருடம் முழுவதும் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும். நெசவாளர் சங்கங்கள் தங்களுடைய இருப்பினை விற்பனை செய்ய உதவும்.

## 22.00 காஞ்சிபுரம் மற்றும் ஈரோட்டில் கைத்தறி விற்பனைக் கூடங்கள் கட்டுதல்.

22.01. பட்டு மற்றும் பருத்தி ஆடைகளை விற்பனை செய்வதற்காக முறையே காஞ்சிபுரம் மற்றும் ஈரோட்டில் இரு விற்பனைக் கூடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக் கூடங்களில் பல பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும். தமிழ்நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களில் உற்பத்தியாகும் கைத்தறி இரகங்கள் அனைத்தும் இங்ஙனம் ஒரே இடத்தில் விற்பனை செய்யப்படுவதால் பலதரப்பட்ட நுகர்வோரின் தேவைகளை ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய இயலும். இக் கூடங்களில், விற்பனைக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும். 1992--93 ஆம் ஆண்டிற்கு இதற்கான ஆரம்ப கட்ட பணிகளை துவக்குவதற்காக ரூ. 22.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 23.00 பர்கூரில் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலை அமைத்தல் :

23.01. தர்மபுரி மாவட்டம், பர்கூரில் பெண்களுக்கெனத் தனியே, பருத்தி உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நூற்பாலை ரூபாய் 22 கோடி செலவில் தேசியக் கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் (தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் IV—உலக வங்கி சேமிப்புத் திட்டம்) நிதி உதவியுடன் அமைக்க, செப்டம்பர் திங்கள் 1991 ஆம் ஆண்டு, ஒரு செயற்குறிப்பு அரசால் பெறப் பட்டது.

23.02 1992-93 பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் ரூபாய் 50 இலட்சம் இத் திட்டத்திற்கென, ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி தாலுகா, கொண்டப்பநாயக்கன்பள்ளி கிராமத்தில், 10.5 ஹெக்டேர் நிலம் இந் நூற்பாலை அமைப்பதற்கென, தேர்வு செய்யப்பட்டுள்ளது.



## 24.00 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் :

24.01. கைத்தறித் தொழிலை பொதுவாக மேம்படுத்தவும் கூட்டுறவில் அல்லாத கைத்தறி நெசவாளர்களுக்கு உதவுவதற்கும் அவர்கள் வளர்ச்சிக்குத் துணைபுரியும் பொருட்டும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது. இக் கழகத்தின் தற்போதைய பங்கு மூலதனம் ரூ. 4,07.02 இலட்சம் ஆகும். அதில் அரசின் பங்கு ரூ. 2,67 இலட்சம் ஆகும். தற்போது இக் கழகத்தில் 10,800 கைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 1991-92 ஆம் ஆண்டில் கடன் வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ. 450 இலட்சத்தில், மேற்படி கழகம் ரூ. 294.82 இலட்சங்கள் (29-2-1992 வரை) கடனாக தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு ஒப்பளித்துள்ளது. இதில் பிப்ரவரித் திங்கள் 1992 முடிய ரூ. 275.49 இலட்சம் கடன் வழங்கியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இக்கழகம் ஈட்டி யுள்ள லாபம் கீழே அளிக்கப்பட்டுள்ளது:—

| வருடம். | லாபம். (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1989-90 .. .. | 5.83 |
| 1990-91 .. .. | 2.42 |
| பிப்ரவரி 1992 வரையில் .. | 6.00 |

1992-93-ல் இக்கழகம் ரூ. 450 இலட்சம் கடனாக வழங்க உத்தேசித்துள்ளது.

## 25.00 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிட்.

25.01 "கோ-ஆப்டெக்ஸ்" என பொதுவாக அழைக்கப் படும் "தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்" அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தலைமை சங்கம் ஆகும். அதில் தமிழகத்திலுள்ள அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அங்கம் வகிக்கின்றன. இச் சங்கமானது 1935 ஆம் ஆண்டு துவக்க பட்டது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவை யான மூலப்பொருட்களை கொள்முதல் செய்து விநியோகிப்பது டன் அவைகள் உற்பத்தி செய்யும் பெரும்பாலான கைத்தறி துணிகளை விற்பனை செய்கிறது.

25.02. தமிழகத்தில் உள்ள 279 விற்பனை நிலையங்கள் மூலமாகவும், வெளி மாநிலங்களில் உள்ள 178 விற்பனை நிலையங்கள் மூலமாகவும், கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி துணிகளை

விற்பனை செய்கின்றது. கடந்த மூன்றாண்டு காலங்களில் கோ-ஆப்டெக்ஸ் செய்துள்ள கொள்முதல் மற்றும் விற்பனை விபரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு. | | | கொள்முதல். | விற்பனை. |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் கோடியில்.) | |
| 1989-90 | .. | .. | 103.60 | 184. 9 |
| 1990-91 | .. | .. | 111.30 | 137.72 |
| 1991-92 (ஜனவரி முடிய தற்காலிகம்.) | | | 96.71 | 156.00 |

25.03 1991-92 ஆம் ஆண்டில் மகாராணி பட்டு மாளிகை என்ற பெயரில் கோவையிலும், தங்கம் பட்டுமாளிகை என்ற பெயரில் சேலத்திலும், இரு பெரிய பட்டு வகைக்கென்றே தனி விற்பனைக்கூடங்கள் துவக்கப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் ''மங்கை '' என்ற பெயரில் கடலூரிலும், பட்டு விற்பனைக் கூடம் துவங்கப்பட்டுள்ளது.

25.04 ஜனவரி 1992 திங்கள் முடிய ரூ. 35 கோடிக்கு கோ-ஆப்டெக்ஸ் பட்டு விற்பனை செய்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் 29 விற்பனைக் கூடங்களை ரூ. 157.75 இலட்சம் செலவில் 1991-92-ல் நவீனமாக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. கோ-ஆப்டெக்ஸ் புதிதாக திருத்தணி, ஈரோடு, குவாலியர் பம்பாயில் '' வாஷி '' மற்றும் அகமதபாத்தில் '' சபர்மதி '' என்னும் விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன.

26.00 '' தீவிர கைத்தறி வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி உற்பத்தி திட்டங்கள் :

26.01 பெரிய அளவிலான தீவிர மற்றும் ஏற்றுமதி கைத்தறித் திட்டங்கள் நெசவாளர்களுக்குப் பல வகைகளில் பயன்படும் விதத்தில் தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட ஆறு இடங்களில் செயல்பட்டு வருகின்றன :—

(i) காஞ்சிபுரம்.

(ii) ஈரோடு.

(iii) சேலம்.

(iv) மதுரை.

(v) கரூர்.

(vi) குறிஞ்சிபாடி.

அவைகளில் கடைசி இரண்டு திட்டங்கள் ஏற்றுமதியை முனைப்படுத்துவதாகும். மேற்கண்ட ஆறு திட்டங்களும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். இத்திட்டங்களால் மொத்தம் 16,297 நெசவாளர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.



26.02. காஞ்சிபுரம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம் தனது வழக்கமான உற்பத்தியுடன், நெசவாளர்கள் சேவா மையத்துடன் இணைந்து வெவ்வேறு உற்பத்தி திட்டத்தினை செயல்படுத்துவதுடன் தற்போது வேகமாக விற்பனை ஆகக்கூடிய கலாசேத்ரா வடிவமைப்பில் காஞ்சி காட்டன் சேலைகளை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தி வருகிறது. அது மட்டுமல்லாமல் சேலம் மற்றும் ஈரோடு திட்டங்கள் அதிகமாக விற்பனையாகக் கூடிய வங்காள வகை சேலைகளை உற்பத்தி செய்து வருகின்றன. மந்தமாக விற்பனையாகக் கூடிய மலிவு விலை காட்டன் வகைகளை உற்பத்தி செய்வதை விட்டு விடுவதற்கு உதவியாக குறிஞ்சிப்பாடி மற்றும் சேலம் திட்டங்களில் மலிவு விலை பட்டு சேலைகள் தயாரிப்பதில் முன்னோடியாக செயல்பட்டு வருகின்றன.

26.03. நிலையான வாய்ப்பினை ஏற்றுமதி விற்பனையில் அதிகரிக்கும் வகையில் பாணிப்பட் பகுதியில் கண்கவர் வண்ண வடிவமைப்பில் ஏற்றுமதி விற்பனையில் புகழ்பெற்று விளங்கும் படுக்கை விரிப்புகள்மற்றும் திரைச்சீலைகளை உற்பத்தி செய்வதில் ஈரோடு திட்டம் தனிக்கவனம் செலுத்தி வருகின்றது. மதுரை கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித்திட்டம் ஏற்றுமதிக்கென உயர்வகை ரகங்களைத் தொடர்ந்து உற்பத்தி செய்து வருகிறது. குறிஞ்சிப்பாடி கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி உற்பத்தித்திட்டம் குறுகிய அளவில் குறைந்த மூலதனத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விற்பனைக்கென தற்போது ஆடைகள் உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தி வருகின்றது.

26.04. ஆறு திட்டங்களின் செயல் திறன் கீழ்வருமாறு :—

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | தறிகளின் எண்ணிக்கை. பிப்ரவரி 1992. | உற்பத்தி. | | விற்பனை. | |
|---|---|---|---|---|---|
| | | மீட்டர். | மதிப்பு. | மீட்டர். | மதிப்பு. |
| | | | (லட்சத்தில்) | | (லட்சத்தில்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. காஞ்சிபுரம் | 4,555 | 11.99 | 162.32 | 13.53 | 189.12 |
| 2. ஈரோடு | 1,439 | 10.49 | 212.16 | 12.25 | 253.13 |
| 3. சேலம் | 4,474 | 12.00 | 145.42 | 14.05 | 166.18 |
| 4. மதுரை | 3,044 | 14.32 | 181.53 | 18.76 | 232.76 |
| 5. கரூர் | 1,261 | 4.13 | 91.24 | 6.29 | 109.78 |
| 6. குறிஞ்சிப்பாடி | 1,524 | 5.52 | 115.78 | 5.75 | 141.17 |
| மொத்தம் .. | 16,297 | 58.45 | 911.45 | 70.63 | 1,092.14 |

**27.00. தமிழ்நாடு ஜரிகை லிமிடெட், காஞ்சிபுரம் :**

27.01. தமிழ்நாடு ஜரிகை நிறுவனம், காஞ்சிபுரம், பொது நிறுவன கம்பெனியாக 6–12–1971-ல் பதிவு செய்யப்பட்டது. இந்த தமிழ்நாடு ஜரிகை நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள், பட்டு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு தரமான ஜரிகை உற்பத்தி செய்து விநியோகிப்பதும், நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதும் ஆகும். இந்நிறுவனம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தேவையில் 10 விழுக்காடு பூர்த்தி செய்கிறது. இந் நிறுவனம் தனது விரிவாக்கத் திட்டப்பணியை எடுத்து வருகிறது. இதன் மூலம் உற்பத்தித் திறன் 40 விழுக்காடு அதிகரிக்கும்.

27.02. தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் 1991–92-ம் ஆண்டில் (பிப்ரவரி 1992 வரை) உற்பத்தி செய்த ஜரிகையின் அளவு 17,818 மார்க்குகள். விற்பனை செய்த அளவு முந்தைய ஆண்டு இருப்பையும் சேர்த்து 18,144 மார்க்குகள். இதன் மதிப்பு ரூபாய் 440.51 இலட்சம் ஆகும். இதன் மூலம் கிடைத்த இலாபம் ரூபாய் 9.84 இலட்சம் ஆகும். இந்த நிறுவனம், 1992–93 ஆம் ஆண்டில் 22,600 மார்க்குகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**28.00. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு :**

28.01. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை கூட்டுறவு அமைப்பின்கீழ் ஈரோட்டில் நிறுவப் பட்டது. இந்த ஆலை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங் கள், விசைத்தறி நெசவாளர்கள், தனியார் நெசவாளர்கள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் (உதாரணம்) காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு துணிநூல் கழகம், தேசிய துணிநூல் கழகம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் போன்ற நிறு வனங்களுக்கு நூல் சாயமிடல் மற்றும் துணிநூல் பதனிடுதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றது.

28.02. இவ்வாலை வெளுத்தல், சாயமிடுதல், அச்சிடுதல் மற்றும் நூல் சாயமிடுதல் போன்ற பல்வேறு பதனிடும் வேலை களை செய்து வருகிறது. இந்த ஆலை புதிய தொழில்நுட்ப கருவிகளைக் கொண்டு இயங்குகின்றது. இந்த ஆலையுடன் சோதனைச் சாலையும் இணைந்துள்ளது. இந்த ஆலையில் 317 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

28.03. சென்னிமலை, ஈரோடு, சேலம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய ஏழு இடங்களில் உள்ள நவீன சாயச் சாலைகளின் பணிகளை மேலே கூறப்பட்ட ஆலை கவனித்து வருகின்றது.

**29.00. தமிழ்நாட்டிலுள்ள துணிநூற்பு ஆலைகளின் செயல்பாடுகள்:**

29.01. தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்குத் துணி நூல் உற்பத்தித் துறை ஒரு முன்னோடியாக விளங்குகின்றது. துணிநூல் தயாரிப்பதுதான் ஜவுளித் துறையின் இன்றியமையாத செயலாகும். நமது பாரத தேசத்திலுள்ள மொத்த 1,051 நூற்பு



ஆலைகளில், தமிழ்நாட்டில் மட்டும் 451 ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 7.6 மில்லியன் கதிர்களுடன் இவ் வாலைகள் செயல்பட்டு வருகின்றன. இது நம் நாட்டிலுள்ள மொத்த கதிர்களின் எண்ணிக்கையில் 28 விழுக்காடு ஆகும். தமிழகத்தில் 2.2 இலட்சம் தொழிலாளர்கள் நூற்பாலைகளில் பணிபுரிகின்றனர்.

**30.00. கூட்டுறவு நூற்பு ஆலைகள் :**

30.01. பொதுவாக தமிழகத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் மற்றும் குறிப்பாக கூட்டுறவு நிழலில் இருக்கும் நெசவாளர் களுக்கும் பேருதவி செய்கின்ற வகையில் தரமான நல்ல சிட்ட நூலை தயாரிப்பதற்காக 1958-ல் இருந்து 1984 வரை 18 கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவப்பட்டன. இக்கூட்டுறவு நூற் பாலைகளில் 4.69 இலட்சம் கதிர்கள் இயங்கி வருகின்றன. இக்கூட்டுறவு நூற்பாலைகளில் ஏறக்குறைய 28.62 இலட்சம் கிலோ நூலை மாதம் ஒன்றுக்கு சிட்ட நூலாகவும் கோன் நூலாக வும் உற்பத்தி செய்து வருகின்றன. தமிழகத்திலுள்ள 18 கூட் டுறவு நூற்பு ஆலைகளில் ஏறக்குறைய 12,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

30.02. 1991-92—ஆம் ஆண்டு (பிப்ரவரி 1992 முடிய) கூட் டுறவு நூற்பு ஆலைகளில் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் பின் வருமாறு :—

1991-92 ஆம் ஆண்டில் சராசரி இயந்திர உபயோகிப்புத் திறன் 82.97 விழுக்காடு ஆகும். சராசரி கதிர் உற்பத்தி 73.81 கிராம் ஆகும். இக்கூட்டுறவு ஆலைகளில் ஏறக்குறைய 280.55 இலட்சம் கிலோ கிராம் நூலை ஒரு ஆண்டுக்கு உற்பத்தி செய்து வருகின்றது.

இந்நூற்பு ஆலைகளில் மொத்த உற்பத்தி மதிப்பு ரூபாய் 164.09 கோடி ஆகும். ஆண்டு விற்பனை மதிப்பு ரூபாய் 164.52 கோடி ஆகும்.

30.03. எதிர்பாராத மற்றும் தொடர்ந்த பருத்தி விலை ஏற்றத்தின் காரணமாகவும், மந்தமான நூல் உற்பத்தி காரண மாகவும், 1991-92 ஆம் ஆண்டு மொத்த நூற்பு ஆலைகளில் சுமார் 16.72 கோடி நிகர நட்டம் அடைந்தது. ஆலைகளின் மொத்த குவிந்துள்ள நட்டம் ( Accumulated loss ) ரூபாய் 64.19 கோடி இருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**30.04. கூட்டுறவு நூற்பு ஆலைகளை நவீன மயமாக்குதல் :**

1958-ல் இருந்து 1963 வரை நிறுவப்பட்ட 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளின் இயந்திரங்கள் பழுதுபட்டும், தேய்மானம் அடைந்தும் உள்ளன. ஆகவே ஆலைகளில் தரமான நூல் உற் பத்தியை பெருக்குவதற்கு இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின்

உதவியுடன் ரூபாய் 25 கோடி அளவில் நவீனமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. கோவையில் உள்ள தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சி கழகத்தினுடைய ஆலோசனையுடன் இக் கூட்டுறவு நூற்பாலைகளின் பிரேரணைகளை தயாரித்து ''ஜவுளி ஆலைகள் நவீனப்படுத்தும் நிதி'' திட்டத்தின் கீழ் உதவிபெற, இந்திய தொழில் வளர்ச்சி வங்கிக்கு ஏற்கனவே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு கூட்டுறவு நூற்பு ஆலைகளை நவீனப்படுத்தவும், மற்றும் மறுவாழ்வு அளிக்கவும், ரூபாய் 7 கோடி வழங்கியுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளுடைய பழைய கடன்களை அடைக்கவும் மற்றும் புதிதாக பங்கு மூலதனத்தை வலுப்படுத்தவும் நிதி நிறுவனங்களின் மூலம் இந்த நிதியை உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. 1958 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு முடிய நிறுவப்பட்ட 18 கூட்டுறவு நூற்பு ஆலைகளில் 12 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நவீனமயமாக்கும் திட்டம் தற்பொழுது செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 31.00 மூடப்பட்ட நூற்பலைகள் மீண்டும் திறந்து நடத்தல் :

31.01 தமிழக அரசு மூடப்பட்ட நூற்பாலைகள் அனைத்தையும் மீண்டும் திறந்து நடத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. அதற்காக, பல்வேறு சலுகைகளை தமிழக அரசு அளித்து வந்தபோதிலும், இன்னும் சில நூற்பாலைகள் தொழிலாளர் பிரச்சினைகள், நிதி நெருக்கடி, நிர்வாகத் திறமை குறைவு போன்ற பல்வேறு காரணங்களினால் மூடப்பட்டு உள்ளன. தற்போது உள்ள நலிவுற்ற நூற்பாலைகள், எதிர்காலத்தில் வலுவான நிலையில் இயங்கும் எனும் அடிப்படையிலும் மற்றும் அத்தகைய நூற்பாலை நிர்வாகங்கள் ஆலையை மீண்டும் திறந்து நடத்த முன்வரும் நிலையில் தமிழக அரசு (அ) மின்வெட்டிலிருந்து விலக்கு, (ஆ) விற்பனை வரிசெலுத்துவதை தள்ளி வைத்தல் போன்ற சலுகைகளை அளித்து வருகிறது.

31.02 பின்வரும் நூற்பலைகள், தமிழ்நாடு துயர்துடைப்பு சட்டம், 1969 (சிறப்பு விதிகள்)-ன் கீழ், நிவாரணம் பெறும் நிறுவனமாக' அறிவிக்கப்பட்டுள்ளன.

1. லட்சுமி ஷண்முகா நூற்பாலை, புதுக்கோட்டை.
2. மகாலட்சுமி நூற்பாலை லிமிடெட், மதுரை.
3. மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், மேட்டூர்.
4. ருக்மணி மில்ஸ் லிமிடெட், சிலைமான்.

31.03. தமிழ்நாட்டிலுள்ள 15 நூற்பாலைகளுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு மற்றும் விற்பனை வரித் தொகை செலுத்துவதை மூன்று ஆண்டுகளுக்கு தள்ளி வைத்தல் ஆகிய சலுகைகளை ஏற்கனவே தமிழக அரசு வழங்கி வருகிறது.



31.04. தமிழக அரசும், ஆலை உரிமையாளர்களும் செய்து கொண்ட ஐந்தாண்டு உடன்படிக்கையின் விளைவாக பின்வரும் தனியார் நூற்பு ஆலைகள் கூட்டு நிர்வாகத்தின் அடிப்படையில் மீண்டும் திறக்கப்பட்டன.

### மகாலட்சுமி நூற்பாலை, மதுரை :

மகாலட்சுமி நூற்பு ஆலையில் அனைத்து தொழிலாளர்களுக்கும், வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு ஆலை திருப்திகரமாக இயங்கி வருகின்றது.

### மேட்டூர் துணிநூல் தொழிற்சாலை நிறுவனம், மேட்டூர் அணை :

1985 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்ட மேட்டூர் நூற்பு ஆலை மீண்டும் திறக்கப்பட்டு நூற்பாலை பிரிவு இயங்கி வருகின்றது. தற்போது நெசவு மற்றும் பதப்படுத்தும் பிரிவுகள் மீண்டும் இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாலையில் 2,427 தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

31.05 1991 தீபாவளித் திருநாளில் மேட்டூர் ஆலைத் தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு அறிவிப்பின் பேரில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தலா ரூ. 400 அளிக்கப்பட்டது.

## 32.00 பின்னலாடைத் தொழில் :

32.01 கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பூர். நகரம் பின்னலாடைத் தொழிலில் புகழ்பெற்று விளங்குகின்றது. பின்னலாடைப் பொருட்கள் ஏற்றுமதியின் மூலம் இக்குறிப்பிட்ட தொழிற்சாலை ரூ. 700 கோடிக்கு மேல் நமது நாட்டிற்கு அன்னிய செலவாணியை ஈட்டி வருகின்றது. இத்தொழில் அநேகமாக சிறுதொழில் பிரிவாக இயங்கி வருகின்றது. சுமார் 2,300 சிறிய நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற் கூடங்களைக் கொண்டு சுமார் நான்கு இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றது. நம் நாட்டில் உற்பத்தியாகும் மொத்த பருத்தி பின்னல் ஆடை ஏற்றுமதியில் திருப்பூர் பகுதி மட்டும் 90 விழுக்காட்டிற்கு தன் பங்கை ஈட்டி வருகின்றது. திருப்பூர் நகரத்திற்காக மின்சாரம், வடிகால் வசதி, குடிதண்ணீர் மற்றும் தொலைத்தொடர்பு போன்ற அடிப்படை வசதிகளை செய்துதர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

## 33.00 விசைத்தறிகள் :

33.01. தமிழ்நாட்டின் மொத்த துணி உற்பத்தியில் 70 விழுக்காடு விசைத் தறிகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, விசைத் தறிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இன்றைய தேதியில் நமது மாநிலத்தில் 2,17,396 பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள்

இயங்கி வருகின்றன. விசைத்தறிகளைப் பதிவு செய்வதற்காக வாங்கப்படும் பதிவு கட்டணத்தை விசைத்தறி சேவை மையங்களை தொடங்குதல், உற்பத்தியின் தரத்தை உயர்த்துதல், புதிய வடிவங்களை உருவாக்குதல், விசைத்தறி நவீனமாக்குவதில் பயிற்சியளித்தல் ஆகியவற்றிற்காக செலவிட உத்தேசித்து மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

## 34.00 தமிழ்நாடு துணிநூல் கழகம் :

34.01. தமிழ்நாடு துணிநூல் கழகம், 1969 ல் தோற்றுவிக்கப்பட்டது. இக்கழகம் நலிவுற்ற நூற்பாலைகளை நிர்வகித்தல், விசைத்தறிக் கூடங்கள் அமைத்தல் அனைத்து கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் அரசால் ஏற்கப்பட்ட நூற்பாலைகளுக்கும் தொழில் நுட்ப உதவி அளித்தல், விசைத்தறி ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட விசைத்தறி துணிகளை விற்பனை செய்தல் ஆகிய நோக்கங்களை பூர்த்தி செய்து வருகிறது. தமிழ்நாடு துணிநூல் கழகம், அருப்புக்கோட்டை, சிவகிரி, ஜெயம்கொண்டம் ஆகிய மூன்று இடங்களில் சொந்தமாக விசைத்தறிக் கூடங்களை நிறுவியுள்ளது. இக்கழகத்தில் மொத்தம் 638 நபர்கள் வேலை புரிந்து வருகின்றனர். முத்தானந்தலில் உள்ள சோமசுந்தரம் நூற்பாலை, தமிழ்நாடு துணிநூல் கழக நிர்வாகத்தின் கீழ், செயல்பட்டு வருகிறது.



34.02 தமிழ்நாடு துணிநூல் கழகத்தின் கடந்த மூன்று ஆண்டுகளின் செயல் திறன் பின் வருமாறு

தமிழ்நாடு துணிநூல் கழகத்தின் செயல்திறன்.

| | 1989-90 | 1990-91 | 1991-92 (பிப்ரவரி 1992 முடிய தற்காலிகமானது) |
|---|---|---|---|
| | [அளவு இலட்சத்தில்] | | |
| **1. விசைத்தறி கூடங்கள் :** | | | |
| துணிஉற்பத்தி | 32.20 | 29.01 | 28.57 |
| துணி கொள்முதல்/ மாற்றம் செய்தல் | 78.90 | 44.68 | 30.06 |
| துணி விற்பனை (மீட்டரில்) | 111.80 | 67.03 | 59.64 |
| மதிப்பு (ரூ. லட்சத்தில்) | 939.28 | 692.89 | 747.68 |
| 2. சோமசுந்தரம் நூற்பாலையின் நூல் உற்பத்தி (இலட்சம் கிலோவில்) | 6.92 | 6.93 | 5.78 |
| உற்பத்தி மதிப்பு (ரூ. லட்சத்தில்) | 282.00 | 310.22 | 280.25 |
| விற்பனை (ரூ. லட்சத்தில்) | 274.73 | 208.64 | 284.40 |
| மொத்த இலாபம்/நட்டம் | (—)70.80 | (+)9.37 | (—)28.57 |

## இணைப்பு

### கைத்தறி மற்றும் துணிநூல் துறை முன்னேற்றம் பற்றிய அறிக்கை.

| | 1987–88 | 1988–89 | 1989–90 | 1990–91 | 1991–92 (29-2-1992 வரை) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **1. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் :** | | | | | |
| 1. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை | 1,673 | 1,665 | 1,680 | 1,503 | 1,473 |
| 2. தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 3.97 | 2.58 | 2.85 | 3.25 | 3.27 |
| 3. உற்பத்தி (ரூபாய் கோடியில்) | 193.24 | 203.68 | 236.08 | 218.92 | 246.21 |
| 4. விற்பனை (ரூபாய் கோடியில்) | 209.15 | 216.00 | 270.05 | 246.65 | 287.72 |
| 5. நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்) | 97.69 | 102.26 | 115.00 | 110.45 | 132.08 |
| **2. கோ–ஆப்டெக்ஸ் :** | | | | | |
| 1. கொள்முதல் (ரூபாய் கோடியில்) | 63.15 | 71.50 | 103.60 | 111.30 | 96.71 |
| 2. விற்பனை (ரூபாய் கோடியில்) | 113.14 | 100.00 | 184.19 | 137.72 | 156.00 |
| 3. நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்) | 75.00 | 78.50 | 75.00 | 85.00 | 90.00 |
| **3. கூட்டுறவு நூற்பாலை :** | | | | | |
| 1. கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | 4.53 | 4.59 | 4.59 | 4.69 | 4.69 |
| 2. உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) | 10,955.10 | 13,507.37 | 14,891.00 | 16,163.53 | 16,408.34 |
| 3. விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 10,915.16 | 13,886.61 | 14,453.41 | 15,776.91 | 16,452.40 |
| 4. நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) | 2,285.00 | 2,285.00 | 2,395.00 | 2,488.00 | 2,777.50 |
| **4. தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை, ஈரோடு** | | | | | |
| 1. நூல் வெளுத்தலும், சாயமிடுதலும் (இலட்சம் மீட்டரில்) | 32.65 | 24.57 | 18.98 | 19.03 | 16.22 |
| **5. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் :** | | | | | |
| 1. கடன்களின் எண்ணிக்கை | 2,600 | 2,906 | 2,778 | 2,761 | 1,93[illegible] |
| 2. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | 400.63 | 360.68 | 386.05 | 354.72 | [illegible]4.82 |
| **6. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம்** | | | | | |
| 1. சரிகை உற்பத்தி (மார்க்குகளில்) | 14,499 | 8,408 | 14,494 | 16,002 | [illegible],816 |
| 2. விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | 368.71 | 170.04 | 318.09 | 341.62 | [illegible].51 |



164975

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Pethaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras